கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை



பக்கம் 07 ஒளியேற்றும் தீபங்களாக



பக்கம் 8-9 மரியன்னை ஆண்டு...



பக்கம் 11 தோல்வியைக் கண்டு...

ஞான ஒளி
ඥාන ඔලි
GNANA OLI
ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05




ஒளியாகிய இறைவன் நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் ஒளிவீசுவாராக...
தீபாவளி நல் வாழ்த்துக்கள்

03.11.2013 - (03 கார்த்திகை, 2013 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 04, கதிர் - 74 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : GO / GD / 53 / NEWS / 2013

# இறையடியார் தோமஸ் கர்தினால் குரே

## இறைபதம் அடைந்த 25ஆம் ஆண்டு நினைவு

### புனிதர்கள் எச்சூழலிலும் பிரமாணிக்கமாய் இருந்தார்கள்





இறையடியார் தோமஸ் கர்தினால் குரே ஆண்டகை இறைபதம் அடைந்ததன் 25ஆம் ஆண்டு பூர்த்தியான ஐப்பசி 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேவத்தையில் தற்போதைய கர்தினால் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஆயர்கள், குருக்கள், மற்றும் இறைமக்கள் ஒன்று சேர்ந்து கர்தினால் இறையடியார் தோமஸ் குரேயை திருச்சபைக்கு தந்தமைக்காக இறைவனுக்கு நன்றி கூறி கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

இறையடியார் தோமஸ் குரே ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்ட குருக்கள், இத்திருப்பலியில் கலந்து கொண்டது சிறப்பம்சமாக அமைந்தது. அவருடைய ஞாபகமாக தபால் உறை மற்றும் முத்திரையும் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வின் தொடர்பாக குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குப்பற்றிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டு இந்நினைவு நாள் நிகழ்ச்சிகள் இனிதே நிறைவுற்றது.

# கொழும்பு உயர் மறைமாவட்ட குருகுல ஒன்றுகூடல்

- ☆ கத்தோலிக்க திருமறையில் அழகையும் அதன் அர்த்தங்களையும் புரிந்துக்கொள்வதற்கான அழைப்பு
- ☆ கிறிஸ்தவ அடிப்படை வாத குழுக்களுக்கான பதிலடி
- ☆ மக்கள் மீது கரிசனையுடன் அவர்களின் இன்ப துன்பங்களை பகிர்ந்துகொள்ள குருக்களுக்கான அழைப்பு
- ☆ மரியாளின் ஆண்டும், அதன் செயல் திட்டங்களும், பேராயருடைய மேய்ப்புப் பணி மடலில் குறிப்பிட்டிருக்கும், நிகழ்ச்சிகளை துரித கதியில் இயக்குதல்
- ☆ சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான விடுமுறை களியாட்ட நிகழ்வுகள் [இதனூடாக திருவிவிலியம், திருமறை, கிறிஸ்தவ வாழ்வு பற்றிய விழுமியங்களை புகட்டுதல்.
- ☆ பங்கு குருக்கள் மற்றும் துறவற சபைகளுக்கிடையில் உறவும், பொது மேய்ப்புப் பணியில் அனைவரது பங்களிப்பும்.



- கடந்த மாதம் 21, 22ஆம் திகதிகளில் கொழும்பு உயர் மறைமாவட்ட குருகுல ஒன்று கூடல் பேராயர் மற்றும் துணை ஆயர்கள் தலைமையில் இடம்பெற்றது. 400உம் மேற்பட்ட குருக்கள் ஒன்று கூடி இருந்தனர் இதன்போது மறைமாவட்டத்தில் திருச்சபையில் மறுமலர்ச்சி மற்றும் அதை ஒட்டிய நிகழ்ச்சிகள் ஆராயப்பட்டன.

# தீபாவளி வாழ்த்துச் செய்தி

**மதங்களுக்கிடையேயான உரையாடலுக்கான திருச்சபையின் சார்பாக உங்களுக்கு எங்களது மகிழ்ச்சி நிறைந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்**



“அனைத்து வாழ்வுக்கும் மற்றும் ஒளியின் ஆதாரமாக இருக்கும் இறைவன் உங்கள் வாழ்வை ஒளிர்வித்து உங்கள் வாழ்வையும் மகிழ்வையும் ஆழப்படுத்துவராக” என்ற வாழ்த்தோடு தீபாவளி வாழ்த்துக்களை திருச்சபை தெரிவிக்கின்றது. உலக ஆயுதப் போக்குகளால் மனித குல உறவுகள் பாதிக்கப்பட்டுள்ள இன்றைய சூழலில் நட்புணர்வு மூலமும் ஒருமைப்பாட்டின் மூலமும் மனிதக் குலத்தின் பொது நலனுக்காக கிறிஸ்தவர்களும் இந்துக்களும் ஒன்றிணைந்து உழைக்க முடியும்.

மனிதர்களிடையே உருவாகும் உறவைச் சார்ந்தே உலகில் அமைதியை கட்டியெழுப்புதல் உண்மையான ஒருமைப்பாட்டையும் இணைக்க வாழ்வையும் கொணர்தல் முடியும் எனவும் தம் வாழ்த்துச் செய்தியில் வலியுறுத்துகின்றது. மதங்களிடையே உரையாடல் பணியை மேற்கொண்டுள்ள திருச்சபை.

நாம் அனைவரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இன உணர்வுகளையும் கலாச்சார மதம் மற்றும் கொள்கை வேறுபாடுகளையும் தாண்டியதாக நம் உறவுகள் இருக்க வேண்டும். உலகாயுதப் போக்குகளின் அதிகரிப்பால் ஆழமான ஆன்மீகம் மற்றும் மத மதிப்பீடுகளின் முக்கியத்துவம் இழக்கப்பட்டு வருகின்றது.

ஆகவே நல்லுறவுகள் மற்றும் ஒருமைப்பாட்டின் கலாச்சாரத்தைப் போற்றி ஊக்குவிக்க வேண்டும். முழு மனிதக் குல நன்மைக்கென மதங்களிடையே நல்லுறவுகள் பேணப்பட வேண்டும்.

***மீண்டும் மகிழ்ச்சி நிறைந்த இதயப் பூர்வமான தீபாவளி வாழ்த்துக்கள்***

# மறைக்கல்விப் பரீட்சை (09.11.2013)

**கொழும்பு உயர் மறைமாவட்ட அப்போஸ்தலிக்கப் பணியகம்**

2013 கார்த்திகை 9ம் திகதி மறைக்கல்விப் பரீட்சையானது அனைத்து மறைப்பாடசாலைகளிலும் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். தயவுசெய்து பங்குத்தந்தையர், பெற்றோர், மறைப்பணியாளர்கள் தமது மறைக்கல்விப் பிள்ளைகளை நேரகாலத்தோடு மறைப்பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**அருட்பணி. மனோகுமரன் நாகரட்ணம் அடிகள்**
**தமிழ்ப்பகுதி பொறுப்பு இயக்குனர்**

# மறையாசிரியர் தேர்வுகள் - 2013

**அருட்சகோதரி ரஞ்சி போல்துரை, தமிழ் பிரிவு - பரீட்சை, பொறுப்பாளர்**

தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும் மறையாசிரியர் தேர்வு, மறையாசிரியர் சிறப்புத் தேர்வு, மறையாசிரியர் கௌரவப் பட்டத்தேர்வு ஆகிய பரீட்சைகள் எதிர்வரும் 16.11.2013 சனிக்கிழமை நடைபெற உள்ளது. அன்றைய தினம் பரீட்சார்த்திகள் காலை 9 மணி தொடக்கம் பகல் 12 மணி வரை 1ம் வினாத்தாளுக்கும் பகல் 1 மணி தொடக்க மாலை 4. மணி வரை 2ஆம் வினாத்தாளுக்கும் விடையளிக்க வேண்டும்.

இலங்கையின் அனைத்து (12) மறைமாவட்டங்களிலுமுள்ள 42 பரீட்சை நிலையங்களில் மேற்படி தேர்வுகள் நடைபெற உள்ளன. மறையாசிரியர் சிறப்பு, கௌரவ பட்டத்தேர்வுகளில்...

தொடர்ச்சி 15ம் பக்கம்

# இறந்தோருக்கான திருப்பலிகள் - 02.11.2013

- ✧ மாலை 4.00 மணிக்கு பொறளை பொதுமயானத்தில் செபமாலைத் தியானமும், அதனைத் தொடர்ந்து ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் மாலை 4.30 மணிக்கு திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.
- ✧ மாலை 3.30 மணிக்கு செபமாலைத் தியானமும் அதனைத் தொடர்ந்து மாதம்பிட்டிய மயானத்தில் ஆயர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையின் தலைமையில் மாலை 4.00 மணிக்கு திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.



**“என் கடவுளே என் அரசே உம் பெயரை என்றும் போற்றுவேன்” (திபா 145)**

# அன்பின் சங்கமம் "அன்பின் பரிணாமச் சங்கம்" 28ஆம் ஆண்டு நிறைவு விழா



படம் மற்றும் தகவல்
அருட்சகோதரி றெபேக்கா (H.C)

இற்றைக்கு இருபத்தியெட்டு ஆண்டுகளுக்குமுன் ஆரம்பி-க்கப்பட்ட அன்பின் பரிணாமச் சங்கம் தனது இருபத்தி எட்டு ஆண்டு நிறைவு விழாவை கடந்த மாதம் 19ஆம் திகதி வெகுவிமரிசையாகக் கொண்டாடியதையிட்டு மகிழ்வடைகிறோம். சங்கத்தின் ஸ்தாபகர் திரு. எஸ். ஜே. யோகராசா அவர்களின் விடாமுயற்சியாலும், ஆன்மீக தாகத்தாலும், என்றும் பல ஆன்மாக்களின் உந்துதலாலும் உருவானது தான் அன்பின் பரிணாமச் சங்கம் இன்று பல்லாயிரக்கணக்கான மக்களின் மனதில் ஆன்மீக தாகத்தை தீர்த்துவைக்கும் ஒரு சங்கமாக, இவ் அன்பின் பரிணாமச் சங்கம் விளங்குகின்றது. இறைவனின் சித்தத்திற்கு அன்னைமரி உளம் திறந்தது போல், இன்னும் பலரை உளம் திறந்து இறைசித்தத்தின் படி வாழ இச்சங்கம் அயராது உழைக்கின்றது.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் தலைமையில் அன்றைய நாட் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. ஆரம்ப வழிபாடாக இறைபுகழ் ஆராதனை கீதம், பாடகர் குழுவினால் தாள மேளத்துடன் இறைவனை நோக்கி சங்கமமானது. தொடர்ந்தும் ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை அவர்கள் மங்களகரமாக வரவேற்கப்பட்டார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

## ஆசிரிய தின விழா

கற்றவர்கள் உருவாக்கம் கற்பித்த ஆசான் நிமித்தமே கற்பித்தவனை போற்றுவது கற்றவனின் கடமை. ஆசான்களும் உருவாகியது ஆசான்களாலேயே என்பதற்கேற்ப கடந்த ஐப்பசி மாதம் 06ந் திகதி உலகம் முழுவதும் ஆசிரியர்களை நன்றியுடன் நினைவு கூர்ந்து கொண்டாடப்பட்டது. அதன் பிரகாரம் 07.10.2013 அன்று புனித பேதுரு கல்லூரியில் ஆசிரியர் தினம் மாணவத் தலைவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு மாணவர்கள் அனைவரும் தமக்குக் கற்பிக்கும் ஆசான்களை கௌரவித்து நன்றி செலுத்தினர். கொழும்பு பம்பலப்பிட்டியில் வானளாவ உயர்ந்திருக்கும் புனித பேதுரு கல்லூரி தலைமைத்துவத்திற்கு சிறந்தோர் வழிகாட்டியாகும். அன்று பேதுரு திருச்சபையை சிறப்புடன் ஏற்று வழிநடத்தினரோ அதேபோல் இங்கு கற்ற மாணவர்களும் சமூகத்தில் பல இடங்களில் தலை-வர்களாக பொறுப்பேற்று வழிநடத்துகின்றனர். இவ்வாறு தாம் சமூகத்தில் தலைநிமிர்ந்து நிற்கக் காரணம் தமக்கு கற்பித்த ஆசான்களே. அவர்களை நினைவு கூர்ந்து நன்றி கூறுவது சாலச் சிறந்த பண்பாகும். அதிபர் அருட்பணி. ட்ரவிஸ் கபிரியேல் அடிகளார், உதவி அதிபர் அருட்பணி அன்டன் ரஞ்சித் அடிகள் மற்றும் அருட்பணியாளர்கள், ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து மாணவர்களின் நன்றியை ஏற்றுக்கொண்டனர்.

தகவல்
இவோன் பிளிசியா பேர்னான்டோ

## புனித பூமிக்கு மடுமாதா சுருப அன்பளிப்பு



மடு திருப்பதி பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் இஸ்ராயேல் நாட்டுக்கான தூதுவர் திரு சரத் விஜயசிங்க அவர்களுடன் இணைந்து புனித பூமியின் திருத்தலத்திற்கு இலங்கை திருநாட்டின் மடுமாதா சுருபம் ஒன்று அன்பளிப்பு செய்தார்கள். அந்நிகழ்வை படத்தில் காணலாம்.

## விசுவாசிகளுக்கான அறிவுறுத்தல்

"டிவைன் மேர்சி மதர்" என்ற இயக்கமானது திருத்தந்தை பிரான்சிஸ்க்கு எதிராகவும், திருச்சபைக்கு எதிராகவும் பல்வேறுபட்ட பிழையான கருத்துக்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் மற்றும் சிற்றேடுகளை வினியோகித்து மக்களை திசை திருப்பி வருகிறார்கள். இதில் எவ்விதமான உண்மை தன்மையும் இல்லை என்பதை என்பதை அறியத்தருகின்றேன்.

**அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை**
**(கொழும்பு உயர் மறைமாவட்டம்)**

## தமிழியல் விருது" பெற்ற கத்தோலிக்க செய்தி லங்கா இணையம்

நன்றி : தமிழ் கத்தோலிக்க செய்திலங்கா இணையம்



யாழ்ப்பாணம் பிசப் சவுந்தரம் மீடியா நிலையத்திலிருந்து செயற்படும் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையம் மற்றும் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா (ரிசிஎஸ்எல்) தொலைக்காட்சி இயக்குனரும், தமிழ்நாடு கோயம் -புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக இணைப்பாளருமான அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை அவர்களுக்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் அவரது கட்டுரை நூலான "ஆசிரிய தலையங்கம் ஓர் அறிமுகம்" நூலுக்கு 2012ஆம் ஆண்டுக்கான செந்தமிழ்ச் செல்வர் ஸ்ரீகந்த ராஜா "தமிழியல் விருதினை" வழங்கி கௌரவித்தது.

**தொடர்ச்சி 15ம் பக்கம்...**

## கம்பஹா இந்திகொல்லை புனித யூதா ததேயு திருத்தல வருடாந்த திருவிழா



கம்பஹா இந்திகொல்லை புனித யூதா ததேயு திருத்தலத்தின் வருடாந்த திருவிழா 27.10.2013 அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அன்றைய தினம் காலை 8.30 மணி திருநாள் திருப்பலி கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. இத்திருப் -பலியை குருமுதல்வர் அருட்பணி சிறில் காமினி அடிகளார், மற்றும் பங்குத்தந்தை அருட்பணி நொயல் நோனிஸ் அடிகளாரும் இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.

**தகவல் மற்றும் படம் : கல்தோரா**

## தேசிய இளைஞர் பேரணி 2013 - தேவத்தை






தேசிய இளைஞர் பேரணியானது ராகம இலங்கை மாதா திருத்தலத்தில் இடம்பெற்றது. இதில் இலங்கையின் அனைத்து மறை மாவட்டங்களிலிருந்தும் அதிகமான கத்தோலிக்க இளைஞர் யுவதிகள் பங்குபற்றியிருந்தனர்.

இப்பேரணியின் முக்கிய கருத்தாக "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" என்ற இறைவார்த்தை மையப்பொருளாய் காணப்பட்டது.

ஐப்பசி 19ஆம் திகதி காலை திருத்தலத்தில் அனைத்து மறைமாவட்டங்களிலுமிருந்து வருகை தந்த இளைஞர்களுக்குமான ஜெப வழிபாடு இடம்பெற்றது. இவ்வழிபாடு முடிவடைந்த பின் இப்பேரணியானது கல்வாரித் திருத்தலத்திலிருந்து ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டது. அங்கு சென்றடைந்ததும் அனைத்து மறைமாவட்டத்தின் ஆயர்களும் இணைந்து அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். அத்திருப்பலியுடன் இப்பேரணியானது முடிவுற்றது.

**நன்றி : கத்தோலிக்க செய்திலங்கா இணையம்)**

## "சேவைச்சுடர்" விருது



கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இயங்கும் அருளாளர் ஜோசேவ்வாஸ் மன்றத்தின் டவர் மண்டபத்தில் நடைபெற்றபோது மன்ற உறுப்பினருக்காக வழங்கப்படும். அதி உயர் விருதான "சேவைச்சுடர்" விருது மன்றத்தின் ஆரம்பகால உறுதிப்பினரும் சமூக சமய கலை இலக்கிய பணியாளருமான திரு. அம்புறோஸ் பீற்றர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர் ஏற்கனவே மன்றத்தினால் வழங்கப்பட்ட "மறை வளர்க்கும் பணி" விருதினையும் மற்றும் பல விருதுகளையும் பெற்றுக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையிடமிருந்து விருதினை பெறுவதையும் அருட்பணி ஒனாசியஸ் அடிகளாரும் மன்றத்தின் தலைவர் திரு புஸ்பா கோமஸ் அவர்களும் அருகில் நிற்பதையும் படத்தின் காணலாம்.

## வாசகர்களின் கவனத்திற்கு

நத்தார் சிறப்பு இதழுக்கு உங்கள் ஆக்கங்களான சிறுகதைகள், கவிதைகள் போன்றவற்றை எழுதி இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னதாக எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்

**முகவரி :** ஆசிரியர்
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு - 08
**மின்னஞ்சல் :** முகவரி cgnanaoli@yahoo.com

## விசேட ஞாபகார்த்த உறை



இறையடியார் தோமஸ் கர்தினால் குரே ஆண்டகை இறைபதம் அடைந்து 25ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி முத்திரையொட்டப்பட்ட விஷேட ஞாபகார்த்த தபால் உறை ஒன்று இறையடியார் இந்நினைவு நாளை கொண்டாடும் முகமாக தேவத்தை பேராலயத்தில் நடைபெற்ற திருப்பலியின் பின் வெளியிடப்பட்டது.

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
03 கார்த்திகை மாதம், 2013 ஞாயிற்றுக்கிழமை.

## "மரணம் என்பது இவ்வுலக வாழ்வின் முடிவும் மறுவுலக வாழ்வின் ஆரம்பமுமாகும். இறைவனுக்குள் மரிப்பவர்களுக்குத்தான் மறுவுலக அதாவது நிலைவாழ்வுண்டு"

கத்தோலிக்கத் திருச்சபையானது வருடந்தோறும் கார்த்திகை மாதம் 1ம் திகதி சகல புனிதர்களின் நினைவு நாளாகவும் கார்த்திகை மாதம் 2ம் திகதியிலிருந்து மாதம் முழுவதும் சகல ஆத்துமாக்களையும் நினைவுகூர்ந்தும் வருவது நாமறிந்ததே. ஏன் திருச்சபை சிறப்பாக புனிதர்களை நினைவுகூர்கின்றது? புனிதர்கள் 'பாவங்களிலிருந்து விலக்கப்பட்டு கடவுளின் அருட்பொழிவு பெற்றவர்கள்' என்ற அடிப்படையில் புனிதம் என்பது கடவுளையும் அவரில் முழுமையாகப் பொதிந்துள்ள புனிதத் தன்மையையும் குறிக்கின்றது. கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழ்வோர் மட்டுமே புனிதத்தன்மையில் பங்கேற்பவர்கள். அந்த வரிசையில் இன்று விண்ணகத் திருக்கூட்டத்தில் வாழ்பவர்கள் தான் இந்த புனிதர்கள். இவர்கள் கடவுளை முகமுகமாகக் காணும் பேற்றினைப் பெற்று இறைமக்களுக்காகத் தொடர்ந்து பரிந்து பேசுபவர்கள் என்பது கத்தோலிக்க கிறிஸ்தவ இறை நம்பிக்கை. இவர்கள் முன்மாதிரிகையான வாழ்வு வாழ்ந்து இன்றும் எமக்காகப் பரிந்து பேசி வருவதாலும் திருச்சபையை செழிப்புறச் செய்து வருகிறார்கள். இவர்கள் இன்றும் நெருங்கிய உறவிலே திருச்சபையோடு பயணிப்பவர்கள். எனவே நமது திருச்சபை புனிதர்களை நினைவுகூர்ந்து நிற்பது பெருமைக்குரியதே.

விசேஷமாக இம்மாதத்தில் நாம் எம்மை விட்டுப் பிரிந்து சென்ற பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவர்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுப்பதும், அவர்கள் பெயரில் தானதர்மங்கள் செய்வதும், கல்லறைகளுக்கு புது மெருகூட்டுவதும் வருடந்தோறும் நாம் செய்துவரும் கடமைகளாகும். இவை யாவும் செய்யப்படவேண்டியதே. செய்யப்படவும் வேண்டும். ஆனால், இத்தோடு நாமும் ஒன்றை தெரிந்திருக்க வேண்டும். இதே கல்லறைத் தோட்டத்தில் நாமும் ஒருநாள் சங்கமிக்க போகின்றோம் என்று இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் இறக்க வேண்டும் என்பது இறைவனின் நியதியாகும். மனிதன் இவ்வுலகில் பிறக்கும் போதே அவனது இறப்பு நாளும் குறிக்கப்பட்டுவிடுகிறது. நாம் இறைவனுக்குள் இறக்கின்றோமா? அதுதான் நாம் சிந்திக்க வேண்டியது. மரணம் என்பது இவ்வுலக வாழ்வின் முடிவும் மறுவுலக வாழ்வின் ஆரம்பமுமாகும். இறைவனுக்குள் மரிப்பவர்களுக்குத்தான் மறுவுலக அதாவது நிலைவாழ்வுண்டு. அப்படியானால் நிலைவாழ்வு என்பது என்ன? என்ற வினா எமக்குள் எழுகிறது அல்லவா. நிலைவாழ்வு என்பது கடவுளுக்கே மட்டுமே உரித்தானது. கடவுள் மட்டுமே நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நாம் அவர் வாழ்வில் பங்குபெற அவர் அருளால் அழைக்கப்பட்டுள்ளோம். இந்த நிலைவாழ்வானது ஒருவர் கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்ளும்போதே நிலைவாழ்விற்கான பயணம் ஆரம்பமாகிறது. காலத்திலும், காலம் கடந்தும் கடவுளோடு ஒன்றித்து அவர் வாழ்வில் பங்குபெறுவதே நிலைவாழ்வாகும்.

எமது தூய்மை, புனிதம் எங்கே தொடங்குகிறது? அது நமது தனிப்பட்ட மனம் திரும்புதலினின்று தான் தொடங்குகிறது. எனவே மனமாற்றமடைந்து புனிதம் பெற்றிடுவோம். எமது மரணம் இன்றோ நாளையோ இல்லை அடுத்த நிமிடமோ நிகழலாம். அது யாருக்குமே தெரியாது. இறைவன் மட்டுமே அந்நேரத்தை அறிவார். இறைவன் எந்நேரத்தில் அழைத்தாலும் சென்றுதானே ஆகவேண்டும். அதற்காக நாமும் நம்மை தயாராக்குவோம். கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழ்ந்து விண்ணகப்பேற்றினைப் பெற்றிடுவோம்.

இறையாசிருடன்
ஆசிரியர்




## யார் இந்தப் புனிதர்கள்

சமீபத்தில் மறைந்த திருத்தந்தை இரண்டாம் ஜோன்போல் அவர்களுக்கு திருச்சபை "அருளாளர்" பட்டம் கொடுத்துள்ளது. கொல்கொத்தா வீதிகளிலே, சேரிகளின் சேற்றினிலே இருந்த வர்களை அரவணைத்து விண்ணகத்தின் சுவையையே இம்மண்ணிலேயே காட்டிய அன்னை தெரேசா புனித நிலைக்கு உயர்த்தப்பட்டது. நாம் நம்பிக்கையோடு சொல்லுகின்ற விசுவாச அறிக்கையிலும், புனிதர்கள் இடம் பெறுகிறார்கள். நமது இறை - மனித உறவின் உச்சமாக உள்ள திருவிருந்து கொண்டாட்டங்களிலும், புனிதர்கள், நீங்கா இடம் பெறுகிறார்கள். இவ்வாறாக அன்னை மரியா, வானதூதர்கள் தொடங்கி கத்தோலிக்க திருச்சபையில் ஏறக்குறைய 6,883 புனிதர்கள் மற்றும் அருளாளர்களும் உள்ளனர்.

எமது கத்தோலிக்க திருச்சபை புனிதர்களை தேர்ந்தெடுத்து உருவாக்குவதில்லை. மாறாக சில மனிதர்களை புனிதர்கள் என அழைத்து அவர்களது வாழ்க்கையை நமக்கு முன்மாதிரிகையாக நிறுத்துகின்றது. ஒருவரது வாழ்க்கையை நன்கு ஆய்ந்து அறிந்த பின்பு அவர் "வணக்கத்துக்குரியவர்" என்கின்ற பட்டத்தை அளிக்கிறது. அவர்கள் வழியாக ஒரு புதுமை நடந்தால் அவரை "அருளாளர்" என அழைக்கிறது. அதே அருளாளரின் இரண்டாவது புதுமையும் நடந்தது என்று உறுதி செய்யப்பட்டால் அவரை புனிதர் என அழைக்கிறது. புனிதர்களிலே இரத்தம் சிந்திய புனிதர்கள், மறைசாட்சிகள், மறைபரப்புப் பணி செய்த புனிதர்கள், கிறிஸ்துவுக்காகத் தங்களையே தியாகம் செய்த புனிதர்கள், கிறிஸ்துவுக்காக தங்களது கற்பையே காணிக்கையாக்கிய புனிதர்கள் எனத் தாங்கள் வாழ்ந்த சூழல்களிலே இன்னொரு கிறிஸ்துவாகவே வாழ்ந்திருக்கிறார்கள். பிறருக்கு வாழ்வு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நாமும் நாம் வாழும் உலகிலே புனிதர்களாக வாழ அழைக்கப்படுகின்றோம். அவர் தோன்றும் போது நாமும் அவரைப் போல இருப்போம், ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம். அவரை எதிர்நோக்கி இருக்கிற அனைவரும் அவர் தூயவராய் இருப்பதுபோல் தம்மையே தூயவராக்க வேண்டும் (1 யோவான் 3:2-3). புனிதர்களுக்கு விழா எடுக்கும் நாம் அவர்களை அலசி ஆய்வது சிறந்தது. வேதசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து என்று சொல்லுவார்கள். இவர்களில், தங்கள் சாட்சிய வாழ்வினால் விசுவாசத்திற்கு உயிரைக் கொடுத்தவர்கள், தூய ஸ்தேவான், தோமா, யாக்கோபு, அருளானந்தர் போன்றோர். நற்செய்தியை எட்டுத்திசைக்கும் எடுத்துரைத்தவர்கள் தூய பவுல், பர்னபா, சவேரியார் போன்றோர். குடும்ப வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர்கள் : தூய அன்னம்மாள், மோனிக்கா போன்றோர். சீர்த்திருத்த வாதிகளாக மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர்கள். தூய கிரகோரியார், லொயோலா இஞ்ஞாசியார், அவிலா தெரசாள் போன்றோர் தவறுகளைக் கண்டித்து சீர்த்திருத்தியவர்கள் தூய திருமுழுக்கு யோவான், சிரில் போன்றோர், செப வாழ்விலே இறைவனை மகிமைப்படுத்தியவர்கள் : தூய குழந்தை தெரசாள், பதுவை அந்தோனியார், தோமினிக் சாவியோ, பிரான்சிஸ் அசிசி போன்றோர் பிறரன்புப் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தியவர்கள் : தூய ஜான் போஸ்கோ, வின்சென்ட் தே பவுல், மேக்சி-மிலியன் கோல்பே போன்றோர். இவ்வாறு எண்ணற்ற புனிதர்கள் கிறிஸ்துவின் வாழ்க்கையை தங்கள் திறமைகளுக்கும், சூழலுக்கும், தேவைக்கும் ஏற்ப வாழ்ந்து நம்மை அத்தகைய வாழ்வு வாழ எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர் என்பதை இரண்டாம் வத்திக்கான சங்கம் "தூய கன்னி தம் வாழ்வால் தாய்க்குரிய அன்பிற்கு மாதிரிகையாய் உள்ளார் (திருச்சபை எண் 65) என்றும், புனிதர்களின் வாழ்விலே மாதிரிகையையும், அவர்களின் ஒன்றிப்பிலே தோழமையையும், அவர்கள் பரிந்து பேசுவதால், உதவியையும் அவர்களிடமிருந்து நாம் தேடுகிறோம் (திருச்சபை எண் 51) என்றும் கூறுகிறது. புனிதர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் இறைவனை மகிமைப்படுத்தினர். "நீங்கள் உண்டாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள்" (1 கொரி 10:31). மேலும் நம் நற்செயல்களைக் கண்டு மனிதர் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ வேண்டும் (மத் 5:16) என்ற விவிலிய வரிகளுக்கேற்ப வாழ்ந்தார்கள். நமது அன்றாட வாழ்விலே இறைநம்பிக்கை தளர்ச்சியுறும்போது நாம் புனிதர்களின் பரிந்துரையை ஏன் வேண்டுகிறோம்? இயேசு கிறிஸ்துவே நமக்கு எல்லாம் என்றிருக்கும்போது புனிதர்களின் பரிந்துரை தேவையா? என்று பிரிவினை சகோதரர்கள் கேட்பர். இந்தக் கேள்விக்கு விவிலியப் பின்னனியிலிருந்து விளக்கம் தர முடியும். ஆபிரகாமின் பரிந்துரையால் லோத்தின் குடும்பம் காப்பாற்றப்பட்டது (தொ.நூல் 18:29)

தொடர்ச்சி 15ம் பக்கம்

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# சிறு பருவத்தில் தோபியா



இளையோர் பக்கம்

அங்கம் - 45

> "தோபியாவைப் பொருத்தமட்டில் தன்னம்பிக்கை உள்ள குழந்தையாய் உருவாகினார் என்பதில் ஐயமில்லை"

தோபியா நினிவே நகரில்தான் பிறந்திருக்க வேண்டும். அசீரியர்கள் அவரின் பெற்றோரை நினிவே நகருக்கு நாடு கடத்தினர் (1:10) வாக்களிக்கப்பட்ட நாட்டின் வடபகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த நப்தலி குலத்தைச் சேர்ந்தவர்தான் அவர் தந்தை தோபித்து. சமயப் பற்றுடைய அவர் மற்றவர்களைப்போல் அல்லாது எருசலேமுக்குச் சென்று பலியிட்டு வந்தார். சமயப்பற்றும் இறைப்பற்றும் கொண்ட தந்தை தோபித்து நாடு கடத்தப்பட்டச் சூழ்நிலையிலும் கூட தன் உறவினர்களைப்போல் வாழாமல் தனித்தன்மையுடன் வாழ்ந்தார். குறிப்பாக பிற இனத்தவரின் உணவை உண்ணவில்லை. (1:11), முழு மனதுடன் கடவுளைச் சிந்தையில் இருத்தி வழிபட்டார் (1:12), தர்மங்கள் செய்தார் (1:16). பசியுற்றோருக்கு உணவும், ஆடையற்றோருக்கு ஆடையும் அளித்தார் (1:17). இதனால் அந்நாட்டின் மன்னரான எனமேசரின் முன்னிலையில் மேதியாவுக்குச் சென்ற அரசவைக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுத்து வந்தார். மேதியாவிலிருந்து தன் உறவினரான கபேலுடன் வியாபாரம் செய்து வந்தார்.

தோபியா தான் பிறந்த நாள் முதல் இப்படிப்பட்ட மிகவும் அருமையான மகிழ்ச்சிக்குரிய ஒரு சூழலில் வளர்ந்து வந்தார். தந்தையின் நற்காரியங்களைக் கண்கூடாகக் கண்டிருக்க வேண்டும். தந்தையும் அவரை இப்படிப்பட்ட நற்காரியஙக்ளைச் செய்யத் தூண்டியிருக்க வேண்டும் அவருடைய தாய் அன்னா இவை அனைத்திற்கும் ஒத்துழைப்புத் தந்த ஒரு நல்ல இல்லறப் பெண்ணாகத் திகழ்ந்திருக்கிறார்.

எனவே தோபியாவின் சிறு பருவ வாழ்க்கை ஒரு வசந்த காலம் எனலாம். குழந்தை உளவியல் அறிஞர்களின் கூற்றுப்படி ஒரு குழந்தை எந்தச்சூழ்நிலையில் வளர்கிறதோ அந்தச் சூழலுக்கு ஏற்றவாறு அந்தக் குழந்தை உருமாறுகிறது. நல்லச் சூழல் என்றால் குழந்தை நல்லவனாக மாற துணைசெய்கிறது. கெட்டச் சூழல் என்றால் குழந்தை கெட்டவனாக மாறுகிறது.

அந்நியர் நாட்டில் அடிமை என்றாலும் ஆண்டவராகிய கடவுள் அவர்களைக் கைவிட்டுவிடவில்லை. தோபியாவைப் பொருத்த மட்டில் அவர் தன் தாயின் கருவில் இருந்தே நல்லச் சமூக மற்றும் சமயச் சூழலையே அனுபவித்திருந்தார் எனலாம். பிறந்து வளர்கிற காலகட்டத்திலும் நல்ல பெற்றோரின் அரவணைப்பையே பெற்றிருக்கிறார். தந்தையின் வழியும் தாயின் முன்மாதிரியான வாழ்க்கையும் அவருக்கு பெரும் தூண்டுதலாகவும் நல் வாழ்க்கையை அமைக்கவும் துணை செய்தன.

இன்று நல்லக் குழந்தைகளை உருவாக்க அதிலும் குறிப்பாக நல்ல சமூக பொறுப்புள்ளப் பிள்ளைகளை உருவாக்க, நல்லச் சமூக சூழலை ஊருவாக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும. இன்றைய உலகில், கரு உளவியல் (Embrio Psychology) என்ற புதிய உளவியல் ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. இதன் அடிப்படையில் தாயின் கருவிலிருந்தே ஒரு குழந்தை உருவாக்கப்படுகிறது. தாயின் வயிற்றில் இருக்கும் பத்துமாத காலம் அக்குழந்தையின் மனநிலையையும் குழந்தையின் ஆளுமைத் தன்மையையும் பாதிக்கிறது. தோபியாவைப் பொறுத்த மட்டில் ஒரு நல்ல சமூகச் சூழல் இருந்ததால் ஒரு தலைசிறந்த மகனாய் உருவாக முடிந்தது எனலாம். ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சியில் முதல் ஐந்து ஆண்டுகள் மிகச் சிறப்பான கால கட்டமாகும். இக்காலக்கட்டத்தில் குழந்தை புதிய வழிமுறைகளையும் மொழிகளையும் உறவுகளையும் கற்றுக்கொள்கிறது. தன் வாழ்வுக்குத் தேவைப்படக்கூடிய எண்ணங்களையும் உருவாக்கிக் கொள்கிறது. நம்பிக்கைத் தரக்கூடிய சூழலாக இருந்தால் நம்பிக்கை கொண்ட குழந்தையாகவும் உறவுகைள கட்டியெழுப்பும் குழந்தையாகவும் உருவாகும். இல்லையேல் அவநம்பிக்கையும், பயமும், தவறி விடுவோமோ என்ற அச்சமும் கொள்ளும் கோழை மனநிலை கொண்ட குழந்தையாய் உருவாகிவிடும். தோபியாவைப் பொருத்தமட்டில் தன்னம்பிக்கை உள்ள குழந்தையாய் உருவாகினார் என்பதில் ஐயமில்லை. தன்னம்பிக்கை கொண்ட இளைஞர்கள், உருவாவதற்கு பெற்றோர் காரணம் என்றாலும், இன்றையச் சூழலில் ஒவ்வொரு இளைஞரும் ஓரளவு சிந்தித்து சுயமாக முடிவெடுக்கும் நிலைக்கு வரும்போது அதிகமான தன்னம்பிக்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தன்மீதும், பிறர்மீதும் இறைவன் மீதும் நம்பிக்கை வைப்பதனால் தன்னம்பிக்கையை கொண்ட இளைஞராக உருவாகிறார். தன் பெற்றோர் தனக்குத் தராத வாய்ப்புகளையும், வசதிகளையும் அவரவர் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

# இன்றைய குழந்தைகள் நாளைய திருச்சபை

## கருத்தடை கருச்சிதைவு வேண்டாமே!

இந்த இதழில் கருத்தடை, கருச்சிதைவு மற்றும் குழந்தை பிறக்க நாம் மேற்கொள்ளும் செயற்கை வழிமுறைகளைப் பற்றி நமது திருச்சபை, விவிலியம் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி என்ன கற்பிக்கின்றது என்பதை பற்றி விவாதிப்போம்.

### அ. திருச்சபையின் சுற்றுமடல்கள்

குழந்தையின் வாழ்வு மற்றும் குழந்தையின் பிறப்பை ஒட்டி எழுதப்பட்டுள்ள திருச்சபையின் மடல்கள் நான்கு. அவை பின்வருமாறு

1. வாழ்வின் நற்செய்தி
2. மனித வாழ்வு
3. கொடையாகிய வாழ்வு
4. இன்றைய உலகில் திருச்சபை

### 1. வாழ்வின் நற்செய்தி

மறைந்த திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் 1995ஆம் ஆண்டு வெளியிட்ட இந்த மடலின் சுருக்கம், ஒவ்வொரு மனிதரின் மாண்பையும் நாம் பேணிக்காக்க வேண்டும். அது கருவிலிருந்து உருவாகின்ற கரு முட்டையாக இருந்தால் கூட, அந்த கருமுட்டையின் மதிப்பையும், மேன்மையையும் நாம் குறைவாக மதிப்பிடக்கூடாது. எனவே, மனித உயிர்களை சிறு கருமுட்டையிலிருந்தே பேணிக்காத்து அதற்கு மதிப்பளிக்க வேண்டும்.

### 2. மனித வாழ்வு

திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் 1968இல் எழுதிய இந்த சுற்றுமடலில் திருச்சபை, கருச்சிதைவு, கருத்தடை மற்றம் இயற்கை முறையில் கருத்தரிப்புக்கு முரணாகச் செயல்படும் செயற்கை அறிவியல் முறைகள், கருத்தடைசாதனங்கள் போன்றவற்றை வன்மையாக மறுத்து இவற்றைக் கண்டிக்கின்றது.

### 3. கொடையாகிய வாழ்வு

1987இல் விசுவாசம் மற்றும் கொள்கை திரட்டு குழுவினரால் திருச்சபை கூறிய படிப்பினைகள் "கொடையாகிய வாழ்வு" என்னும் ஏடாக வெளிவந்தது. இதிலே மருத்துவர்கள், நெறியியலாளர்கள் மற்றம் பெற்றோர்கள் செயற்கை வழியிலே கருவை உருவாக்குதலிலே பங்குபெற வேண்டாம் என்றும் இறைவனின் திட்டத்திற்கு எதிராக இயற்கை முறைகளிலே குழந்தைகளை உருவாக்க வேண்டாம் என்பதையும் எடுத்துரைக்கும் ஒரு மடலாக இந்த மடல் விளங்குகின்றது.

### 4. இன்றைய உலகில் திருச்சபை

இது ஒரு வத்திக்கானின் இதழாக வளர்ந்து வரும் நவீன உலகில் இருக்கும் சமூக மாற்றங்களுக்கு பதிலாக வந்திருக்கும். திருச்சபையின் படிப்பினைகளின் தொகுப்பாக இருக்கின்றது. மற்ற மடல்களைப் போலவே இந்த ஏடும் குழந்தைகள் பிறப்பை ஒட்டி நடக்கும் அறிவியல் ஆராய்ச்சிகளை தடை செய்வதோடு மட்டுமல்லாமல் அறிவியல் ஆராய்ச்சிகளை ஒரு சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றது.

இந்த நான்கு சுற்று மடல்களிலிருந்து ஒருசில உண்மைகள் நமக்கு புலப்படுகின்றது. திருச்சபை தன் மக்களுக்கு கற்பிக்கின்ற படிப்பினைகள் பின்வருமாறு

1. குழந்தை இறைவன் தரும் பரிசு
2. கருத்தடை மற்றும் கருச்சிதைவு செய்தல் ஒரு மிகப் பெரிய பாவமாகும்.
3. செயற்கை முறை கருத்தரிப்பு முயற்சிகள் திருச்சபையால் அங்கீகரிக்கப்படவில்லை
4. மேற்கண்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாதோர் இறைவனின் படைப்புத் திட்டத்திற்கு எதிராக செயல்படுகின்றனர்.

### ஆ) விவிலியமும் சிறு குழந்தைகளின் உரிமையும்

நாம் செய்யும் கருக்கலைப்பு, கருச்சிதைவு ஒவ்வொன்றிற்கும் இறைவனுக்கு நாம் கணக்கு கொடுக்க வேண்டும். இறைவன் ஆபேலை கொன்ற காயினை கேட்டதுபோல நம் ஒவ்வொரு வரையும் கணக்கு கேட்பார்(தொடக்க நூல் 4வது அதிகாரம்)

தொடர்ச்சி 15ம் பக்கம்

# 41 ஆண்டுகள் ஆசிரியப் பணியின் நிறைவிலும் மகிழ்விலும் ஓய்வு பெறும் ஆசிரியை

## திருமதி நீற்றா ரோகிணி சவுந்திரம்

**வாழ்த்தும் பாராட்டும் தெரிவிப்போர்**
**கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயத்தின்**
**அதிபர், ஆசிரியர்கள், மற்றும் மாணவியர்கள்**

***"ஆசிரியப் பணி ஒரு அறப்பணி. அதற்கு உன்னை அர்ப்பணி"*** என்ற அறிஞர் மொழிக்கேற்ப இறைவன் இனிதே படைத்த உலகம் மென்மேலும் அழகு பெறவும், அவர் படைப்பின் நன்மக்கள் நல்வாழ்வை பெற்று மலரவும், சமூகம் தழைக்கவும், தர்மம் நிலைக்கவும், நாடு வளம் பெறவும், தேவையான அறிவுக்கண்களை திறக்கும் ஆசிரியப் பணியை தம் அழைப்பாய் ஏற்ற திருமதி நீற்றா ரோகிணி சவுந்தரம் அவர்கள் 41 ஆண்டுகள் அரும்பணியாற்றி 20.10.2013 அன்று அப்பணியின் நிறைவு கண்டு அதன் மகிழ்வில் ஓய்வு பெறும் இத்தருணத்தில் அவருக்கு எம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் செபங்களையும் வாரியிறைப்பது எம் கடமையாகும்.

"ஆடுகள் வாழ்வு பெறவந்தேன். அதுவும் நிறைவாய் பெறவந்தேன்" என்ற எம் பெருமான் இயேசு, ஆசிரியருக்கெல்லாம் ஆசியராவார். அவரின் வழியில் ஆசிரியப் பணிக்கு அழைக்கப்பட்ட இவ்வாசிரியை 1953.10.20 அன்று யாழ்ப்பாணம் சில்லாலை (சின்ன றோமை) எனும் கிராமத்தில் செபஸ்தியாம்பிள்ளை ஜேற்றூட்டம்மா தம்பதிகளின் ஆறாவது தவப்புதல்வியாக பிறந்து தம் ஆரம்பக் கல்வியை சில்லாலை றோ.க.த பாடசாலையிலும், உயர்க்கல்வியை இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் தொடர்ந்திருந்தார்.

1972.11.15 அன்று ஆசிரியராக முதல் நியமனம் பெற்று யாழ்ப்பாணம் சுழியபுரம் விக்ரோரியா கல்லூரியில் கல்வி கற்பித்து 1974 - 1975 வரை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மனைப்பொருளியல் பாடநெறிப் பயிற்சியை பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியராக கண்டி மாவட்டத்தில் நியமனம் பெற்றார். 1976 - 1978 வரை கலகெதர ஜப்பார் மகாவித்தியாலத்திலும் 1978 - 1982 வரை அக்குறனை க / மத்திய கல்லூ-ரியிலும் கல்வி கற்பித்தார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

# கார்த்திகை மாதம்



**ஆக்கம்: பெர்ணத்**

கார்த்திகை மாதம் என்றாலே கல்லறைத் தோட்டங்கள் எல்லாம் அழகு செய்யப்படுகின்றன. புதர் மண்டிப் போய் கிடந்த கல்லறைகள் எல்லாம் மீண்டும் புதுப்பொலிவுடன் தோற்றம் தருகின்றன. கல்லறைகளைச் சுத்தம் செய்து வெள்ளையடித்தல், கல்லறைகளை சந்தித்தல், இறந்தவர்களுக்கான திருப்பலி நிறை-வேற்றல், இறந்தவர்களை நினைத்து சிறப்பு அன்னதானம் வழங்கல்.... இப்படியாக பல்வேறு நிகழ்ச்சிகளால் கார்த்திகை மாதம் முக்கியமானதாக அமைந்துவிடுகின்றது.

ஏன் இந்தக் கொண்டாட்டங்கள். ஏன் இந்த ஆர்ப்பரிப்பு? எதற்காக நாம் இறந்தவர்களை நினைவு கூறுகின்றோம். அனைத்து ஆன்மாக்களின் நினைவு தினம் நமக்கு என்ன, எதைக் கற்றுத்தருகின்றது.

## வேண்டாம் மரணம்

மரணம் நிகழாத நாளில்லை, மரணம் நிகழாத வீடில்லை என்றே சொல்ல வேண்டும். இயற்கையாக ஏற்படும் மரணம் முதல் தற்கொலை வரை ஏற்படும் மரணச் செய்திகள், பத்திரிகைகளில் ஒவ்வொரு நாளும் வராமல் இருந்ததில்லை. இதனால் தான் மரணம் என்பதுமே எல்லோருக்கும் இயல்பான ஒரு பயம் ஏற்படுகின்றது.

மரணம் என்பது ஓர் எதார்த்தம். மரணத்தை இறப்பு என்றும், சாவு என்றும் செத்துப்போதல் என்றும் குறிப்பிடுவர். மரணமா? அது வேண்டாம் என்று எண்ணுவோரே அதிகம். காரணம் மரணம் வாழ்வின் மிகப்பெரும் இழப்பை ஏற்படுத்துகின்றது. இருப்பினும் மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு உயிரும் இறப்பைச் சந்தித்தே ஆகவேண்டும். மரணம் எனக்கு வேண்டாம் என்று தப்பித்துக் கொள்ள முடியாது. மாறாக அனைத்து உயிர்களும், அதிலும் குறிப்பாக ஒவ்வொரு மனிதரும் சந்தித்தே ஆகவேண்டியது வாழ்வின் எதார்த்தம்.

ஆகவே கார்த்திகை மாதம் 2ஆம் திகதி அனைத்து ஆன்மாக்களின் நினைவு நாளாக, அதாவது இறந்தோர் தினமாக திருச்சபை சிறப்பித்து வருகின்றது. பாமர மக்கள் இதைக் கல்லறைத் திருநாள் என்று அழைக்கின்றனர். எவ்வாறு இவ்விழா வழக்கத்திற்கு வந்தது என்பதை சற்று பார்ப்போம்

தொடக்க திருச்சபையின் வாழ்வு மிகவும் போராட்டம் நிறைந்த வாழ்வாக அமைந்திருந்தது. முதல் இரண்டு நூற்றா-ண்டுகளில் உரோமையில் அவ்வப்போது ஏற்பட்ட வேதக்கலாபனையில் பலரும் இயேசுவுக்கு சாட்சியாக இறந்தனர். மிகக்குறிப்பாக திருச்சபையின் இரு தூண்கள் எனப்படும் புனித பேதுரு மற்றும் புனித பவுலின் கல்லறைகள் மக்களிடையே விரும்பிச் சந்திக்கப்பட்ட இடங்களாக மாறின. காலஞ்செல்லச் செல்ல மறைச் சாட்சிகளாக இறந்த இவர்களின் கல்லறைகளில் கி.பி 3ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு திருச்சபை உரோமையில் வேரூண்ட ஆரம்பித்த பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் சாட்சிய வாழ்வை நினைவு கூர்ந்து மக்கள் விழாக் கொண்டாடி அவர்களின் கல்லறைகளைச் சந்தித்து வந்தனர்.

வேதக்கலாபனைகளில் மறைசாட்சிகளாக இறந்த-வர்களை ஒட்டுமொத்தமாக அடக்கம் செய்யும் பழக்கமும் இருந்தது. திருத்தூதர்களின் கல்லறைகள் போன்றே அவர்களின் கல்லறைத் தோட்டங்கள் காலப் போக்கில் மக்கள் விரும்பிச் சந்திக்கும் இடங்களாகவும் மாறின. இதற்கு சிறந்த உதாரணம் திருத்தொண்டராக இருந்து மறைசாட்சியாக மரித்த புனித லோரன்ஸ் என்பவரின் இடத்தில் இன்றும் அவரின் பெயரில் ஆலயம் உள்ளது. அதை ஒட்டிய மிகப் பெரிய கல்லறைத் தோட்டம் இன்ற-ளவும் உள்ளது. மக்கள் ஒவ்வொரு ஆண்டும், சிறப்பான வகையில் இங்கு திருப்பலி நிறைவேற்றி மறைசாட்சிகளாக இறந்தவர்களை நினைவு கூறுகின்றனர். இருப்பினும் இக்கல்லறை விழா உலகத் திருச்சபை அளவில் கொண்டாடப்படும் விழாவாக இருக்கவில்லை.

கி. பி 998இல் புனித ஓதிலோ என்பவர் தன்னுடைய குளுனி சபையினருக்கு இதனை அறிமுகப்படுத்தினார். இவர் குளுனி சபையின் முதல் மடாதிபதியாக இருந்தார். தன்னுடைய துறவற மடத்தில் வாழ்வோர் இறந்தவர்களுக்காக சிறப்பான செபங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காக இவ்விழாவை அறிமுகப்படுத்தினார். 11ஆம் நூற்றாண்டில் இறந்தவர்களுக்காக மன்றாடும் குளுனி சபையி-னரின் வழக்கம் ஐரோப்பிய நாடுகளிம், இலத்தீன் அமெரிக்கா நாடுகளும், மிக விரைவாகப் பரவியது. இறந்த ஆன்மாக்களுக்காக மன்றாடும் இவ்விழாவைத் தாய் திருச்சபை கி.பி 13ஆம் நூற்றாண்டில் அனைத்துலகின் விழாவாக கொண்டாட அனு-மதி வழங்கியது.

## இறந்தவர்களுக்காக மன்றாடுதல்

இறந்தவர்களுக்காக மன்றாடும் வழக்கம் விவிலிய வழக்கமாகும். இது மக்கபேயர் காலத்திலிருந்து வருகின்றது. (2மக் 12:43-45) யூதா, மக்கபே இறந்தவர்களுக்காகப் பாவப்பரிகாரப் பலி ஒப்புக் கொடுக்க எருசலேமிற்கு ஆள்களை அனுப்பினார். இந்த மரபு புனித பவுலின் காலத்தில் இயேசு வழியாக இறந்தவர்கள் மீட்பைப் பெறுவதற்காக வாழ்ந்து கொண்டிருந்தோர் அவர்கள் பெயரில் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டனர் (1கொரி 15:29). இதன் பின்னணியில்தான் காலப்போக்கில் இறந்தவர்களுக்காகச் செபிக்கும் பழக்கமும், கல்லறைத் தோட்டச் சந்திப்புக்களும், திருப்பலி ஒப்புக் கொடுக்கும் பழக்கமும் தாய் திருச்சபையின் மரபில் வளர்ந்தது.

பழைய ஏற்பாட்டு பலிகளைவிட இயேசுவின் ஒப்புயர்வற்ற கல்வாரிப்பலி அனைத்து பாவங்களையும் போக்குகின்றது. எனவேதான் கார்த்திகை மாதம் இறந்தவர்களுக்காக திருப்பலிகள் ஒப்புக்-கொடுக்கப்படுகின்றன. ஆகவே கார்த்திகை மாதம் ஏன் நாம் இறந்த ஆன்மாக்களின் தினமாக கொண்டாடுகின்றோம் என்பது எமக்கு தெளிவாகின்றது. எனவே இறந்தவர்களை நினைத்து நாமும் திருப்பலி ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

# மரித்தோர் நினைவு



**அக்கா கல்லறை சந்திக்க நீங்கள் வரவில்லையா?**

வரவில்லை

**என்னக்கா இப்படிச் சொல்றீங்க? வருடத்தில் ஒரு நாள் கல்லறைக்கு வந்து செபம் செய்தால் புண்ணியம் தானோ?**

என் மகன் மண்ணுக்குள் இருப்பதாக என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. படத்திற்கு மாலைபோட்டு, வத்தி கொளுத்தி, செபம் செய்தேன்

**பார்த்தேன் மாலை போட்டிருந்தது. கல்லறை சிறிதாக கட்டி இருந்தது.**

இந்த மாதத்திலே வேறு ஒன்றும் செய்யாமல் மகன் படித்த வகுப்பில் ஏழை மாணவனுக்கு படிப்பு செலவுக்கு என்று பணத்தை கொடுத்துவிட்டேன்

**நல்ல காரியம் செய்தீர்கள் இந்தாங்க அக்கா சுண்டல்**

ஏது?

**லீலாவின் மாமியாருக்கு சுண்டல் பிடிக்குமாம். அதனால் அவர்கள் பெயரால் எல்லோருக்கும் சுண்டல் கொடுத்தாள். அடுத்த தெருவில் ஒரு அம்மா ரொட்டி கொடுத்தார்கள். எங்கள் பக்கத்து வீட்டு மேரியின் மகள் 30 வயதில் விபத்தில் இறந்து போனாளே. மேரி கல்லறையில் இருந்து அழுது கொண்டிருந்தாள். பக்கத்தில் மருமகனும் கைக்குழந்தையும் அழுதுகொண்டிருந்தார்கள். பார்க்க பாவமாக இருந்தது. சரி நீங்க பூசைக்கு வரவில்லையா?**

நான் காலையிலேயே போய்விட்டு வந்துவிட்டேன்.

வருடத்தில் ஒரு நாளைக்கு கல்லறைக்கு போனோம், வந்தோம், தானதர்மம் செய்தோம், திருப்பலி ஒப்புக்கொடுத்தோம் என்றில்லாமல் தினமும் திருப்–பலியில் குருவானவர் மரித்தவர்களுக்காக செபிக்கும் போது நாமும் நம் குடும்பத்தில் இறந்தவர்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் செபிக்க வேண்டும். வருடத்தில் ஒருமுறை கல்லறையை சந்தித்தால் மட்டும் போதாது மற்ற புண்ணியங்களும் செய்ய வேண்டும். யாரும் நினையாத ஆன்மாக்கள் நிறைய உண்டு. அவர்களுக்காகவும் செபிக்க வேண்டும். சரி பூசைக்கு நேரமாச்சு போ

**சரி அக்கா.**

## உத்தரிக்கும் ஆன்மாக்களுக்காகச் செபம்



**‘என்றும் வாழும் தந்தையே! உம் தெய்வ மகன் இயேசுவின் மிகவும் விலையேற்றப்பட்ட மாசற்ற இரத்தத்துடன் இன்று உலகம் எங்கும் நிறைவேற்றப்படும் திருப்பலிகளை ஒன்று சேர்த்து உத்தரிக்கும் சிறையிலுள்ள ஆன்மாக்களுக்காகவும், உலகெங்குமுள்ள பாவிக-ளுக்காகவும், திருச்சபை-யிலுள்ள பாவிகளுக்காகவும், என் இல்லத்திலும், குடும்பத்திலும் உள்ள பாவிகளுக்காகவும் உமக்கு பரி-காரமாக ஒப்புக் கொடுக்கின்றோம்’**

இச்செபத்தை அன்பு பக்தியுடன் செபிக்கும் ஒவ்வொரு முறையும் உத்தரிக்கும் சிறையிலிருந்து 1000 ஆன்மாக்களை விடுவித்து விண்ணகம் சேர்ப்பதற்காக புனித ஜெர்த்ருத்துக்கு வாக்களித்திருக்கின்றார் இயேசு.

# கல்லறை

1) கருவறை எழுதித் தந்த கட்டுரைக்கு முடிவுரை எழுதும் இடம்.
2) மனிதன் கடைசி, இறுதி என்று எண்ணிக் கொண்டிருக்கும் தொடக்கம்.
3) வாழ்வதற்கும் இறப்பதற்கும் பாடம் கற்றுத்தரும் பாடசாலை.
4) நம் முன்னோர்கள் தங்கள் வாழ்வால் எழுதி வைத்த அழி-யாக் கல்வெட்டு.
5) எல்லா மனிதரும் எந்த தொல்லை-யுமின்றி இளைப்பாறும் இடம்.






## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.

# செயற்பாட்டின் பின்னணியை அறிவது



மனித உறவை வளர்க்க ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள வேண்டும். தன்னைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒருவருடன்தான் தனது பிரச்சினைகளை ஒருவர் பகிர்ந்து கொள்வார். ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள அவரது கருத்துக்கள், எண்ணம், விருப்பு, வெறுப்பு, கல்வியறிவு மட்டம் போன்றவைகளை அறிதல் வேண்டும். அதுபோதுமா? அவரது உணர்வுகளையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும். அது மட்டுமல்ல செயற்பாட்டின் பின்னணியையும் அறிதல் வேண்டும். செயலைப் பிரித்துப் பார்க்காது, அச்செயலுக்கு பொருத்தமான சூழலின் பின்னணி என்ன என்பதை நோக்குதல் வேண்டும். அதன் பின்னணியை அறிந்தால் அச்செயலுக்கான காரணத்தைப் புரிந்துவிடலாம். ஒரு காரணமுமில்லாத மனித செயற்பாடுகள் எதுவுமில்லை.

ஒரு தம்பதியினர் தமது திருமணத்தின் பின் தனிவீட்டில் குடித்தனம் நடத்தி வந்தனர். ஒருநாள் காலையில் கணவன் வேலைக்குச் செல்வதற்காக வெளிக்கிடுவதற்காக உடுப்பு அலுமாரியைத் திறந்து உடுப்புக்களை எடுத்தபோது, மனைவியிடம் கொடுத்த பணம் எல்லாம் உடுப்புக்களின் இடையில் இருப்பதைக் கண்டார். மனைவியை அழைத்து "இனிமேல் உடுப்புக்களின் அடியில் பணத்தை வைக்க வேண்டாம். பணம் வைப்பதற்கு நாம் வாங்கிய பெட்டியில் வையுங்கள்" என்று கூறிவிட்டு வேலைக்குச் சென்றுவிட்டார். மறுநாளும் காலையில் வேலைக்குச் செல்ல உடைகளை அலுமாரியில் எடுத்தபோது திரும்பவும் உடைகளுக்கடியில் பணம் இருப்பதைக் கண்டு அவருக்கு கோபம் வந்துவிட்டது. மனைவியைக் கோபத்தில் ஏசிவிட்டார். இனிமேல் இப்படிச் செய்ய வேண்டாம் என்று கூறினார். மறுநாளும் காலையில் பார்த்தபோது பணம் அங்கு வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு மனைவியுடன் கோபிக்காது கலந்துரையாடினார். அப்பொழுது அவருக்குப் பல உண்மைகள் புரியவந்தன.

மனைவி சிறு பெண்ணாக இருந்தபோது அப்பா இறந்துவிட்டார். பாதுகாப்பில்லாத பய உணர்வு அவளுக்குள் இருந்தது. கணவன் இல்லாத நேரம் கணவனது உடைகளுக்குள் பணத்தை வைப்பது பாதுகாப்பானது என மனைவி உணர்ந்தாள் என்பதைப் புரிந்து கொண்டார்.

நாம் எமது எல்லாச் செயற்பாடுகளின் மூலமும் மற்றவருக்குச் செய்தி கொடுக்கின்றோம். நாம் உட்கார்ந்திருக்கும் விதங்களில் எல்லாம் ஓர் அர்த்தமுண்டு. ஆகவே ஒரு நிகழ்ச்சியை அதன் பின்னணியில் இருந்து வேறுபடுத்திப் பார்ப்பது தவறாகும்.

ஒருவர் தமது கருத்தை முழுமையாக நேரடியாகக் கூறுவதில்லை. கீழ் மனதின் உந்துதலால் நடத்தைகளில் மாற்றம் ஏற்படுகின்றது. எமது வார்த்தைகளின் மூலம் மட்டுமல்ல எமது நடை, உடை, பாவனை, குரல்தொனி, பார்வை போன்றவற்றின் மூலம் வெளிப்படுத்தும் செய்தியைப் புரிந்து கொள்ளப் பழகுதல் வேண்டும்.

வார்த்தைகளின் மூலம் நேரடியாகக் கூறும் செய்தியையும், நேரடியாகக் கூறாது விடினும் அவரது செயல்களின் மூலம் தரும் செய்தியையும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். தன்னைப் புரிந்து கொள்பவருடன் நெருங்கிப் பழக விருப்பம் ஏற்படும். பொதுவாகத் தன்னைப் புரிந்து கொண்டவர்களிலேயே அன்பு வைக்க முயலுவார்கள். இதை மனதிற் கொண்டு சிந்திப்போம்! செயற்படுவோம்!!

# தூக்கத்தைக் கெடுக்கும் முழு நிலவு

## சுவிஸ் விஞ்ஞானிகள் தகவல்

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் நிம்மதியான தூக்கத்தைப் பாதிக்கும் ஆற்றல் முழுநிலவுக்கு (பௌர்ணமி) உண்டு என்ற தகவல் வெளியாகியுள்ளது. பஸஸ் பல்கலைக்கழகம் உட்பட சில ஆய்வு நிறுவனங்கள் இணைந்து புகைத்தலோ அல்லது மதுபானம் அருந்தும் பழக்கமோ அற்ற 33 பேரின் தூக்கம் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின் மூலம் இது தெரிய வந்துள்ளது. இதில் 17 பேர் 21முதல் 31 வயதுக்குட்பட்டவர்கள் எஞ்சிய 16 பேரும் 57 முதல் 74 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முழுநிலவு தோன்றியபோது இவர்கள் தமது தூக்கத்தில் இடர்களை எதிர்நோக்கியுள்ளனர். அவர்கள் தூங்கிய பகுதியை இருட்டாக்கியபோது நன்றாகத் தூங்கியுள்ளனர். உடலின் செயற்பாட்டை ஒழுங்கு முறையாக மேற்கொள்ள உதவும் மெலடோனின் எனும் ஹார்மோன் உற்பத்தி பாதிக்கப்படுவதாலேயே தூக்கமின்மை ஏற்படுவதாக ஆய்வின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஆதாரம்* : **Tamilwin**

# இதயத்திற்கு இசைவான இசை



மனிதன் கேட்டு உணரும் முதல் இசை எது? அவன் தன் தாயின் வயிற்றினுள் இருக்கும்போது கேட்டு உணர்கின்ற தாயின் "டப் லப்" என்கிற ஒலி என்பர் ஆய்வாளர்கள். தாய் வயிற்றில் குழந்தை உருவாகிய 20வது வாரத்தில் வெளியிலிருந்து வரும் எல்லாவித ஒலிகளையும் அந்த உயிர் கேட்கும் என்கின்றனர் அடுத்தக் கட்ட ஆய்வாளர்.

18வது வாரத்தில் இசையைக் கேட்டு மகிழும் உணர்வைப் பெறுகின்றது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. "குழந்தை வயிற்றில் இருக்கும் போது 19, 20, 23 ஆகிய மூன்று வாரங்களில் தினமும் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு மணி நேர அளவுக்கு சீராண, இதமான, கர்நாடக அல்லது மேற்கத்திய இசையை தாய் கேட்டு வந்தால், தாய்க்குச் சுகமான பிரசவம் உண்டாகும்.

கருவிலேயே இசையைக் கேட்டு வளர்ந்த குழந்தை பிறந்த நான்காவது நாளே இசை எந்தப் பகுதியிலிருந்து வருகிறதோ அந்தத் திசையில் தலையைத் திருப்பி இசையை ரசிக்குமாம். தினமும் குறிப்பிட்ட நேரத்தில் நல்ல இசையை கேட்கும் பழக்கத்தை கர்ப்பிணிப் பெண்கள் ஏற்படுத்திக் கொண்டால் என்றாவது ஒரு நாள் இசையை கேட்காமல் இருக்கும்போது வயிற்றில் உள்ள குழந்தை தாயின் வயிற்றை உதைத்து, உடலை அசைத்து அமைதியில்லாமல் தவிக்குமாம். வயிற்றுக்குள்ளேயே இசைக்குப் பழகிப்போன குழந்தைகள் பிறந்து வளரும் போது மற்ற குழந்தைகளைவிட சிறப்பான முறையில் பல விடயங்களை எளிதாகக் கற்றுக் கொள்ளும். இசைப்பயிற்சிக்கு அனுப்பினால் மற்ற சிறுவர்களைவிட சுலபத்தில் இசையைக் கற்றுக் கொள்ளும்.

# விசுவாசத்தைக் காக்க விழிப்பாயிருங்கள்

அருட்பணி. பிலிப் I.V. Dei

## பைபிள் சபைகளின் நோக்கம்

தாங்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்கின்றவர்கள் என்று சொல்லிக்கொண்டு, தன்னிச்சையாகத் தனிப்பட்ட பைபிள் சபைகளைத் தொடங்கும் தனிநபர்கள், **கத்தோலிக்க திருச்சபையின் செல்வாக்கை மழுங்கச் செய்வதையே தங்களின் ஒரே நோக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள்.** இவர்கள் கத்தோலிக்க திருச்சபையின் எதிரிகளாகச் செயற்படுகிறார்கள். இதனால் இவர்கள் விசுவாசத்தில் பலவீனமுள்ள ஒரு சில கத்தோலிக்கருக்கு வலைவீசி, இவர்களை முதலில் மதம் மாற்றுவார்கள். கத்தோலிக்கராயிருந்து பைபிள் சபைக்குப் போனவர்களைக் கொண்டே இவர்கள் மேலும் விசுவாசத்தில் பலவீனமுள்ள பல கத்தோலிக்கருக்கு வலை வீசுவார்கள். தங்கள் சபைகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் இந்த முறையை இவர்கள் இஸ்லாமிடரிடமோ, அல்லது உறுதியான இந்துக்களிடமோ காட்ட முடிவதில்லை.

தங்கள் சபைகளுக்குள்ளே இழுத்தெடுக்கப்படுவோருக்கு இவர்கள் முழுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்கள். கிறிஸ்து முழுக்கு ஞானஸ்நானம் பெற்றார். எனவே இதுவே சரியானது என்பார்கள். தலை மீது தண்ணீர் ஊற்றும் கத்தோலிக்கரின் குழந்தைத் திருமுழுக்கால் அவர்கள் இரட்சிக்கப்படுவதில்லை என்று எடுத்துக் கூறுவார்கள். திருமுழுக்கைப்பற்றி நன்கு தெரியாது மதம் மாறியவர்கள், இவர்கள் சொல்வதுதான் சரி என்று அதை அப்படியே விழுங்கிவிடுவார்கள். இவ்வாறு கத்தோலிக்க திருச்சபையை மட்டந்தட்டியே இவர்கள் கத்தோலிக்கரை இழுத்தெடுக்கின்றார்கள்.

முதல் பைபிள் சபை அமெரிக்காவில் 1905ஆம் ஆண்டு நாயகரா என்ற இடத்தில் தொடங்கப்பட்டது. இதுவே தூய ஆவியின் பெயரில் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராகத் தொடங்கப்பட்ட முதல் பைபிள் சபை. இதைத் தொடர்ந்து, அமெரிக்காவிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் இதைப்போன்ற பல பைபிள் சபைகள் புற்றீசல்கள்போல் எண்ண முடியாத அளவுக்குத் தொடங்கப்பட்டன. இவ்வாறு இன்று கோடிக்கணக்கான பைபிள் சபைகள் உலகம் முழுவதிலும் பரவிக்கிடக்கின்றன. கத்தோலிக்க திருச்சபையைக் குறிவைத்து ஆரம்பிக்கப்படும் பைபிள் சபைகளுக்கு ஊழியம் என்ற பெயரில் ஏராளமான பணம் அள்ளி இறைக்கப்படுகின்றது. இலங்கை உட்பட உலகின் எல்லா வறிய நாடுகளிலும் பைபிள் சபைகளை உண்டாக்குவோருக்கு அமெரிக்காவில் இருந்து ஏராளமான பணம் வந்துசேருகின்றது. பைபிள் சபைகள் கத்தோலிக்க திருச்சபைக்குப் பாதகத்தை உண்டாக்கும் சாத்தானின் சதிவலைகள் என்பதைக் கத்தோலிக்கர்கள் மறந்துவிடக்கூடாது.

தொடரும்....

# சிந்தனைத் துளிகள்

- பணத்தால் அழகான நாயை விலைக்கு வாங்கலாம். ஆனால் நாயின் வாலைப் பணம் ஆட்டுவிக்க முடியாது
- ஏழைகளை ஆதரிக்க உங்களிடம் பணமில்லையா? பரவாயில்லை. அவர்களைக் கனிவோடு பார்க்க கண்களும், அவர்களைச் சென்று கவனிக்கக் கால்களும் உங்களுக்கு இருக்கின்றன.
- செல்வம் ஆழம் காணமுடியாத பெரும் கடல். அதில் பொறுமை, மனச்சாட்சி, உண்மை முதலியன மூழ்கிவிடும்
- நாம் பிறருக்கு கொடுக்கக் கூடிய செலவற்ற சிறந்த செல்வம் முன்மாதிரிகை.




## பொதுக்காலத்தின் 31 ஆம் ஞாயிறு 03.11.2013

**வாசக விளக்கம்:** நாம் எப்பொழுதும் முன்சார்பு எண்ணங்களை அகற்றி, திறந்த மனப்பான்மை உள்ளவர்களாக வாழ இன்றைய முதல் வாசகம் அழைக்கின்றது. திறந்த மனப்பான்மையோடும், அன்போடும் பிறரை அரவணைக்கும்போது அவர்களில் மனமாற்றம் தானாகவே நிகழும். தெசலோனிக்கேய மக்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக விரைவில் நிகழும் என நம்பி வேலை செய்யாமல் சோம்பித் திரிந்த நிலையில் வதந்திகளை நம்பாமல் தங்களது வேலைகளிலும், குடும்ப வாழ்விலும், அன்றாடக் கடமைகளிலும் கவனம் செலுத்த வேண்டும். தூய பவுல் இயேசுவைக் கண்டு மனம் மாறிய நிகழ்ச்சியை இன்றைய நற்செய்தி தருகின்றது. பாவிகள் தீர்ப்பிடப்பட வேண்டியவர்கள் அல்ல, மாறாக அவர்கள் திருந்தி வாழ வேண்டியவர்கள் இயேசு சக்கேயுவின் மாண்பை மதிக்கின்றார். அவர் முழு மனிதனாக வாழ சமூக அங்கீகாரத்தைப் பெற்று தருகின்றார். ஒருவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் எந்நிலையில் இருந்தாலும் அவரை நாம் மதிக்க வேண்டும். மனித மாண்போடு நடத்த வேண்டும். சக்கேயு இயேசுவைக் காண துடித்தான். கண்டதும் மனம்மாறினான். புதுவாழ்வு பெற்றான். நாமும் இயேசுவைப் போல மனித மாண்பை மதித்து வாழ இறையருள் வேண்டுவோமாக..

முதல் வாசகம் : சா.ஞா 11:22-12:2

நீர் எல்லாம் வல்லவராய் இருப்பதால் எல்லார் மீதும் இரங்குகின்றீர்

பதிலுரைப்பாடல் : என் கடவுளே என் அரசே உம் பெயரை என்றும் போற்றுவேன்

இரண்டாம் வாசகம் : 2 தெசலோ 1:11-2:2

நம் ஆண்டவராகிய இயேசுவின் பெயருக்கும் உங்களுக்கும் மேன்மை உண்டாகுக.

நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :

அல்லேலூயா அல்லேலூயா தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். அல்லேலூயா

நற்செய்தி வாசகம் : லூக் 19:1-10

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

திறந்த மனப்பான்மையோடும், அன்போடும் அனைத்துலக மக்களையும் வழிநடத்திச் செல்லும் தூய திருச்சபையையும் அதன் தலைவரான பாப்பரசர், மேற்றா -ணிமார், குருக்கள், துறவியர் ஆகிய அனைவரையும் பொதுநிலை ஊழியராய்ப் பணியாற்றும் சகலரையும் நிறைவாக ஆசீர்வதித்துக் காத்து வழிநடத்தியருள வேண்டுமென்று..

இறந்தவர்களை நினைவு கூரும் இம்மாதத்தில் யுத்தம், வன்செயல் சுனாமி மழை, புயல், வெள்ளம், விபத்து போன்றவற்றால் இறந்த சகல ஆன்மாக்களுக்கும் யாரும் நினையாத ஆன்மாக்களுக்கும் இளைப்பாற்றி அளிக்கவும் எமது நாட்டு மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் தீரவும் திறந்த மனப்பான்மையோடு நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று...

இறைவனின் அழைப்பிற்கு நாம் எப்பொழுதும் தயாராக இருக்கவும் மற்றவர்களை முன்னேற்ற நாம் உழைப்பதும் இறைத்தேடலே என உணரவும், இறையரசை தேடவும் உலக செல்வங்களை மறக்கவும் "மனிதர்களை குறை நிறைகளோடு மனிதர்களாக மதிக்கவும், ஏற்கவும் வேண்டி நல்ல உள்ளத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 32 ஆம் ஞாயிறு 10.11.2013

**வாசக விளக்கம்:** மறுவாழ்வு உண்டு என நம்பிய யூத கிறிஸ்தவர்கள் அரசனின் சட்டத்தை எதிர்த்து மரணத்திற்கு உட்பட்டனர். மறுவாழ்வு பற்றிய தங்களின் விசுவாசத்திற்கு சான்றுபகர உயிர்விட்ட ஒரு யூதக் குடும்பத்தின் சான்றை இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கின்றது. நாம் இறைவனுக்கு உகந்தவாறு வாழ வேண்டுமாயின் நற்செய்தி பரவ செபிப்பதும், நற்செய்தியின்படி நமது சொல்லும் செயலும் அமைவதும் அவசியம் எனத் தனது உள்ளக் கிடக்கையை இன்றைய இரண்டாவது வாசகத்தின் மூலம் பதிவு செய்கின்றார் தூய பவுல் அடியார். மறுவாழ்வின் மகத்துவத்தை விளக்கும் இன்றைய நற்செய்திப் பகுதியானது சதுசேயர்கள் மோசேயின் சட்டத்தை மேற்கோள் காட்டி இயேசுவிடம் கேட்ட கேள்விக்கு இயேசு மோயிசனையே உதாரணமாகக் கொண்டு பதில் அளிப்பதைப் பார்க்கின்றோம். இழப்பிற்குப் பின் வாழ்வு இருக்கிறது நம்புகிறவர்கள் அவர்களது வாழ்வை வாழ்கிறார்கள் வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றுகிறார்கள் உயிர்த்த இயேசுவில் நம்பிக்கை கொள்வதே நம் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளம் இந்த விசுவாச மனவலிமையை வளர்த்துக் கொண்டால் நம் வாழ்வின் துன்ப துயரங்களும் சிக்கல்களும் ஒன்றுமில்லாமல் போய்விடும். எனவே நாமும் எமது விசுவாசத்தை அதிகரித்தருளும் ஆண்டவரே, என்று வேண்டுவோமாக.

முதல் வாசகம் : 2 மக்கபேயர் 7:1-2,9-14

நாங்கள் இறந்த பின் என்றென்றும் வாழுமாறு அனைத்துலக அரசர் எங்களை உயிர்த்தெழச் செய்வார்.

பதிலுரைப்பாடல் : விழித்தெழும்போது ஆண்டவரே உம் உருவம் கண்டு நிறைவடைவேன்.

இரண்டாம் வாசகம் : 2 தெச 2:16-3:5

நல்லதையே சொல்லவும், செய்யவும் உங்களை ஆண்டவர் உறுதிப்படுத்துவாராக.

நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :

அல்லேலூயா அல்லேலூயா கிறிஸ்துவே இறந்தோருள் முதலில் உயிர்பெற்று எழுந்தவர் இவருக்கே மாட்சியும் ஆற்றலும் என்றென்றும் உரியன அல்லேலூயா

நற்செய்தி வாசகம் : லூக் 20:27-38

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

அனைத்து மக்களையும் மறுவாழ்வுக்கு அழைத்து செல்லும் தூய திருச்சபையும், அதன் தலைவரான பாப்பரசர், மேற்றாணிமார், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் வேண்டிய நம்பிக்கையில் திடப்படுத்தி வழிநடத்தியருள வேண்டுமென்று...

எமது நாட்டின் மக்களையும், தலைவர்களையும் நிறைவாக ஆசீர்வதிக்கவும், நம்மைத் தீய வழிக்கு இட்டுச் செல்லும் பாவ நாட்டங்களை நாம் மறந்து நீதியின் பாதையில் வழிநடக்கவும், ஏழை எளியவர்களின் வாழ்வு நிலை உயரவும் ஏற்றத் தாழ்வுகள் மறையவும் வரமருள வேண்டுமென்று...

உயிர்த்த இயேசுவில் நம்பிக்கை கொள்வதே எமது கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளம் என்பதை நாம் புரிந்துகொண்டு நம்பிக்கையுடன் எம் வாழ்வை முன்னெடுக்கவும், விசுவாசத்திற்கு தடையாக இருக்கும் பாவ எண்ணங்களை அகற்றவும், நற்செய்தியின் மதிப்பீடுகளில் நிலைத்து வாழவும் வரமருள வேண்டுமென்று...




**"அவரிடம் வாழ்வு இருந்தது. அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள் அதன்மேல் வெற்றிக்கொள்ளவில்லை"**



கார்த்திகை மாதம், ஒளியின் விழாவாகிய தீபாவளியைக் கொண்டாடுகின்றோம். தீமையை வென்று அறத்தை நிலைநாட்டியதைத் திருநாளாகக் நம் இந்து சகோதர சகோதரர்கள் இதை கொண்டாடுகின்றனர். கத்தோலிக்கராகிய நாம், தீபத் திருநாளாக இதைக் கொண்டாடுவதற்குக் காரணம் இருளிலும் இறப்பின் பிடியிலும், இருப்போர்க்கு ஒளிதர விண்ணிலிருந்து நம்மைத் தேடி வந்த விடியல் என்று செக்கரியா மனுவுரு எடுத்த இயேசுவைப் புகழ்கின்றார் (லூக் 1:75)

அதாவது பாவம் சூழ்ந்த இருள் வாழ்விலிருந்து நம்மை மீட்ட இயேசு கிறிஸ்துவை அகத்தின் இருளை அகற்றும் அருட்பெருஞ்சோதியாக நாம் அனுபவிக்கின்றோம், எனவே தான் நாம் இத்திருநாளைக் கொண்டாடுகின்றோம். இத்திருநாள் நமக்கு உணர்த்துவது என்ன?

பாவ இருள் சூழ்ந்த உலகம் இருக்கும் நிலைகண்டு அதை உருவாக்கிய இறைவனே. இருள் போக்கும் ஒளியாக இவ்வுலகிற்கு வந்தார். அவரைத்தான் யோவான் தொடக்கத்தில் வாக்கு இருந்தது.... அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது (யோவா 1:1). அவரிடம் வாழ்வு இருந்தது. அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள் அதன்மேல் வெற்றிக்கொள்ளவில்லை" என்கிறார் (யோவா 1:4-5). இவர் எல்லா மனிதர்களுக்கும் உரியவர். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் பிறந்தாலும், ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் வளர்ந்திருந்தாலும் இவர் எல்லா மனிதருக்கும் சொந்தக்காரர். இதை உணர்ந்த லூக்கா தனது நற்செய்தியில் இம்மீட்பை பிற இனத்தாருக்கு வெளிப்பாடும் அருளும்.. என்கிறார் (லூக் 2:32)

## நானே உலகின் ஒளி

வாழ்வைத் தருபவரும், வாழ்வுக்கு ஆதாரமாக இருப்பவரும், வாழ்வை வளர்த்தெடுப்பவரும், வாழ்வினைப் பற்றி என்றும் பேசி, வரலாற்றில் வாழ்வை இழந்து தவிப்பவர் பக்கம் நின்று அவர்கள் இழந்த வாழ்வை மீண்டும் விடுதலை வாழ்வாகப் பெற்றுத் தருபவரும் இறைவன் ஒருவரே. ஒளியான அவர் இந்த உலகில் இருந்தபோது நானே உலகின் ஒளி என்றார் (யோவா 8,12:9,5:12-46). அவருடைய சொல்லிலும், செயலிலும், வாழ்விலும், சாவிலும், உயிர்ப்பிலும், விண்ணேற்பிலும், அவர் உலகின் ஒளியாக இருந்தார், இருக்கிறார்.

## நீங்கள் உலகின் ஒளி

நானே உலகின் ஒளியென்றவர், நாம் அனைவரும் அவரைப்போல் இவ்வுலகின் ஒளியாகத் திகழ வேண்டுமென்றார் (மத் 5:14) ஒளியென்றால் உண்மையில் என்ன பொருள், மத்தேயு நற்செய்தியை நாம் தொடர்ந்து வாசிக்கின்றபோது நாம் பிறருக்குச் செய்யும் நற்செயல்களின் வழியாக நாம் உலகில் ஒளிர்ந்திடவும், நம் நல்ல செயல்களைப் பார்ப்பவர்கள் வானகத் தந்தையை வாழ்த்த வேண்டும் என்பதுதான் (மத் 5:16) இறைமகன் இயேசு கிறிஸ்துவின் விருப்பம்.

## இதயத்திலிருந்து இருளா ஒளியா?

நம் வீடுகளில் நாம் உபயோகிக்கும் எல்லாப் பாத்திரங்களுக்கும் இருபக்கங்கள் உண்டு. ஒன்று உள்பக்கம், மற்றொன்று வெளிப்பக்கம். இயேசுவின் போதனைகளில் மனிதருக்கும் இதேபோல் உள்பக்கம், வெளிப்பக்கம் உண்டு என்கிறார் (லூக் 6:45) அவருடைய மக்கள் அனுபவத்தில் மக்கள் அதிகம் முக்கியத்துவம் தருவது வெளிப்பக்கத்திற்கு மட்டுமே என்பதை உணர்ந்தார். இந்தத் தவறைச் சுட்டிக்காட்டி ஒவ்வொரு மனிதரும் தனது உள்பக்கத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள இயேசு அழைக்கிறார் (லூக் 11:38-41). அவ்வாறு தூயதாக்கப்பட்ட உள்ளங்களில் ஒளி குடிகொள்ளும் (மத் 6:22). ஒவ்வொரு நாளும் உடைகளை மாற்றி, நன்றாகக் குளித்து உடலைத் தூய்மையாக வைக்கும் நாம் உள்ளத்தில் மண்டிக்கிடக்கும் இருளென்னும் பாவக் குப்பைகளைக் கூட்டி அள்ளி வெளியே வீசியெறிய மனமில்லாமல் ஏன் வாழ்கிறோம்?

## விரும்புவது ஒளியா? இருளா?

நம் இதயங்களில் ஒளியேற்ற இறைவன் என்றென்றும் விரும்புகிறார். அவ்வொளியை அவர் நமக்கு இலவசமாகத் தந்து ஒளிரச் செய்திருக்கிறார் (2 கொரி 4:6). நம் வாழ்வில் புயல் வீசலாம், பெரும் வெள்ளம் அடித்துச் செல்லலாம், ஏன் பூகம்ப அதிர்வில் நாம் தடுமாறலாம், ஆனால் அந்த வல்லமைமிக்க இறை ஒளி நம்மிடம் இருக்கும்போதே நாம் பயணித்தால் (யோவா 12:35), எந்தத் தீமையும் நம்மை அணுகாதபடி அந்த ஒளிவடிவான தெய்வமே நம்மை பாதுகாத்து வழிநடத்துவார். எனவே நம்மைப் பொறுத்தவரை என்றும் நம் இதயங்களில் இருள்சார்ந்த அனைத்தையும் அகற்றி, ஒளிசார்ந்த வாழ்வுண்மைகளோடு நம் இதயங்களை துடிக்கச் செய்வோம். ஆனால் புனித யோவானின் மனிதர் பற்றிய அனுபவம் இதற்கு முற்றிலும் மாறுபட்டே இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஒளி இருளில் ஒளிர்கின்றது (யோவா 1:5). ஆனால், மனிதர்கள் ஒளியைவிட இருளை நேசித்தார்கள் என்கிறார் அவர் (யோவா 3:19). சகமனிதரை மதித்து, மனித மாண்போடு அவர்களை அன்பு செய்து வாழாதவர் தீமையை நேசிக்கிறவர்கள். தீமையைச் செய்யும் ஒவ்வொரு மனிதரும் ஒளியை வெறுக்கிறார் (யோவா 3:20). இதற்கு மாறாக என்றும் நம்மையை நாடி வாழ்பவர்கள், நன்மையை பிறருக்குச் செய்து வாழ்பவர்கள், ஏன் தமக்குத் தீமை செய்தாருக்கும் நன்மையை மட்டும் திரும்பச் செய்பவர்கள் ஒளியை நேசிக்கிறார்கள். இவர்கள் இறைவனை அறிந்தவர்கள். இறைவனில் வாழ்பவர்கள். மனிதர் நடுவிலேயே உயிர்வாழும் இறைவனின் பிரசன்னத்தை அறிந்துணர்ந்து கொண்டாடுபவர்கள். இவர்கள் இறைவனிடம் இருந்தே புறப்பட்டு வந்தவர்கள், இறைவனின் திட்டத்தை எங்கும் எதிலும் நிறைவேற்றி, இறைவனை நோக்கி என்றும் பயணிப்பவர்கள். இவர்கள் வாழ்வில் நிறைவு பெற்றவர்கள். விண்ணக வாழ்வை ஏற்கனவே மண்ணகத்தில் சுவைத்தவர்கள். எனவேதான் இவர்களால் இறைவனிலும் காணமுடிகிறது. இவர்களைப்போல் நாமும் உருவாகிட இத்தகைய ஒளி விழாக்களை நாம் கொண்டாடி மகிழ்வோம்.

# மரியன்னையின் ஆண்டுக்க

## அன்புக்குரிய சகோதர, சகோதரிகளே!

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபை பற்றிய கோட்பாட்டு விளக்கமான "லூமன் ஜென்சியம்" எனப்படும் ஏட்டில், பரலோக அன்னையாம் கன்னி மரியாள் பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: "ஏனெனில் வானவர் தூது சொன்னதும் கன்னி மரியா தன் உடலிலும், உள்ளத்திலும் கடவுளின் வார்த்தையை ஏற்றார்; வாழ்வை உலகிற்கு அளித்தார். எனவே அவர் உண்மையாகவே கடவுளும் மீட்பருமானவரின் தாய் என ஏற்றுக் கொள்ளப்பெற்று, போற்றப் பெறுகின்றார். தம் மகனின் பேறுபலன்களை முன்னிட்டு அவர் சீரிய முறையில் மீட்கப் பெற்று, நெருங்கிய, பிரிக்க முடியாத முறையில் அவரோடு இணைக்கப் பெற்று இருக்கின்றார். இறைமகனின் தாய் என்ற அந்த உன்னத நிலையாலும் பெருமையாலும் அணிசெய்யப் பெறுகின்றார். இதன் காரணமாக, தந்தைக்கு மிகவும் உகந்த மகளாகவும், தூய ஆவியின் திருக்கோயிலாகவும் திகழ்கின்றார். இந்த மேன்மையாக அருள் கொடையினால் வானகத்திலும் வையகத்திலுமுள்ள மற்ற எல்லாப் படைப்புக்களையும் விட மிகவும் சிறப்புற்று விளங்குகின்றார். ஆயினும் அதே நேரத்தில் ஆதாமின் வழித்தோன்றலாகவும் இருப்பதால் மீட்கப் பெறவேண்டிய மக்கள் அனைவருள் அவரும் ஒருவராகின்றார்.......... கத்தோலிக்க திருச்சபையும் தூய ஆவியினால் கற்பிக்கப்பெற்று, பிள்ளைக்குரிய வாஞ்சையோடும் பற்றோடும் அன்புமிகு, தாயாக அவரை ஏற்கின்றது" (திருச்சபை எண் 53).

## மரியாள் : கடவுளின் தேர்ந்து கொள்ளப்பட்ட ஊழியர்

மீட்பு வரலாற்றில் மரியாளின் பங்களிப்பு தொடர்பாக காலங்காலமாக திருச்சபை வலியுறுத்தி வந்த விசுவாசத்தையே திருச்சங்கமானது இவ்வாறு மீள் வலியுறுத்தி நிற்கின்றது. உலக மீட்பரான, கடவுளின் ஒரே பேறான மகனுக்கு தாயாக மரியாள் அழைக்கப்பட்டது கடவுளின் பிரத்தியேகமான தெரிவினாலேயோகும். மரியாளின் உள்ளம் தனக்கு அருளப்பட்ட அழைப்பின் மேன்மையை குறித்து உவகையால் நிரம்பியது. அவ்வழைப்பு அவரை முழுமையாக ஆட்கொண்டுள்ளது. "எல்லாம் வல்லவர் எனக்கு அரும்பெரும் காரியங்கள் பல புரிந்துள்ளார்" என இறைபுகழ் பாட வைத்தது. மனுக்குலத்தின் ஒரு மகள், சாதாரண பணிப்பெண், இறைமகன் மனித உடலெடுக்கும் நற்கருணைப் பேழையாய் இருக்க கடவுளின் தனிப்பட்ட தெரிவானார். "அருள் நிறைந்தவளே வாழ்க" என வானதூதர் வாழ்த்துரை கூறியது கடவுளின் அனுக்கிரகம் அவருக்கு கிடைக்கப்பெற்று கடவுளின் தெரிவாக அவர் விளங்கியதால் மட்டுமன்றி, தூய ஆவி அவர் மீது நிழலிட்டு நித்தியத்திற்கும் தயார் செய்யப்பட்டிருந்த பணி அவரில் நிறைவு பெற்றதாலுமாகும். மரியாள் மனுக்குலத்தின் மெய்யான பிரதிநிதியாக அமைவதால் மனுக்குலத்தை மீட்க கடவுள் மனிதனாகும், மனுவுருவாதலெனும் பரம இரகசியம் சாத்தியமானது. மரியாள் இவ்வாறு இறை - மனித உறவின் பாலமாக, கடவுள் மனிதனாகி மனித வரலாற்றிற்குள் நுழைவதற்கான இணைப்பாக மாறினார். கடவுள் மனித-வர்க்கத்தோடு இறைவாக்கினர் வழியாக இனிமேலும் உரையாடுவதற்கில்லை. மாறாக மீட்பு வரலாற்றிற்கு மரியாளின் தனிப்பட்ட பங்களிப்பான கிறிஸ்துவின் மனித இயல்பினூடாகவே உரையாட விழைகிறார். உண்மையில் இது எத்துணை பெரிய பாக்கியம்!

கடவுள் தொடர்ந்தும் கட்புலனாகா தன்மையோடு இராமல் இறை மனிதனாக, இயேசு கிறிஸ்துவாக, எம்மோடு உடனிருக்கும் இம்மானுவேலாக எம்மத்தியில் எழுந்தருளி வர வாயிலாக அமைந்தது மரியாவேயாகும். இக்காரணத்தினாலேயே திருப்பலி ஒப்புக் கொடுப்பதன் மூலம் கிறிஸ்துவின் பிரசன்னத்தை பலிப்பீடத்தில் ஏற்படுததும் குருவை விட மரியாளே கிறிஸ்துவை முழுமையாக மனிதானாக்கி இம்மானுவேலாக, எம்மோடு இருக்கும் கடவுளாக இவ்வுலகிற்கு கையளிக்க கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட மேன்மையான பணியாளராக விளங்குகின்றார்.

கடவுளின் தாயாக தமக்குக் கிடைத்த அழைப்பிற்கு "ஆகட்டும்" என பதிலளித்ததன் மூலம் மரியாளே நாம் திருப்பலி நிறைவேற்றுந்தோரும் நினைவு கூறும் கல்வாரி பலியை சாத்தியமாக்கினார். அவரின் நம்பிக்கை நிறைந்த ஆகட்டும் இல்லையென்றால் மீட்புமில்லை திருப்பலியும் சாத்தியமில்லை. இந்த காரணத்தினாலேயே முத்திப்பேறுபெற்ற இரண்டாம் அருள் சின்னப்பர் "திவ்விய நற்கருணையின் பெண்" என மரியாவை வர்ணித்தார். ஏனெனில் ஆண்டவருடைய உடலையும், இரத்தத்தையும் அப்ப இரச வடிவங்களில் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் அருட்சாதன அடிப்படையில் நிகழ்வதை சில மட்டத்திற்கு முன் கூட்டியே மங்கள வார்த்தையின் போது மரியாள் இறைமகனை உடலும் இரத்தமுள்ள மனிதனாக கருத்தரித்தார். (நற்கருணையும், திருச்சபையும் 55) மரியாள் ஆகட்டும் என்று ஆண்டவரின் அழைப்புக்கு சொன்ன பதிலால் மட்டுமன்றி கிறிஸ்துவின் மீட்பளிக்கும் பணி நிறைவேறிய போது சிலுவையடியில் அவள் தாங்கிக் கொண்ட அளவற்ற வேதனைகள் மூலமாகவும் திவ்விய நற்கருணையின் பெண்ணாக, புதிய உடன்படிக்கையின் உன்னத குருவாக மாறினார்.

## மரியாள் : எங்களின் அன்பார்ந்த அன்னை

உண்மையில் சிலுவையடியிலேயே, புனித யோவான் நற்செய்தியில் குறிப்பிடுவதுபோல (19:25-27) மரியாளின் தாய்மைப்பணி புதிய சவாலான ஒரு பரிமாணத்தை பெற்றது. இயேசு தன் அன்புச் சீடரை மரியாளுக்கு மகனாக கொடுத்தபோதே தன் அன்னையை அச்சீடருக்கு தாயாகவும் கொடுத்தார். இவ்வாறு மீட்பரின் அன்னையாக இருந்த அவரின் தாய்மை பணி உலகு முடிவு வரை நீடிக்கப்பட்டது. கிறிஸ்துவின் சீடர்கள் அனைவரும் தங்கள் நற்கருணை அழைப்பிற்கு உண்மையுள்ளவர்களாக வாழ உதவுகின்ற பாரிய பொறுப்பானது மரியாளுக்கு ஒப்படைக்கப்பட்டது. இப்பணியானது, விண்ணக தந்தைக்கு அன்னைமரி வழங்கிய ஒத்துழைப்பிற்காகவும், கல்வாரியல் கிறிஸ்துவோடு அவரின் பலியின் முடிவுவரை அளவற்ற அன்போடு உடனிருந்தமைக்காகவும், (யோவா 19:26) கிறிஸ்துவால் மரியாளுக்கு வழங்கப்பட்ட பரிசாகும். இப்பரிசின் மூலம் திருச்சபைக்கும் எல்லா சீடர்களுக்கும் தாயாக இருக்க தம் அன்னை தகுதி வாய்ந்தவர் என மரியாளை குறித்து கிறிஸ்து கொண்டிருந்த நம்பிக்கை வெளிப்பட்டது.

கிறிஸ்துவை தம் பணியில் தட்டிக்கொடுத்து, பராமரித்து, பாதுகாத்து, பலப்படுத்திய மரியன்னையின் அன்பு தம் சீடர்களுக்கும் நம்பிக்கையையும், பராமரிப்பையும், ஊக்கத்தையும் அளிக்கும் உறுதியான அடையாளமாக அமையும் என கிறிஸ்து உணர்ந்திருந்தார். இவ்வாறு அவர் திருச்சபைக்கும் எம்மனைவருக்கும் நிறைவான விண்ணக தாயாக இருப்பார். கிறிஸ்துவினால் எம் அன்னையாகவும் இருக்க மரியாள் தேர்ந்து கொள்ளப்பட்டதால் தொடக்கம் முதலே திருச்சபையானது மரியாளுக்கு விசேட வணக்கத்தையும், உறவையும் காட்டிவந்தது. கிறிஸ்துவே மரியாளை எமக்கும் எம்மை மரியாளுக்கும் கையளித்தார். எனவேதான் கி.பி 431ம் ஆண்டு எபேசு திருச்சங்கத்தில் "மரியாள் இறைவனின் தாய்" என பிரகடனப்படுத்தப்பட்டதைப் போன்று 1964ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21ம் நாள் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் 3ஆம் அமர்வின் முடிவில் திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் மரியாள் திருச்சபையினதும் தாய் என்ற சத்தியத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்தார். கிறிஸ்து தமது மீட்புப் பணியை கல்வாரியில் நிறைவேற்றிய அத்தருணமே எம்மை மரியாளுக்கும் மரியாளுக்கு எம்மையும் ஒப்படைத்தது ஒரு சிறப்பம்சமாக காணப்படுகிறது. அவர் இவ்வுலகில் அதிகம் அன்பு செய்த நபரான தம் சொந்த அன்னையை எமக்கு தாயாக தந்ததிலே அவரது அளப்பரிய அன்பை நாம் உணர்கின்றோம். ஆகவே எம் நல் வாழ்விற்காக சிலுவையில் நொறுக்கப்பட்ட நித்திய உணவான அவரது உடலை மட்டும் தரவில்லை. மாறாக எமது சீடத்துவ பயணத்தில் எம்மை உறுதிப்படுத்தும் அவரது அன்னையையும், அன்னையின் அன்பையும் தந்துள்ளார். எனவே திவ்விய நற்கருணையும், மரியாளும் கிறிஸ்துவின் அன்பின் இருபெரும் கொடைகளாக அமைகின்றார்கள்.

## மரியாள் : எமது இல்லத்தின் அரசி

கிறிஸ்து தமது அன்னையை தன் அன்பு சீடரிடம் ஒப்படைப்பதை தொடர்ந்து வரும் வார்த்தைகளான "அந்நேரமுதல் அச்சீடர் அவரை தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்" (யோவா 19:27) என்பது மனதை ஆழமாகத் தொடும் செய்தியாக அமைகின்றது. இவ்வாறாக மரியாளின் பணியானது முடிவில்லாது தொடர்கிறது. அது சிலுவையோடு முடிந்து விடவில்லை. கிறிஸ்து மரியாளின் ஆகட்டும் என்பதன் அர்த்தத்தை நித்தியத்திற்குமான முடிவற்ற பணியாக்கிவிட்டார். மரியாள் இயேசுவை அவரின் பணி வாழ்வில் எவ்வாறு அன்பு செய்தாரோ, ஊக்கமூட்டினாரோ, பாதுகாத்தாரோ, பராமரித்தாரோ அதே போன்று கிறிஸ்துவின் எல்லா சீடர்களையும் பராமரிக்க அழைக்கப்படுகின்றார். உண்மையில் திருவிவிலியம் கூறுவதுபோல் "அந்நேரம் முதல் அச்சீடர் மரியாளை தம் இல்லத்திற்கு கூட்டிச்சென்றார்". "இதோ உம் மகன்" எனும் வார்த்தைகளால் கிறிஸ்து எம்மை மரியாளுக்கு மகனாக மகளாக ஒப்படைத்ததோடு, "இதோ உம் தாய்" என தம் அன்புச் சீடருக்கு மொழிந்த வார்த்தைகளால் விண்ணக அன்னையை எமக்கு தாயாக உவந்தளித்தார். எனவே அவரை நாம் எம் இல்லங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென கிறிஸது விரும்புகின்றார்.

அருளாளர் இரண்டாம் ஜோன்போல் பாப்பரசர் இதை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "கிறிஸ்துவின் சீடரின் வாழ்வில் மரியாளின் முக்கியத்துவம் இயேசுவின் ஒப்புதலோடு கல்வாரியில் தொடங்கிவைக்கப்பட்டது. இது பிள்ளைக்குரிய வாஞ்சையோடு எம்மை மரியாளிடம் ஒப்படைப்பதில் வெளிப்படுகிறது. கிறிஸ்துவின் சீடர் மரியன்னையிடம் தன்னை ஒப்புக்கொடுப்பதன் வழியாக அப்போஸ்தலர் யோவானை போன்று மரியாளை தம் இல்லத்திற்கு வரவேற்கிறார். தன்னுடைய உள்ளார்ந்த வாழ்வை உருவாக்கும் அனைத்திற்குள்ளும், தனது ஆளுமையின் கிறிஸ்தவ மனித அம்சங்கள் அனைத்திற்குள்ளும் அன்னைக்கு இடமளிக்கிறார். இவ்வாறு ஒவ்வொரு கிறிஸ்தவரும் மீட்பரின் தாய் தன் மகனின் சகோதர சகோதரிகளை பராமரிக்கும் தாய்க்குரிய அன்பிற்குள் உள்வாங்கப்பட ஆசிக்கிறார். (மீட்பரின் தாய் 45) எனவே, கல்வாரியின் அந்த சிலுவையிலிருந்தே கிறிஸ்துவின் ஒவ்வொரு சீடரும், ஏன் முழுத் திருச்சபையுமே மரியாளிடம் ஒப்படைக்கப்படுகின்றார்கள்.

இதனால் மரியாளற்ற கத்தோலிக்க விசுவாசம் எக்காலத்திலும் சிந்தனைக்கு அப்பாற்பட்டாதகவுள்ளது. எமது விசுவாசத்தில் மரியாளின் பங்களிப்பு அதனை பக்தி பற்றுதலோடு வாழ்வதற்கு ஓர் தவிர்க்க முடியாத காரணியாக உள்ளது. கிறிஸ்துவை பின்பற்றும் போது மரியாளின் பங்கு நீக்கப்படால் கிறிஸ்தவ மெய்யான சீடத்துவம் ஏதோவொன்றை இழந்ததாக கொள்ளப்படும். எம் விண்ணக அன்னையான மரியாள் கிறிஸ்தவ சீடத்துவத்தை இலகுவானதாகவும், மிகவும் அன்புக்குரியதாகவும் மாற்றுவார். ஆண்டவர் விரும்புவது எது?, அவரிடமிருந்து இரக்கமிக்க பதிலை பெற்றுக் கொடுப்பது எது? என நம் அன்னை தெரிந்து வைத்திருப்பதால் "அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவா 2:5) எனும் அறிவுரையைத் தந்து எம்மை ஊக்கப்படுத்துவார். மரியாள் ஆண்டவரோடு நெருங்கி இருப்பதால் அவர் இதைத் தெரிந்திருந்திருக்கின்றார். தமது முதல் புதுமையை கானாவில் செய்தாலும் ஆரம்பத்தில் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினார். ஆனாலும் தம் அன்னையின் அறிவுறுத்தலின்படி செயற்பட்ட வேலையாட்களை பார்த்த போது தண்ணீரை இரசமாக்கி தமது முதல் புதுமையை செய்தார். ஆகவே மரியன்னை, எமது தாயாக இருந்து மெய்யான கிறிஸ்தவ சீடத்துவத்தை நோக்கி எம்மை அன்போடும் கரிசனையோடும் ஊக்கப்படுத்துவராக செயற்படுவார்.

## மரியாள் : பாவிகளின் இராக்கினி

கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்க சமூகமாக நாமனைவரும், மீட்பிற்கான எம் தனிப்பட்ட தேடலில், திருச்சபையின் பணியில், மீட்பு வரலாற்றில், மரியாள் நிறைவேற்றுகிற இடைநிலையாளர் பங்களிப்பை

விளங்கிக்
இன்றியமைய
பணியை குறி
படிப்பினைகளி
அன்னையைப்
திருச்சங்கங்க
சொல்லலாம்.
கிறிஸ
மரியாளின் பிர
பிரசன்னம் (கா
பல்வேறு இட
டக ஆன்மாக்
வழிகளிலிருந்
அறைகூவல்
அவரின் தாய்
இதையே, பு
"நாம் எத்து
தூரம் எமக்கா
மரியாள். தா
மனதிற்கு அ
பலவீனமான
செய்வாள்.
ஈர்ப்பது அதி
அன்னைமரி
இவ்வுலகின்
அது வெறும்
சிறிய மறைக்
புனித
நீதியின்பால்
இருந்தாலும்,
நிறைந்துள்ள
இருக்க செய்
பற்றினோமெ

மேற்சொன்ன
வருட திருச்ச
செய்யப்பட்ட
போற்றும் மு
நாமனைவரும்
வருட காலப்
தொடங்கி 201
கார்த்திகை
அர்ப்பணிக்கி
ஒரு ஏற்ற தொ
நிறைந்த வா
அவரால் ஆ
இறைசித்தம்
மலர்ந்த தே
மீது நாம் ப
பரிசுத்த திவ்
ஆண்டாக இ
மறைமாவட்ட
முதிய மற்று
அன்னையிடம்
செய்கின்றோ
உம் திருமக
தாய்க்குரிய
நிறை மகிழ்
எல்லாவற்றிற்
தந்தருளும்".
மரிய
கடவுளின் மீ
கற்றுத் தெ
செபமாலை
மட்டுமல்லாம
திருயாத்திரை
இவ்வாண்டில்
திருயாத்திரை
அன்பு நிறை
ஏற்படுத்திக்
ற்றத்திற்கான
ஒப்புரவு மற்
கொள்ளுமாறு
அழைக்கும்
மகளாக மாற
மரியாயின்
"மரியாயின்
"வாழும் செ
சபைகள் மற்
தூய்மைப்படு
செயற்படுமாற

# ...ன மேய்ப்புப்பணி மடல்

...கொண்டு ஏற்றுக் கொள்வதும் மதித்துப் போற்றுவதும் ...ாத ஒன்றாக உள்ளது. எம் அன்னையின் இந்த அன்புப் ...ித்து திருச்சபையின் ஆரம்ப காலந் தொடக்கம் தரப்பட்ட ...ின் ஒரு பாரிய தொகுப்பை திருச்சபை கொண்டிருக்கிறது. ... பற்றி பேசாத ஆதித் திருச்சபைத் தந்தையர்களோ, ...ளோ, திருத்தந்தையர்களோ இல்லை என்றே

...்துவின் பொதுப்பணி முழுவதிலும், சிலுவையடியிலும் ...சன்னம், அரும்பும் திருச்சபையில் சீடர்கள் மத்தியில் அவரின் ...ாண்க. தி.ப 1:14) ஈராயிரம் ஆண்டுகள் திருச்சபை வரலாற்றில் ...ங்களில் அவரின் தொடர்ச்சியான தரிசனங்கள், இவற்றினூ-...்களின் மீட்பிற்கான அவரின் தாகம், நித்திய மரணத்தின் ...தும், பாவத்திலிருந்தும் எம்மை மனந்திரும்பும் படியாக ...விடுக்கும் அவளின் தொடர் அழைப்புக்கள் இவையனைத்தும் ...க்குரிய அன்பின் ஆணித்தரமான வெளிப்பாடுகளே ஆகும். ...ித ஜோன் மரிய வியானியும் பின்வருமாறு கூறுகின்றார். ...ணை பெரும் பாவிகளாயிருக்கின்றோமோ அத்துணை ...க கருணையும் பரிவும் கொண்டு விளங்குகிறாள் அன்னை ...ய்க்கு அதிக கண்ணீரை அளித்த குழந்தையே அவரின் ...ருகாமையிலுள்ள குழந்தை. அதிக ஆபத்திற்குள்ளாகும் ...குழந்தைக்கன்றோ அன்னையானவள் விரைந்தோடி உதவி ...வைத்தியசாலையில் மருத்துவர்கள் அதிக கவனத்தை ...க ஆபத்திற்குள்ளாகியுள்ள நோயாளியன்றோ? இவ்வாறு ...எம்மேல் கொண்டுள்ள பாசத்தை ஒப்பிட்டு நோக்குமிடத்து ...அன்னையர் அனைவரினதும் பாசத்தை ஒன்று சேர்த்தாலும் ... பனித்துளியைப் போன்றதாகும்” (ஆர்ஸ் நகர்ப் புனிதரின் ...கல்வி நூல்).

...ரைப் பொறுத்தவரை, இயேசு இறைமகனாக இயற்கையாகவே ... ஈர்க்கப்படுவதால், பாவியைத் தண்டிக்கும் நிலையில் ... மரியன்னையின் உள்ளமோ பலவீனர்களுக்காக பரிவன்புடன் ...தால் அவரை இயேசுவுக்கும் பாவிகளுக்குமிடையில் ...கிறது. எனவே நாம் அவரின் அன்புக் கரங்களை மட்டும் ...ன்றால் என்னே பாக்கியம்!

## மரியன்னையின் ஆண்டு

...வற்றிற்காகவும் மற்றும் பல காரணங்களுக்காகவும் ஈராயிர ...பை வரலாற்றில் அதனை அன்பு செய்த அதனால் அன்பு ... விண்ணக அன்னையை திருச்சபையோடு இணைந்து ...கமாக, கொழும்பு உயர் மறைமாவட்ட திருச்சமூகமாக ...ம் நம்பிக்கை ஆண்டின் நிறைவில் ஆரம்பமாகும் ஒரு ...பகுதியை, அதாவது இவ்வருடம் கார்த்திகை 24ம் நாள் ...14 ஆம் ஆண்டு திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறான ... 30ம் நாள் வரையான காலப்பகுதியை மரியாளுக்கு ...ன்றோம். மரியன்னையின் ஆண்டு நம்பிக்கை ஆண்டிற்கான ...ாடர்ச்சியாகவும் அமைகிறது. ஏனெனில் மரியாளே விசுவாசம் ...ழ்க்கைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கின்றார். ...ழ்ந்த விசுவாசத்தில் கூறப்பட்ட “ஆகட்டும்” ஊடாகவே ... யதார்தமானது. இறைவனின் அழகிய சோலையில் ...வரகசியத்தின் ரோஜாவாகிய எம் விண்ணக அன்னையின் ...க்தி பற்றுதலோடு, கொழும்பு உயர் மறைமாவட்ட அதி ...விய நற்கருணை தசாப்த நிகழ்ச்சித் திட்டத்தின் நான்காம் ...இம்மரியன்னை ஆண்டை பிரகடனப்படுத்துகிறோம். எம் ...த்தின் ஆயர்களையும், குருக்களையும், துறவிகளையும் ...ம் இளைய எல்லா விசுவாசிகளையும் எம்மோடு சேர்த்து ... ஒப்படைத்து, உயரிய பக்திபற்றுதலோடு நாம் இவ்வாறு ...ம். நாம் சொல்வோம் “தாயே ஒ விண்ணக அன்னையே, ...னின் அண்டையில் வந்து சேர உதவி புரியும். உமது ...பரிந்து பேசுதல் மூலம் எம் உடலுக்கும் ஆன்மாவிற்கும் ...ச்சியையும், கனிவான பாதுகாப்பையும், பராமரிப்பையும் ...கும் மேலாக தூய்மைமிகு வாழ்வையும் எமக்கு பெற்றுத்

...ன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள இவ்விசேட ஆண்டிலே, ...ட்புதிட்டத்தில் மரியாளின் தனிப்பட்ட பங்களிப்பை குறித்து ...ளியுமாறும், தனிப்பட்ட ரீதியாகவோ, குடும்பமாகவோ ...செபித்து எம் நாட்டிலுள்ள அன்னையின் திருத்தல்களுக்கு ...ல் வெளிநாட்டு திருத்தலங்களுக்கும் கூடுமானால் ... மேற்கொண்டு, கொழும்பு உயர் மறைமாவட்டம் ... ஒழுங்கு செய்யவுள்ள மடு மற்றும் லூர்து அன்னை ...களில் பங்கெடுத்து மரியன்னை மட்டில் தனிப்பட்ட ... மனப்பான்மையையும், பிள்ளைக்குரிய வாஞ்சையையும் ... கொள்ளுமாறும், எல்லாவற்றிற்கும் மேலாக மனமா-... அன்னையின் அழைப்பிற்கு செவிமடுத்து அடிக்கடி ...ும் திவ்விய நற்கருணை பெறும் பழக்கத்தை ஏற்படுத்தி ...ும், மனதின் ஆழத்திலிருந்து அவரை அம்மா என்று ... விண்ணக அன்னையின் பெருமைக்குரிய மகனாக ...ுமாறும் நாம் உங்களை கேட்டுக் கொள்கிறோம். மேலும், ...சேனை மற்றும் அதைப் போன்று ஏனைய குழுக்களான ...பிள்ளைகள்”, “குருக்களுக்கான மரியாயின் முன்னணி”, ...மாலை இயக்கம்”, “நற்செய்தியின் தூதுவர்கள்” எனும் ...ும் பக்திசபைகளை மரியாயின் செபங்கள் மற்றும் தனிப்பட்ட ...த்தல் தொடர்பான இந்த செயற்பாட்டில் முன்னிலை வகித்து ...ு நாம் அழைத்து நிற்கிறோம்.

## கொழும்பு உயர் மறைமாவட்டம்



## நிகழ்ச்சித் திட்டங்கள்

**நான் பின்வரும் அப்போஸ்தலிக்க பணிகளை கொழும்பு உயர் கொழும்பு மறைமாவட்ட திருச்சமூகத்தை ஆழமான மரியியல் ஆன்மீகத்தில் நடத்தி செல்வதற்கு முன்னணியில் நின்று செயற்படுமாறு அழைத்து நிற்கிறேன்.**

### 1) உயர் மறைமாவட்ட மறைக்கல்வி பணி

மரியாயின் ஆண்டின் குறிக்கோளை நோக்கி மக்களின் மறையறிவை வளர்ப்பதற்காக பின்வரும் முன்னெடுப்புக்களை நான் முன்மொழிகின்றேன்.

- ✠ விவிலியத்திலும் மீட்பு வரலாற்றிலும் மரியன்னைக்கு அளிக்கப்பட்டுள்ள பங்களிப்பின் மேன்மையைக் குறித்து மறைக்கல்வி மாணவர்களுக்கு அறிவுறு-த்துவதற்கான கையேடுகளையும், துண்டுப்-பிரசுரங்களையும் தயாரித்தல்
- ✠ திருச்சபையில் மரியாளுக்கான இடம் மற்றும் மரியன்னை பக்திமுயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்கில் கட்டுரை, வினா விடை, ஓவியம் மற்றும் பாடல் போன்ற போட்டிகளை ஒழுங்கு செய்தல்.
- ✠ அடிப்படைவாத குழுக்கள் மரியன்னையின் பக்திமுயற்சிகளுக்கு எதிராக எழுப்பும் கேள்விகளுக்கு விடை பகரும் பொருட்டும் மரியியல் தொடர்பான கருப்பொருளை அறிமுகப்படுத்தும் பொருட்டும் இறையியல் கல்லூரியுடன் இணைந்து துண்டு பிரசுரங்களையும், கையேடுகளையும் தயரித்தல்.
- ✠ மரியாள் மற்றும் மீட்பு வரலாற்றில் அவரின் முக்கியத்துவம் தொடர்பான கத்தோலிக்க படிப்பினை-களையும், விசேட விதமாக இயேசுவே மரியாளை எமக்குத் தந்தார் என்பதையும் வலியுறுத்தி தொடர்-ச்சியான சொற்பொழிவுகளையும் வார இறுதி கருத்தரங்குகளையும் அருளாளர் யோசேவ்வாஸ் இறையியல் கல்லூரியுடன் இணைந்து ஒழுங்கு செய்தல்.

### 2) உயர்மறைமாவட்ட கல்விப் பணி

குறிப்பிடத்தக்க அளவு கத்தோலிக்க மாணவர்கள் பயிலும் தனியார் மற்றும் அரச பாடசாலைகளில் மரியாயின் ஆண்டு முழுவதும் விசேட நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதன் ஊடாக திருச்சபையில் மரியாளின் பங்கு மற்றும் மரியன்னைக்கான பக்தி முயற்சிகள் பற்றிய அறிவை வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். மேலும் மரியாயின்சேனை, மரி-யாயின் பிள்ளைகள் மற்றும் சிறுவர் மரி-யாயின்சேனை போன்றவற்றின் அலகு-களை பாடசாலைகளில் நிறுவுவதும் விரும்-பத்தக்க வளர்ச்சியாகும்.

மரியன்னைக்கான செபம், நவநாட்-கள் மற்றும் மரியாயின் மாதங்களுக்கான விழாக்களைச் சிறப்பிப்பதும் பயனளிக்கும் விடயமாகும். இதனூடாக தேவ அழைத்தல்-களை ஊக்கப்படுத்தவும் விசேட முயற்சிகளை எடுக்க வேண்டும். உயர்மறைமாவட்ட கல்விக் காரியாலயம், மரியாயின் சேனை, இளம் கிறிஸ்தவ மாணவர் சங்கம், இயேசுவின் இளைஞயோர் போன்ற மாணவர்களுக்கான அமைப்புக்களுடன் சேர்ந்து இம்முயற்சிகளை மேற்கொள்வதும் அவசியமாகும். பாடசாலை அதிபர்கள் இவ்விடயத்தில் உங்களது ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

### 3) உயர்மறைமாவட்ட விவிலிய அப்போஸ்தலிக்கப் பணி

அநேகமான மரியியல் கேட்பாடுகள் விவிலி-யத்தை அடிப்படையாக வைத்து எழுந்தவை. எனவே நான் உயர்மறைமாவட்ட விவிலிய அப்போஸ்தலிக்கப் பணி ஆணைக்குழுவை தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில இறையி-யல் கல்லூரிகளுடன் இணைந்து பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு பரிந்து-ரைக்கிறேன்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்



# சிறுவர் பக்கம்



R. டினோஷா. தரம் - 4. புதுக்கடைப் பங்கு



A. வேஜினி அம்ரிதா. தரம் - 1. புதுக்கடைப் பங்கு



A. ஜெறாட் ரெக்ஸ். திரு இருதயநாதர் மறைப்பாடசாலை. இராஜகிரிய



J. ஜோன் சாமுவேல். தரம் - 9. புனித அந்தோனியார் ஆலயம். பலாங்கொடை



R. சத்யா. தரம் - 10. கீரப்பத்தெனிய அடல்குன்டில் மறைப்பாடசாலை. வலேபொட தோட்டம். பலாங்கொடை



அந்தோனி பின்டோ. தரம் - 9T. புனித பேதுரு கல்லூரி



இலேரியன். தரம் - 4. புதுக்கடைப் பங்கு

# புனித பிரான்சிஸ் அசிசி – 11

முதன்முறையாக ஒரு குருவானவர் பிரான்சிஸ்குவின் சகோதரரோடு சேர விழைந்தார். இக்குரு முன்னால் பிரான்சிசிடம் புனித தமியான் கோயிலைக் கட்டச் சில கற்களைக் கொடுத்துவிட்டு அதிக பணம் கேட்டவர். ஆனால் பிரான்சிசின் பதில் மொழியால், ஒரு மனிதன் இறைவனுக்கும், அதே நேரத்தில் பணத்திற்கும் ஊழியம் செய்ய முடியாது என்பதை உணர்ந்தவர்.



அது முதல் பிரான்சிசின் மறைபரப்புப் பணி மிக வெற்றிகரமாக நாடெங்கும் பேசப்பட்டது. மனிதர்களின் உள்ளத்தை இறைவார்த்தையால் தொடும் இரகசியத்தை இவர் தெரிந்து வைத்திருந்ததன் பலன் இது. அவரது போதகத்திற்குப் பின்னால் கூபிய்யோவில் ஓர் அதிசயமான நிகழ்ச்சி நடந்தது. அவ்வூரில் ஒரு ஓநாய் மனிதர்களையும், மிருகங்களையும் அடித்து நசுக்கி வந்தது.

பிரான்சிஸ் இந்த ஓநாயைப் பற்றிக்கேள்விப்பட்டு அதைச் சந்திக்கக் காட்டுக்குச் சென்றார். அதை அவர் பார்த்தபொழுது அதன்மீது சிலுவை அடையாளம் வரைந்து “ஓநாய் சகோதரனே, நீ எனக்கு மற்றும் எந்த மனிதருக்கும் தீங்கிழைக்கக் கூடாது என ஆண்டவர் இயேசுவின் பெயரால் கேட்கின்றேன்” எனக்கூற அந்த ஓநாய் அவரது பாதத்தில் மண்டியிட்டு வீழ்ந்தது.

அந்த ஓநாயை அவர் கடிந்து கொண்டார். இனிமேல் எவருக்கும் அது தீங்கு இழைக்காது என்று தெரிந்ததால் மக்கள் அதை மன்னித்து விடுவர் என்றும் அதற்குக் கூறினார். பிறகு அந்த ஓநாயானது அதை ஏற்றுக் கொண்டதின் அடையாளமாக தனது ஒரு காலைத் தூக்கி பிரான்சிசின் கையில் வைத்தது. அதுமுதல் கூபிய்யோ மக்கள் மத்தியில் எவ்வித இடையூறுமின்றித் தான் இறக்கும் வரை வாழ்ந்தது.

பிரான்சிசோடு சேர்ந்த எல்லாச் சகோதரர்களும் அவரது சொல்லாலும், செயலாலும் உறுதிப்படுத்தப்பட்டவர்களாய் மிகுந்த ஆர்வத்தோடு வாழ்ந்தார்கள். இந்த ஆர்வம் அவர்களின் கடின வாழ்வை முழுமையாகக் கடைப்பிடிக்கத் தேவைப்பட்டது. காற்றிலும், மழையிலும், குளிரிலும் மிகவும் துன்பப்பட்டு குடிசையில் வாழ்ந்தனர்.

தொடரும்...

**கேள்வி எண் 11:**

1) பிரான்சிசின் மறைபரப்புப் பணி வெற்றிகரமாக பேசப்பட்டதன் பலன் எது எனக் கூறப்படுகிறது?
2) பிரான்சிசினதும், அவரது சகோதரர்களின் வாழ்க்கை எவ்வாறு இருந்தது?

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 11.11.2013**

## புனித பிரான்சிஸ் அசிசியின் தொடருக்கான விடைகளை எழுதி பாராட்டைப் பொறுபவர்கள்.

1) அ. மதுமிகா, தரம் 7, நல்லாயன் மகளிர் மகா வித்தியாலயம், கொட்டாஞ்சேனை, கொழும்பு – 13.
2) ஷாமினி சிமியோன், தரம் 7F, திருக்குடும்ப கன்னியர் மடம், பம்பிலப்பிட்டி.
3) J.D. எண்ஜலினா, தரம் 6, சதாசகாய மாதா மறைப்பாடசாலை, பாரக்கடுவ (இரத்தினபுரி)
4) அரேத்தா விக்கோரியா, தரம் 7F, திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு –4
5) நிலானி பர்னாந்து, தரம் 10கு, திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு –4

# கொஞ்சம் சிரிங்க







## விடுகதைகள்

1) அனலிலே பிறப்பாள் ஆகாயத்திலே பறப்பாள் - அவள் யார்?
2) அலறி அலறிக் கூப்பிடுவான் அசந்தால் இடங்கி விடுவான் - அவன் யார்?
3) அலை அலையாய் ஆடிவரும், கடல் அல்ல, நிலையாக இருக்காது நிலவும் அல்ல அது என்ன?
4) அனைவருக்கும் அடங்காதது ஆதவனுக்கு அடங்கும் அது என்ன?
5) ஆத்தாள் பிள்ளைத்தாச்சி அப்பன் ஊர் சுற்றி அவர்கள் யார்?

*விடைகள்*

1. புகை 2. தொலைபேசி 3. மேகம் 4. குளிர் 5) பரங்கிக் கொடி

# புனித. அந்தோனியார்



புனிதர்களில் மிகச் சிறந்தவரானவர். இவர் போர்த்துக்கல்லில் லிஸ்பன் நகரில் 1195 ஆவணி 13ல் பிறந்தார். கடவுள் மீது அதிக பக்தி உள்ளவர். கவலையுற்று இருப்பவருக்கு ஆறுதல் கூறுவார். இவர் பற்பல புதுமைகள் செய்து வாழ்ந்து வந்தார். 1231 ஆனி 13ஆம் திகதி இறைவனிடம் சேர்ந்தார். இறந்த மறு ஆண்டிலே புனிதர் என்று திருச்சபையால் அறிவிக்கப்பட்டார். 1946இல் திருத்தந்தை 12ஆம் பத்திநாதரால் ‘மறைவல்லுனர்’ என்று அறிக்கையிடப்பட்டார்.

**ஆக்கம் :J.D. எண்ஜலினா, தரம் 6, சதாசகாய மாதா மறைப்பாடசாலை, பாரக்கடுவ (இரத்தினபுரி)**

## சிறுவர் சிறுமிகளே!

கிறிஸ்மஸ் சிறப்பிதழில் உங்களது ஆக்கங்களும் இடம்பெற விரும்புகின்றீர்களா? அப்படியாயின் உங்களது ஆக்கங்கள், கவிதைகளை எழுதியும், வரைந்தும் எமக்கு விரைவாக அனுப்பிவைக்கவும்

# உதவி



கழுதை ஒன்று நிறைய பொதி சுமந்து கொண்டு சென்றது. அதன் பின்னால் கழுதையின் எஜமானும், அவர் வளர்க்கும் நாயும் வந்து கொண்டிருந்தனர். செல்லும் வழியில் புல் தரையைப் பார்த்ததும் கழுதையை அங்கு மேயவிட்டு மரத்தின் நிழலில் படுத்துத் தூங்கினார் எஜமான். கழுதை அங்கிருந்த புற்களை நன்கு மேய்ந்தது. ஆனால் நாய்க்குத் தின்பதற்கு எதுவுமில்லை. பசி அதன் வயிற்றைப் பிடுங்கியது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த நாய், கடைசியாக கழுதையைப் பார்த்து “நண்பனே என்னால் பசி தாங்க முடியவில்லை. எஜமானோ தூங்குகின்றார். கொஞ்சம் கீழே படு உன் பொதியில் உள்ள உணவில் கொஞ்சம் எடுத்துக்கொள்கின்றேன்” என்று கெஞ்சியது.

நாயின் கெஞ்சலை கழுதை பொருட்படுத்தவில்லை. அது ஆனந்தமாகப் புற்களை மேய்ந்து கொண்டிருந்தது. நாயும் விடாமல் கெஞ்சிக் கொண்டிருந்தது. நாயின் தொந்தரவு தாங்க முடியாத கழுதை “என்னப்பா அவசரம்? எஜமான் எழுந்திரிக்கட்டும். அவர் சாப்பிடும்போது உனக்கும் தான் கொடுப்பாரே” என்றது. வேறு வழியில்லாமல் நாய் சோர்ந்து போய்ப் படுத்துக்கொண்டது.

அப்போது ஓநாய் ஒன்று மேய்ந்து கொண்டிருந்த கழுதை மீது பாய்ந்தது. பயத்தால் அலறிய கழுதை “நண்பா சீக்கரம் ஓடிவந்து என்னைக் காப்பாற்று” என நாயைப் பார்த்து கதறியது. படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல் “ஏன் அவசரப்படுகின்றாய்? கொஞ்சம் பொறுமையாக இரு எஜமான் விழிக்கட்டும். அவர்தான் கட்டாயம் உனக்கு உதவி செய்வாரே” என்றது நாய்.

கழுதை நாய்க்கு உதவி செய்யாமல் தான் செய்த தவறை நினைத்து வருந்தியது.

## சிந்தனை:

நாம் மற்றவர்களுக்கு உதவினால்தான் மற்றவர்கள் நமக்கு உதவி செய்வார்கள்.

# ஆண்டவரிடம் தினமும் உருக்கமான செபம் செய்யுங்கள்.

## இதோ! அந்த பிரார்த்தனை



- ✞ ஆண்டவரே என் ஜீவனை உமக்கே அர்ப்பணிக்கின்றேன்.
- ✞ என் நேரங்களை, என் நாட்களை உமக்கே ஒப்புவிக்கின்றேன். அவைகள் ஓய்வின்றி உம்மையே புகழ்ந்து கொண்டிருக்கட்டும்.
- ✞ என் கரங்களை உமக்கே ஒப்புவிக்கின்றேன். என் கரங்களின் பணிகள் உமது அன்பையே வெளிப்படுத்திக் கொண்டிருக்கட்டும்.
- ✞ என் கால்களை உமக்கே ஒப்புவிக்கின்றேன். அவைகள் உமது பார்வையில் அழகாக இருக்கட்டும்.
- ✞ என் குரலை உமக்கே ஒப்புவிக்கின்றேன். அவைகள் என் ஆண்டவரை புகழ்ந்து பாடிக்கொண்டேயிருக்கும்.
- ✞ என் உதடுகளை உமக்கே ஒப்புவிக்கின்றேன். அவைகள் உம்முடைய செய்திகளால் நிறைந்திருக்கட்டும்.
- ✞ இரக்கமுள்ள ஆண்டவரே! என்னிடமிருக்கும் பொன்னும் வெள்ளியும் உம்முடையதே அவற்றை உமக்கே ஒப்புவிக்கின்றேன். நீர் விரும்புகிற படியே அவைகள் செலவழிக்கப்படட்டும்.
- ✞ என் புத்திக் கூர்மையை உமக்கே ஒப்புவிக்கின்றேன். நீர் தெரிந்தெடுக்கிற வண்ணமாக அதைப் பயன்படுத்தும்.
- ✞ என் சித்தத்தை உமக்கே ஒப்புவிக்கின்றேன். அதை உம்முடைய சித்தத்தின்படியே உருவாக்கும்.
- ✞ என் இருதயத்தை உமக்கே ஒப்புவிக்கின்றேன். அது இனி உம்முடையது.
- ✞ ஆண்டவரே! என் அன்பை உமது பாதத்தில் ஊற்றிவிடுகின்றேன். அதை நீர் ஏற்றுக் கொள்ளும்
- ✞ என்னையே உம்மிடம் ஒப்புவிக்கின்றேன். என்னை என்றும் உம்முடையவன்/ள் ஆக்கிக்கொள்ளும்.



# மாணவர் பக்கம்

தொகுப்பு :
மறையாசிரியர் பேணடேற் சாந்தி

## இளைஞர்களின் தேடல்

வானைக் காட்டுங்கள் சிறகு விரிக்க
கடலைக் காட்டுங்கள் நீந்தித்திரிய
மண்தரையைக் காட்டுங்கள் தவழ்ந்து விளையாட
இதுவே இளைஞர்களின் தேடல்

தூய காற்றைக் காட்டுங்கள் சுவாசித்துப் பார்க்க
தூய நீரைக் காட்டுங்கள் சுவைத்துப் பார்க்க
தூய அன்பைக் காட்டுங்கள் அனுபவித்து மகிழ
இதுவே இளைஞர்களின் தேடல்

ஆடும் மயிலைக் காட்டுங்கள் சேர்ந்து ஆட
கூவும் குயிலைக் காட்டுங்கள் கூவிப்பழக
ஓடும் மானைக் காட்டுங்கள் ஓடி ஆட
இதுவே இளைஞர் எங்கள் தேடல்

*ஆக்கம் : மெரினா வெரோனிக்கா,*
*தரம் – 9, புதுக்கடைப்பங்கு*

## ஒற்றுமை உயர்வு தரும்

மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து இணங்கி வாழ்தல் ஒற்றுமையாகும். ஒன்றுபட்டால் எமக்கு உயர்ந்த வாழ்வு கிட்டும். ஒற்றுமை நீங்கினால் எவருக்கும் தாழ்வே உண்டாகும் என்கின்றார் திருவள்ளுவர். கற்றோராயினும், மற்றோராயினும் ஒற்றுமை கொண்டால் நன்மை பெறலாம். பறவைகளும், விலங்குகளும் கூட ஒன்று கூடி ஒற்றுமையாகவே வாழுகின்றன. காகம் தன் இனத்தவருடன் கூடி வாழ்கின்றது. இரை கிடைத்தவுடன் தன் இனத்தவரை அழைத்து உண்ணுகின்றது. மதம், மொழி, இனம், நிறம் கருதி வேற்றுமை கொள்ளுதல் மனிதருக்கு இழிவாகும். ஒற்றுமையைக் கைக்கொண்டு ஒப்பற்ற சந்தோஷம் பெறுவோம்! நன்றி

*ஆக்கம் : செல்வி. ஜனனி மதியழகன்,*
*தரம் – 5, புதுக்கடைப் பங்கு*

## தோல்வியைக் கண்டு துவளாதீர்...



வாழ்க்கையில் உயர்வும், தாழ்வும் மாறி மாறி வருவது சகஜம். வாழ்வில் எல்லோரும் முன்னேற வேண்டும் என்று ஆசைப்படுவது இயல்பு. உயர்வு வரும் இடத்தில் தோல்விகளும் கூடவே வரும். உயர்வும், தாழ்வும் நாணயத்தின் இரு பக்கங்களாக கருதவேண்டும். தோல்வியை கண்டு துவளக் கூடாது. வாழ்விலே ஒரு முறையேனும் தோல்வி ஏற்பட்டால்தான் வெற்றியின் அருமை புரியும்.

சாதாரணமாக ஒருவன் வெற்றியடைந்தால் அவனுக்கு அது பெரிய விஷயமாக தெரியாது. பலமுறை தோல்வி கண்டு, வெற்றியைத் தழுவும் ஒருவனால்தான் அதை உண்மையில் உணர முடியும். அவன் சந்தோஷத்திற்கு அளவே இருக்காது. வெற்றியை கொண்டாடுவான்.

நமக்கு ஏற்பட்ட நிறைய தோல்விகளும் நம் வெற்றிக்கு காரணமாக அமையும். ஒருவர் பெற்ற வெற்றியை தாங்க முடியாதவர்கள், அவரை ஏதேனும் வகையில் தோற்கடிக்க வேண்டும் என்று நினைப்பார்கள். நாம் வெற்றி பெற்றுக் கொண்டே போகும்போது மற்றவர்களை பற்றி அறிய முடியாது. ஆனால் தோல்வி ஏற்படும்போது தான் யார் நல்லவர் கெட்டவர் என்ற சுயரூபம் நமக்கு தெரியும். பொதுவாக வெற்றி பெறும் போது நமது நண்பர்கள் கூட எதிரிகளாக மாறுவார்கள். ஆனால் தோல்வி அடையும்போது சில நண்பர்களும் நமக்குக் கிடைப்பார்கள்.

இதெல்லாம் வாழ்க்கையில் சகஜமாக எடுத்துக் கொண்டு எல்லோரிடமும் நட்புடன் பழகவேண்டும். சில தோல்விகள் தான் வேகமாக வளரவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். தோல்வி வரும்போது அதற்காக துவண்டு போய் சாப்பிடாமல், இரவு முழுவதும் தூங்காமல் கண் விழித்து யோசிப்பதை விட்டுவிட்டு இதுவும் வெற்றிக்கான பாடமாக எடுத்துக் கொண்டு நேர்மறையாக நமது எண்ணத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். தோல்வியின் முடிவே உயர்வின் ஆரம்பமாக இருக்கும்.

# தெரிந்து கொள்ளுங்கள்

## உரோமிலுள்ள புனித பேதுரு ஆலயம்



உலகத்திலுள்ள எல்லா ஆலயங்களிலும் மிக பிரம்மாண்டமானதாய் இவ்வாலயம் விளங்குகின்றது. இவ்வாலயத்தில் 46 பலிப்பீடங்களும் அவைகளுக்கு முன்பாக இராப்பகலாக எரிகின்ற 121 விளக்குகளும், வெண்கலத்தால் செய்த சலவை கல்லால் அமைந்த 748 ஸ்தாபங்களும், 396 சுருபங்களும், 280 ஐன்னல்களும் காணப்படுகின்றன.

## புராதன ஆலயம்:



இங்கிலாந்திலுள்ள கிளாட்ல்தஸ் பெறி என்ற மகாணத்தில் தேவமாதாவின் பெயரில் ஆலயம் ஒன்று உள்ளது. இது 1851ஆம் வருடம் அரிமத்தியா ஊராகிய யோசேப்பு என்பவரால் கட்டப்பட்டுள்ளது. இவர் கிறிஸ்து பிறந்து 63ஆம் ஆண்டில் பிரித்தானியாவுக்கு சென்றிருந்தார்.

*ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12.*

# கத்தோலிக்க திருமறை

## தரம் (II) (க.பொ.த) மாணவர்களுக்கான மாதிரி வினாக்கள்

1. திருவருட்சாதனங்கள் ஏழையும் பெயரிடுக?
2. திருவருட்சாதன்ங்களின் மையமாக விளங்கும் அருட்சாதனம் எது?
3. தூய ஆவியின் செயற்பாடு அருட்சாதனங்களில் எவ்வாறு வெளிப்படுகின்றது?
4. முதலாம் மரபின்படி மனிதன் எத்தனையாம் நாளில் படைக்கப்பட்டான்?
5. தொடக்கநூல் 1:26 இன்படி இறைவன் மனிதனைப் படைத்தபோது எவ்வாறு கட்டளையிட்டார்?
6. இறைசாயலைக் கொண்டுள்ள நீர் உம்மில் வளர்த்துக் கொள்ளவேண்டிய இறைப் பண்புகளைப் பட்டியற்படுத்துக?
7. பேறுகள் என்றால் என்ன? பேறுகள் வேறு எப்பெயரால் அழைக்கப்படுகின்றன?
8. விண்ணரசுக்கு உரியவர்கள் யார்?
9. இப்பேறுகள் உமது வாழ்வுக்குத் தரும் செய்திகள் எவை? (ஐந்து கருத்துக்கள் எழுதுக)
10. இறைவன் மோசே வழியாகச் செய்த முதலாவது பெருந்துன்பத்தினால் மனதைக் கடினப்படுத்திக்கொண்டவன் யார்?
11. எதனால் இஸ்ராயேல் மக்கள் செங்கடலின் மறுகரைக்குச் சென்றனர்?
12. இஸ்ராயேல் மக்களின் செங்கடல் பயணம் உமக்குத் தரும் படிப்பினை யாது?
13. பெந்தக்கோஸ்தே நாளில் திருத்தூதர்கள் பெற்றுக் கொண்ட அருட்சாதனம் எது?
14. தூய ஆவியின் கொடைகள் நான்கு தந்து அவை ஒவ்வொன்றும் பற்றி இரண்டு வரிகளில் அறிமுகப்படுத்துக?
15. இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் எவ்வாறான உடலைக் கொண்டுள்ளான்?
16. ஆன்மா என்பது மூச்சு என்று திருவிவிலிய ஆசிரியர் கூறியுள்ளதன்படி எபிரேயம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளில் மூச்சு என்பது எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?
17. திருமுழுக்கின் மூலம் இறைவாழ்வுக்குள் அழைக்கப்பட்டுள்ள நீர் எவ்வாறு சமுகத்திலுள்ள பேதங்களை நீக்கி வாழ்வீர்?
18. உமது கிறிஸ்தவ அழைப்பில் உமக்குள்ள பொறுப்புக்களில் நான்கைத் தருக?
19. இவ்வழைத்தலைச் சரியான முறையில் நிறைவேற்ற காய்க்காத அத்திமரத்தின் உவமை மூலம் கற்றுக்கொள்ளக் கூடியவை நான்கு எழுதுக?
20. படிப்பில் கவனம் செலுத்தாது மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்கும் உமது நண்பருக்கு நல்வழிகாட்ட என்ன அறிவுரை கூறுவீர்?
21. செபங்களில் எல்லாம் மிக முக்கியமான செபம் கர்த்தர் கற்பித்த செபமாகும். இச்செபத்தில் காணப்படும் பண்புகள் யாவை?
22. இயேசுவின் உன்னத குருத்துவ செபம் எந்த நற்செய்தியில் காணப்படுகின்றது?
23. விசேடமாக நாம் யார் யாருக்காக செபிக்க வேண்டும்?

# இரக்க சிந்தனையும், பிறரன்புத் தொண்டும் கொண்ட புனித மார்ட்டின்



(கி.பி 397)

கார்த்திகை 11

இவர் பன்னோனியா நாட்டில் சபேரியா நகரில் பிறந்தவர். இவரின் பெற்றோர் கிறிஸ்துவை அறியாதவர்கள். தந்தை படை அலுவலர். பணியின் பொருட்டு இத்தாலியில் பாவியா நகருக்கு குடும்பத்தினருடன் செல்ல வேண்டியதாயிற்று. 15 வயதில் மார்ட்டின் கட்டாயமாகப் படையில் சேர்க்கப்பட்டார். இன்னும் கிறிஸ்துவின் ஒளி பெறவில்லை. இருந்தாலும் ஒரு கிறிஸ்தவத்துறவி போல் வாழ்ந்து வந்தார். எமியன்ஸ் நகரில் இவர் வாழ்ந்த ஒரு நாள் கடுங்குளிர் காலத்தில் நகரின் நுழைவாயிலில் குளிரினால் நடுங்கி அரை நிர்வாணமாகப் பிச்சை கேட்டுக் கொண்டிருந்த ஏழை ஒருவரைச் சந்தித்தார். தமது போர்வையை இரண்டாகக் கிழித்து ஒரு பகுதியை அந்த ஏழையின் மீது போர்த்தினார். அதே நாள் இரவு இயேசு மார்ட்டினுக்குத் தோன்றினார். “மார்ட்டின் இந்தப் போர்வையினால் நீ போர்த்தினாய்” என்ற குரலை அவர் கேட்க முடிந்தது.

இந்நிகழ்விற்குப் பிறகு மார்ட்டின் திருமுழுக்குப் பெற்றார். இவர் இன்னும் படையைவிட்டு விலகவில்லை. இவருக்கு 22 வயது ஆனபோது பிரான்சைச் சூறையாட அரக்கர் கூட்டம் வந்தது. மார்ட்டின் படையிலிருந்து விடுதலை அடைந்தார். பின்னர் இலாரியார் ஆயராகப் பணியாற்றிய பாய்ட்டியர்ஸ் நகரை அடைந்து அவரின் சீடரானார். இச்சூழ்நிலையில் மார்ட்டினுக்குத் தோன்றிய கனவின் அடிப்படையில் சொந்த ஊரான பன்னோனியா சென்று தம் தந்தை தவிர மற்ற அனைவருக்கும் திருமுழுக்கு கொடுத்தார். சென்ற இடத்தில் ஆரியப் பதிதரின் தப்பறையைக் கடுமையாகச் சுட்டிக் காட்டியதால் சாட்டையடிக்குள்ளாகி நாட்டை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று அதன் பின்னர் புனித இலாரியார் தானமாக அளித்த ஓர் இடத்தில் தனிமையில் நாட்களைக் கழித்தார். விரைவில் தவமுனிவர் பலர் அவரிடம் வந்து சேர்ந்துவிட்டனர். கி.பி 1607 வரை இந்த துறவு மடம் பெரிதாகப் பெருகிக் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. 10 ஆண்டுகள் மார்ட்டின் இங்கு வாழ்ந்து உடன் துறவிகளுக்கு ஆன்மீக வழிகாட்டியாக அமைந்ததோடு அங்கிருந்த இடங்களுக்குச் சென்று மறைபரப்பு பணியில் முழுமூச்சில் ஈடுபட்டார். மக்கள் இவரை ஆயராக்க முயன்றபோது அதைத் தட்டிக் கழித்துவிட்டார். இதனால் வேறு ஒரு வழியை மக்கள் மேற்கொண்டனர். “நோயாளி ஒருவரை சந்திக்க வாருங்கள் என்று அழைப்பு விடுத்தனர். ஏற்கனவே ஆலயத்தில் மார்ட்டினைத் திருநிலைப்படுத்த ஆயர் குழு காத்திருந்தது. அவரை மக்கள் ஆலயத்திற்கு அழைத்து சென்றபோது இவரின் ஏழ்மையின் கோலத்தைப் பார்த்து ஆயர்கள் திருநிலைப்படுத்த மறுத்தனர். பிறகு மக்களுடைய குரு குலத்தினருடைய கட்டாயத்தின் பேரிலும், ஆர்ப்பரிப்பின் பேரிலும் ஆயராகத் திருநிலைப்படுத்தினர். நாளடைவில் மார்மூட்டியேர் என்ற துறவு மடத்தில் அவர் தங்கி வழக்கமான தனது பணியைத் தொடர்ந்தார். இங்கு அவருடன் 80 துறவிகள் சேர்ந்தனர். இவர்களில் பலரும் பிரபு குலத்தைச் சேர்ந்தவர்கள் இங்கிருந்து கொண்டு அருகிலிருந்த கிளைப் பங்குகள் அத்தனையையும் கால் நடையாகச் சென்று சந்தித்து விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். கி.பி 397 கார்த்திகை 8ல் இறைவனடி சேர்ந்தார். அவரது கல்லறைமேல் பேராலயம் ஒன்று எழுப்பப்பட்டு இன்றுவரை சாட்சி அளிக்கிறது.

## இம்மாதத்தில்



✠ பேதுரு

# மறுவாழ்விற்கு கடந்து போனவர்களை நினைவு கூறும் மாதம்

கத்தோலிக்க திருச்சபையாகிய எமக்கு கார்த்திகை மாதம் இறந்தோர் நினைவு கூறும் மாதமாகும். ஒவ்வொரு கத்தோலிக்கரும் ஒவ்வொரு நாளும் நிறைவேற்ற வேண்டிய கடமையை, குறைந்தது ஒரு மாதமேனும் நிறைவேற்றும்படி கூறுகிறது.

நாம் ஒவ்வொரு ஞாயிறும் அறிக்கையிடும், விசுவாச பிரமாணத்தில் இவ்வாறு கூறப்படுகின்றது “சரீர உத்தானத்தை விசுவசிக்கின்றேன்” நித்திய ஜீவியத்தை விசுவசிக்கின்றேன்” (யோவான் 14:2) “நான் போய் உங்களுக்கு ஓர் இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன்.

இவ்விசுவாசத்தினூடாக நாம் ஒவ்வொருவரும் இறப்பின் பின் போகும், இடத்தைப் பற்றியே குறிப்பிடுகிறார். இயேசுவின் பாடுகள், இறப்பு உயிர்ப்பு வழி எமது இறப்பிற்கு ஓர் அர்த்தம் கிடைக்கின்றது. முடிவில்லா நித்தியவாழ்வு கிட்டுகிறது. கிறிஸ்துவின் இறப்பினால் கிறிஸ்தவனின் இறப்பிற்கு புதிய அர்த்தம் உண்டாயிற்று.

இறப்பு மனிதனது இவ்வுலக பயணத்தின் முடிவு. இறைவனது அருளோடும் இரக்கத்துடன் இறைவனது திட்டத்துடன் ஒத்துழைத்து தனது வாழ்வின் இறுதி முடிவைத் தீர்மாணிக்கச் செய்கிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நாம் அவரை எதிர்கொள்ள வேண்டுமென திருச்சபை போதிக்கின்றது. அதேவேளை ஒவ்வொரு மனிதனும் தனது செயல்களுக்கும் விசுவாசத்திற்கும் ஏற்ப தனது இறப்பின் முடிவில்லா சன்மாணம் வழங்கப் பெறுவான் என்று மீண்டும் மீண்டும் போதிக்கின்றது. பணக்காரன் ஏழை லாசரின் உவமை, நல்லக்கள்வனுக்கு கிறிஸ்துவின் வார்த்தை என்பன இவற்றை உறுதிச் செய்கின்றன.

மூவொரு கடவுளோடும், அன்னை மரியாளோடும், புனிதர்களோடும், வானதூதரோடும் வாழும் இம் முழுமையான வாழ்வை மோட்சம் என்கிறோம்.

மோட்சத்தில் இருப்பது என்பது கிறிஸ்துவோடு இருப்பது ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் “கிறிஸ்துவிலே வாழ்கின்றார்கள். இறைவனின் அருளிலும், நட்பிலும், இறப்பவர்கள், முழுமையாகத் தூய்மையாக்கப்படாத நிலையில் நிச்சயமாக நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ளுவார்கள். ஆனால் மோட்சத்தின் மகிழ்வை அடையத் தேவையான புனிதத்தை அடைந்து கொள்வதற்கு இறப்பின் பின் அவர்கள் தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.

இந்த இறுதித் தூய்மையாக்கலை உத்தரிப்பு ஸ்தலம் என்று திருச்சபை அழைக்கின்றது. இது நரகத்திலிருந்து வித்தியாசமானது.

இவர்களுக்காக மன்றாடும் பழக்கம் விவிலியத்தின் கூற்றை ஆதாரமாகக் கொண்டுள்ளது. (2 மக்கபே 12:45 ஆரம்பத்திலிருந்தே திருச்சபை இறந்தோரை நினைவு கூர்ந்து அவர்களுக்காக செபங்களை ஒப்புக்கொடுத்து வருகின்றது. சிறப்பாக அவர்கள் இறைவனின் திருமுக தரிசனத்தை காண வேண்டுமென திருப்பலி வேளையில் மன்றாடுகிறது. இறந்தவர்களுக்காக தானம் வழங்குதல் பரிபூரண பலன்கள் பாவப் பரிகார முயற்சி என்பவற்றை திருச்சபை ஊக்குவிக்கின்றது.

ஆதலால் கத்தோலிக்கர் என்ற வகையில் கார்த்திகை முதலாந் திகதி புனிதர்களின் திருநாளையும், 2ஆம் திகதி சகல ஆத்மாக்களின் திரு நாளையும் கொண்டாடுகின்றது. நாம் திருப்பலியில் பங்குகொண்டு கல்லறை சந்தித்து மெழுகுவர்த்தி ஏற்றி செபம் செய்து தானமும் கொடுக்கிறோம். கத்தோலிக்கராகிய நாம் எந்த நாளும் செய்ய வேண்டிய கடமையை நினைவுருத்த எமக்கு விஷேசமாக ஒரு மாதத்தையே இறந்தோறுக்காக தந்துள்ளது. உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமாக்களுக்கு விஷேசமாக யாரும் நினையாத ஆத்துமாக்களுக்காக எமது கடமையை நிறைவேற்ற, மிக மிக சிறந்த வழி கல்வாரித் திருப்பலியில் பங்குக்கொண்டு ஒப்புக்கொடுப்பது, எமது பாவம் போக்கும் செம்மறியின் பலியை விடச் சிறந்தது ஒன்றுமில்லை. தானதர்மம் செபம் (பாவப்பரிகாரச் செபம் இவைகள் வழி இறந்தோர் நினைவு கூறும் மாதத்தை அர்த்தமுள்ளதாக்கி பலனடைவோம்.

சுபெந்தி சகோதரி
மேரி மார்த்தா



# உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களுக்காக நாம் ஏன் செபிக்க வேண்டும்

நாங்கள் அயலாருக்கு அன்பு செய்யவும் அவர்களுக்கு உதவிடவும் கடமைப்பட்டுள்ளோம். அவர்களது தேவை பெரிதானால், அவசரமானால் அவர்களுக்கு உதவிட வேண்டிய எமது கடமையும் இரட்டிப்பாகிறது. பிறருக்கு உதவுவது ஒரு சலுகையல்ல, செய்யலாம், செய்யாமலும் இருக்கக்கூடிய விடயமல்ல, மாறாக அது எமது கடமை. நாங்கள் கட்டாயமாக உதவிட விரைய வேண்டும்.

ஒரு ஏழை உயிர் வாழத் தேவையான உணவையோ, உறைவிடத்தையோ, மறுப்போ-மானால் அது காட்டுமிராண்டித்தனமான பாதகமாகும். நீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் மனிதனை பார்த்தும் பாராமல் போவது கொடூர செயலாகும். எங்களுக்கு இயலுமான போதும், இலகுவான போதும் உதவிடுவது மட்டுமில்லாமல், பரித்தியாகம் செய்து உதவி தேவைப்படுவோருக்கு உதவுவதே மிகவும் முக்கியமானதும் கட்டாயமானதும் ஆகும்.

உத்தரிக்கும் இடத்தில் இருக்கும் ஆன்மாக்களை விட எமது உதவி அவசரமாகத் தேவைப்படுவோர் இருக்க முடியுமா? இவ்வுலக வறுமையும், உணவின்மையும், கஷ்ட துன்பங்களையும் உத்தரிப்பு ஸ்தல துன்பங்களோடு ஒப்பிட முடியுமா? ஆனால் பலர் இவ்வுலக துன்பங்களுக்கு உதவிட முனைந்தாலும் உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களுக்கு உதவிட முன்வருவதில்லை. அவ்வான்மாக்களில் சிலர் எமது நண்பர்களும் குடும்பத்தாருமாய்க் கூட இருக்க இடமுண்டு.

## அவர்களுக்கு உதவுவதை கடவுள் விரும்புகிறார்

எது எப்படி இருந்தாலும் அவர்கள் கடவுளின் நண்பர்கள், அவர் அவர்களுக்கு உதவிட ஆசையாய் இருக்கிறார். அவர் அவர்களை பரலோக வீட்டிற்கு அழைக்கவும் ஆவலாய் இருக்கிறார். அவர்களால் அவரை மீண்டும் நோகப்படுத்த முடியாது, அவர்கள் அவரோடு முடிவில்லாத காலம் வரை வாழ ஆயத்தம் செய்பவர்கள். ஆனாலும் அவரது நீதியின் முன் அவர்களது பாவங்களுக்காக பரிகாரம் செய்யப்பட வேண்டும். அவரது பராமரிப்பின் பொருட்டு அவ்வான்மாக்களுக்கு உதவும் வரத்தை எமக்கு அருளியுள்ளார். அவர்களை விடுவிக்கும் சக்தியையும் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வழியையும் எம்மிடம் ஒப்படைத்துள்ளார். நாங்கள் அவர்களுக்கு உதவுவது அவரது திட்டம். அதை அவர் விரும்புகிறார். அவ்வாறு செயற்படும்போது நமக்கே நாம் உதவுவதாக எம்மை மேலும் ஆசீர்வதிக்கிறார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

# மரியன்னையின் ஆண்டுக்கான மேய்ப்புப்பணி மடல் – 9ஆம் பக்கத் தொடர்ச்சி

- திருச்சபையில் மரியியல் தொடர்பான விவிலிய மற்றும் இறையியல் அடிப்படைகளை கண்டறியும் விசேட கருத்தரங்குகளையம், கற்றல் நிகழ்வுகளையும் ஒழுங்கு செய்தல்.
- மரியாள் தொடர்பாகவும், திருச்சபையின் வாழ்விலும், மீட்பு வரலாற்றிலும் அவரின் பங்களிப்பு தொடர்பாகவும் கத்தோலிக்க படிப்பினைகளின் சில அம்சங்களில் பரப்பப்படும் தப்பபிப்பிராயங்களை மாற்றியமைக்க கையேடுகள், துண்டு பிரசுரங்கள் வெளியிடல்.
- செபமாலையின் மேன்மை தொடர்பாக கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஆய்வுக் கட்டுரைகளையும், துண்டுப்பிரசுரங்களையும் விசேட விதமாக அருளாளர் இரண்டாம் அருள் சின்னப்பர் வெளியிட்ட "கன்னிமரியாளின் செபமாலை" எனும் அப்போஸ்தலிக்க மடலின் அடிப்படையில் வெளியிடல்.
- மரியாள் தொடர்பாக திருத்தந்தையர்களின் வெளியீடுகளான ஆறாம் சின்னப்பரின் "மரியாளின் பக்தி" மற்றும் அருளாளர் இரண்டாம் அருள் சின்னப்பரின் "மீட்பரின் தாய்" போன்றவற்றையும் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்க ஏட்டின் திருச்சபை பற்றிய கொள்கை திரட்டின் கடைசி அத்தியாயத்தையும், கத்தோலிக் திருச்சபையின் மறைக்கல்வி போன்றவற்றையும் சுருக்க கையேடுகளாக வெளியிடல்.

## 4) உயர்மறைமாவட்ட திருவழிபாட்டு அப்போஸ்தலிக்கப் பணி

மரியாளின் ஆண்டுடன் தொடர்புபட்ட நிகழ்வுகளுக்கான திருவழிபாட்டு கொண்டாட்டங்களை கருத்தில் கொண்டு உயர்மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக் குழுவானது உயர்மறைமாவட்ட எல்லா மரியன்னை பக்தி நிகழ்வுகளிலும் பாடக்கூடிய மரியன்னை தொடர்பான புதிய பக்தி பாடலொன்றையும், இலட்சினையொன்றையும் தயார் செய்தல். சமூக தகவல் தொடர்பு அப்போஸ்தலிக்க பணியுடன் இணைந்து பக்தி பாடல்களடங்கிய இறுவட்டுக்களை வெளியிடலாம். மரியன்னை தொடர்பான ஆழமான பக்தி பாடல்கள் மற்றும் பாடல்களை இயற்றுவதற்கான போட்டியொன்று ஒழுங்கு செய்யப்படலாம்.

- மரியன்னை தொடர்பாக திருச்சபை படிப்பினைகளிலிருந்தும், விவிலியத்திலிருந்தும் எடுக்கப்பட்ட மேற்கோள்கள் அடங்கிய பதாதைகள் பங்குகளில் உபயோகிப்பதற்காக தயார்செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்படல்.
- பங்கு மட்டங்களிலும், குடும்பங்களிலும் உபயோகப்படுத்தக்கூடிய செபமாலை, மறையுண்மைகள், தொடர்பான தியான செபங்கள், தியானங்கள் வெளியிடப்படல்.
- இவ்வாண்டு தொடர்பான அங்குரார்ப்பன வைபவங்களை பங்கு ரீதியில் குருமுதல்வர்களின் துணையுடனும் பாடசாலை மட்டங்களில் உயர்மறைமாவட்ட கல்விச் சேவைகள் இயக்குனருடனும் இணைந்து ஒழுங்கு செய்தல்.
- இவ்வாண்டு கொண்டாடப்பட வேண்டிய மரியன்னை தொடர்பான விசேட தினங்களை உள்ளடக்கிய கையேடொன்றை அல்லது துண்டுபிரசுரங்களை அக்கொண்டாட்டங்களுக்காக வரையறைகள் அடங்கலாக தயாரித்தல்
- துணை ஆயர்களினதும், குருமுதல்வர்களினதும் ஒருங்கிணைப்பாளர்களினதும் உதவியுடன் கொழும்பு உயர்மறைமாவட்ட மடு திருயாத்திரையை ஒழுங்கு செய்தல். குருக்கள், துறவிகள், பொதுநிலையினர், கல்வியாளர்களை உள்ளடக்கிய மரியாளுக்கான மாநாடொன்றை ஒழுங்கு செய்தல்.
- உள்நாட்டு முகவர் சேவைகளோடு இணைந்து சாதாரண விசுவாசிகளுக்கும் பயணிக்கக் கூடிய குறைந்த செலவில் லூர்த்து பதிக்கான திருயாத்திரை ஒன்றை ஒழுங்கு செய்தல்

மன மாற்றத்திற்கான தேவ அன்னையின் அழைப்பிற்கேற்ப பங்கு தந்தையர்களுடையவும், விசுவாச உயிரூட்டல் குழுவினுடைய உதவியுடன் திருவருகைக்காலம் மற்றும் தபசு காலங்களையும் பயன்படுத்தி ஒப்புரவு அருட்சாதனத்திற்கு விசுவாசிகளை அழைத்தல் அடிக்கடி நற்கருணை உட்கொள்ளும் அனைவரும் ஒப்புரவு அருட்சாதனம் பெறாமல் இருப்பது கவலைக்குரிய இடமாக இருக்கின்றது. கிறிஸ்துவின் திரு உடலையும், இரத்தத்தையும் பெற்றுக் கொள்வதற்கு அருள் நிலையில் இருப்பதற்கான அவசியத்தை உணர்த்த வேண்டும். மேற்கூறியவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்டமொன்றை ஆரம்பித்தல்

## 5) உயர்மறைமாவட்ட கரிட்டாஸ் அமைப்பு

எலிசபெத்துடன் மரியாளின் சந்திப்பு, மரியாளின் புகழ்ச்சிப் பாடலின் பொருள், கானவூர் திருமண தம்பதியர் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொண்டுவர ஆண்டவர் மரியாளை அழைத்தது இவைபோன்ற நிகழ்வுகளை ஒருங்கே தியானிக்கும் போது, கொழும்பு உயர்மறைமாவட்ட கத்தோலிக்க சமூகம் ஏழைகளுக்கும், தேவையோடு இருப்போருக்கும் உதவுவது மரியாயின் ஆண்டு திட்டத்தின் அவசியமான காரணியாகவுள்ளது. மேலும் நீதி, சமாதானம், மனித மேம்பாடு மற்றும் படைப்பின் ஒருங்கிணைப்பிற்கான கொழும்பு உயர்மறைமாவட்ட ஆணைக்குழுவை பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட நான் அழைத்து நிற்கின்றேன்:

- சமுதாயத்தில் அடிமட்டத்தில் வசிப்போருக்கும், துன்புறுவோருக்கும் உதவும் மனப்பான்மையை ஏற்படுத்தும், சமூக அக்கறை நிகழ்ச்சித் திட்டங்களை பங்கு மட்டங்களில் ஒழுங்கு செய்தல்.
- கொழும்பு உயர்மறைமாவட்ட பங்குகளிலும், வடக்கின் பங்குகளிலுமுள்ள தமிழ், சிங்கள சமூகங்களுக்குமிடையிலும்; கத்தோலிக்கருக்கும் ஏனைய மதத்தினருக்குமிடையிலான பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்தும் நிகழ்ச்சி திட்டங்களை தயாரித்தல்.
- இதற்கு சமூக அக்கறை நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் கத்தோலிக்க திருச்சபையின் சமூகப் படிப்பினைகள் தொடர்பான தகவல்களை விசுவாசிகளுக்கு வழங்குவதற்கு
- தேவ அன்னைக்கு நன்றி பரிசாக பங்குகளில் வாழும் ஏழை எளியவருக்கு ஒரு சில வீடுகளை கட்டி அல்லது திருத்தி கொடுப்பதற்கு பங்குகளுக்கு ஊக்கமூட்டல்.
- இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு, பங்குகளிலுள்ள வின்சன் டி போல் மற்றும் செத்சரன குழுக்களை பயன்படுத்துவதன் மூலம், இவர்கள் பங்கு மட்டத்தில் உயிரூட்டும் நிகழ்வுகளுக்கு பாரிய பங்களிப்பை மேற்கொள்வார்கள்.

## 6) சமூக தொடர்பாடலுக்கான கொழும்பு உயர்மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பணி

மனித வாழ்க்கையில் தொலைக்காட்சி, வானொலி, அச்சு ஊடகம் மற்றும் இணையத்தளம் என்பவற்றின் தாக்கம் உயர்ந்து வருவதைக் கருத்திற் கொண்டு மரியாயின் ஆண்டு கொண்டாட்டங்களுக்காக விசுவாசிகளை ஊக்கப்படுத்துவதற்கு, இவ்வசதிகளை பயன்படுத்துவது அத்தியவசியாமானதொன்றாகவுள்ளது. எனவே சமூக தொடர்பாடலுக்கான உயர்மறைமாவட்ட ஆணைக்குழுவை பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுமாறு அழைத்து நிற்கிறோம்.

- மரியாயின் ஆண்டு தொடர்பாக ஏனைய அப்போஸ்தலிக்க பணிகளால் ஒழுங்கு செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேவையான உதவிகளை நல்க வேண்டும்.
- கத்தோலிக்க விசுவாசத்தில் மரியாயின் பங்களிப்பு தொடர்பாக கொழும்பு உயர்மறைமாவட்ட கத்தோலிக்க சமூகத்தை ஊக்கப்படுத்துவதற்கு அவசியமான செயற்திட்டமொன்றை தீர்மானிக்க வேண்டும்.
- இது தொடர்பாக பத்திரிக்கை, ஆக்கங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தயாரிக்க முன்வரவேண்டும்.
- இவ்விசேட ஆண்டில் மரியன்னைக்கு ஒரு நன்றி பரிசாக ஒரு வானொலி நிலையம் ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பங்களை தேடி கண்டடைய முயலவேண்டும்.

## 7) உயர்மறைமாவட்ட குடும்பப் பணி

இங்கு குறிப்பிடப்பட்ட அனைத்து நிகழ்வுகளிலும் மிக முக்கியமான பங்கு கத்தோலிக்க குடும்பங்களுக்கு இருப்பதை நாம் அறிவோம். கூடிச் செபிக்கும் குடும்பம் ஒற்றுமையாய் கூடி வாழும் என்பது வெளிப்படை உண்மையே. ஆகவே இவ்வருடத்தில் எமது உயர் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து கத்தோலிக்க குடும்பங்களும் மரியன்னைக்கு காணிக்கையாக குடும்பச் செபமாலை செபிப்பதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்த வேண்டும். அனைத்துக் குடும்பங்களும் அவர்களுடைய ஆன்மீக புதுப்பித்தல் மற்றும் குடும்ப ஒற்றுமைக்காக செபிக்க வேண்டும். குடும்ப பணியகம் இதை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

மேலும் உயர் மறைமாவட்ட விவிலியப் பணியகத்தோடு சேர்த்து ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பமும் திருவிவிலியம் ஒன்றை வைத்திருக்கவும், அதை வாசித்து, தியானித்து செபிக்கவும், திருச்செபமாலையின் மறையுண்மைகளைத் தியானித்து செபிக்கவும், விசுவாசத்தில் வளர்ந்து ஆண்டவருக்காக அர்ப்பணத்தில் ஊன்றவும், ஒருவருக்கொருவர் மற்றும் சகோதர சகோதரிகளுடன் அன்புறவில் வளரவும் தேவையான செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். குடும்பமாக திருச்செபமாலையை தினமும் செபிக்கும் பழக்கத்தை குடும்பங்களில் நிலைநிறுத்துவதையே குடும்பப் பணியகம் தலையாய கடமையாகச் செய்தல் அவசியமாகும்.

மரியாயின் ஆண்டுக்கான இந்த வேலைத்திட்டங்களின் வெற்றி பெரும்பாலாக பங்குத் தந்தையர்கள் மற்றும் உதவிப் பங்குத் தந்தையர்கள் அல்லது பாடசாலை மற்றும் பணித்தள தலைவர்களின் கையில் இருப்பதை நாம் அவதானிக்கலாம். ஆகவே பங்குத் தந்தையர்களே, துறவற சபைகளின் தலைவர்களே, பாடசாலைகள், கல்லூரிகள், இறையியல் கழகங்கள் மற்றும் ஏனைய பணித்தள குருமார்களே இதை நன்குணர்ந்து உங்களது மந்தையின் விசுவாச வாழ்வை வளமாக்கி மரியன்னைக்கான ஆன்மீகத்தில் அவர்களை ஆழமாக்கி, வளர்த்தெடுக்க உங்களை அழைத்து நிற்கின்றேன்.

உண்மையான மரியன்னைக்கான ஆன்மீகம் கிறிஸ்துவை ஒருபோதும் தள்ளிவைப்பதில்லை. மாறாக அவரண்டை எம்மை கொணரும் ஆன்மீகமாக இருப்பதை நாம் வலியுறுத்திக் கூறவேண்டும். ஏனெனில் மரியன்னையே தன் வாழ்வில் இறைவன் மனுவுருவான மாபெரும் மறை நிகழ்ச்சி நியமமாகிட இடமளித்தார். ஆகவே அவரோடு ஒன்றினையும் போது அவரிடமிருந்து மனுவுரு எடுத்து கிறிஸ்துவின் பால் ஈர்க்கப்படுகிறோம் என்பதே பொருத்தமாகும். ஆகவேதான் திருத்தந்தை 6ஆம் பவுல் இவ்வாறு கூறுகின்றார்: "பரிசுத்த கன்னி" மரியாவைப் பற்றிய கத்தோலிக்க சத்தியங்களை நாம் அறியும்போது கிறிஸ்துவினதும், திருச்சபையினதும், மறையுண்மைகளை நாம் புரிந்துகொள்வதற்கான திறவுகோலாக அது அமைகின்றது" (21 கார்த்திகை 1964).

ஆகவே பங்குத் தந்தையர்களே, இம்மரியாயின் ஆண்டை நன்கு பயன்படுத்தி எமது கத்தோலிக்கரிடையே மீட்புத் திட்டத்தில் மரியன்னையின் தவிர்க்கமுடியாத முக்கியமான பங்கையும், ஆன்மீக மகிழ்ச்சி மற்றும் மீட்புக்கான அவர்களின் தேடலில் மரியாவினது முக்கிய இடத்தையும் விளங்கிக் கொள்ளும் முகமாக பல நிகழ்ச்சிகளை பங்குகளில் முன்னெடுத்துச் செல்லுமாறு பரிந்துரைக்கிறேன். இதன்மூலம் அவர்களது மரியன்னை மீதான பக்தி வளரட்டும். எனவே மரியன்னை பற்றிய படிப்பினைகள் இறையியல் அடிப்படையில் அமைந்த பிரசுரங்களை, இறுவட்டுக்களை (CD,DVD) மக்களிடையே பகிர்ந்தளிக்க முயற்சி செய்யுங்கள். விசேடமாக குடும்ப செபத்தையும், மேலும் வட்டார ரீதியாக செபமாலை செபிக்கும் பழக்கத்தையும் ஊக்கப்படுத்துங்கள். அத்தோடே ஒப்புரவு அருட்சாதனமான பாவசங்கீர்த்தனத்தையும் தொடர்ச்சியாக செய்யும் பழக்கத்தையும் ஊக்கப்படுத்தவேண்டும். மரியாளின் திருநாட்களை சிறப்பித்தல் மற்றும் திருப்பயணங்களை மேற்கொள்ளுதல் உயர்மறைமாவட்டத்தால் ஒழுங்கு செய்யப்படவுள்ள திருப்பயணங்களிலும், விசேட நிகழ்வுகளிலும், மக்களைப் பங்குபற்றச் செய்ய வேண்டும். குடும்ப ஒற்றுமைக்காக தினமும் செபிக்கும் பழக்கத்தை உருவாக்கவும், ஏழை எளியவர்கள் பால் அக்கறை கொண்டு சமூக மாற்றத்தை கொணரவும். சமாதனத்தை கட்டியெழுப்பவும், உரையாடலில் ஈடுபடவும், தூண்டி விடுங்கள். இவ்வாறாக மரியாயின் ஆண்டு நிறைவுப் பரிசாக ஆண்டவருக்கு பிரமாணிக்கமான வாழ்வுக்கான தீர்மானத்தை மரியன்னையிடம் ஒப்புவிக்க முழு மூச்சுடன் செயற்படுவோம்.

இவ்வருடத்தில் எமது குழுமங்களினது விசுவாசத்தை வளர்ப்பதில் அக்கறையோடு செயற்படுவதின் ஊடாக குருகுலத்தின் குருக்கள் அனைவரும் நல்லதொரு பரிசினை அன்னைக்கு உவந்தளிக்க முற்படுவோம். அதாவது உங்கள் தேவாலயங்களை அழகுபடுத்துங்கள். குடும்பங்களை தரிசியுங்கள். திருவழிபாட்டை அக்கறையுடனும், அன்புடனும் நிறைவேற்றுங்கள். ஏழைகளுக்கு உதவுங்கள், நம் நல்லாயனாம் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி நல்ல அன்பான மேய்ப்பர்களாக பணியாற்றுங்கள்.

இம்மேய்ப்புப் பணி மடலை திருத்தந்தை 16ஆம் பெனடிக் பாப்பரசரின் செபத்துடன் முடிக்க முனைகிறேன்.

**"தூய மரியாயே, இறைவனின் தாயாரே, உலகிற்கு உண்மையான ஒளியாக இறைமகனாம் இயேசுவைத் தந்தீரே, இறைவனின் அழைப்பிற்கு உங்களை முழுமையாகத் தந்து அவருடைய நன்மைத்தனத்தின் சுனையாக திகழ்ந்திரே, அம்மா இயேசுவை எங்களுக்கு காட்டும், அவரிடம் எங்களை அழைத்துச் செல்லும், அவரை அறிந்து அன்பு செய்ய எங்களுக்கு கற்றுத்தாரும் அவ்வாறாக நன்மைத்தனத்திற்காக ஏங்கும் இவ்வுலகில் நாங்களும் உண்மையான அன்பைப் பொழிபவர்களாகவும், உயிர்தரும் நீரைக் சுரப்பவர்களாகவும் மாறுவோமாக. உமது மகன் மீதான ஆழ்ந்த விசுவாசம் எம்மில் பெருக எங்களுக்காக மன்றாடி உதவி புரிந்தருளும். அதனால் நாங்கள் உம்மையும், உம்மோடு சேர்ந்து அவர் ஆரம்பித்த திருச்சபையையும் அன்பு செய்வேமாக" ஆமென்.**



✝ அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித்
கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்.

கன்னிமரியாளின் பிறந்தநாளான புரட்டாதி 8ம் திகதி 2013 அன்று கொழும்பு, இலங்கையில் வைத்து தரப்படுகிறது.




# வயதான பெண்ணுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் பண உதவி



இத்தாலியின் வெனிஸ் நகரில் வாழும் ஒரு வயதான பெண்ணுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அண்மையில் உதவி செய்தது ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. வெனிஸ் நகரில் வாழும் 80 வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண், நோயுற்று மருத்துவமனையில் இருந்த தன் கணவனைக் காணச் செல்லும் வழியில் பேருந்தில் அவரது "பர்ஸ்" பறிக்கப்பட்டதையும், அதன் விளைவாக தான் 54 யூரோக்களை இழந்ததையும் ஒரு மடலில் திருத்தந்தைக்கு எழுதியிருந்தார். அந்தப் பெண் வாழும் பகுதியில் உள்ள பங்குக் கோவிலின் தந்தை Goovanni Antiazzi அவர்களுக்கு திருத்தந்தையின் தர்மப் பணிகளை ஏற்று நடத்தும் பேராயர் Konrad Krajewshi அவர்கள் மடல் ஒன்றை அனுப்பி, அதில் 200 யூரோக்கள் மதிப்புள்ள காசோலையும் அனுப்பி அந்தத் தொகையை அந்தப் பெண்ணுக்குத் தரும்படி சொல்லியிருந்தார். திருத்தந்தையின் இந்தப் பரிவை கண்ட பங்குத்தந்தையும், அந்தப் பெண்ணும் ஆனந்த அதிர்ச்சியுற்றதாக செய்திகள் கூறுகின்றன.

அண்மையில் லாம்பதூசா தீவுக்கருவே நீரில் மூழ்கி காப்பாற்றப்பட்ட ஒவ்வொருவருக்கும் திருத்தந்தையின் பெயரால் 300 யூரோக்கள் அனுப்பப்பட்டன என்றும், அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் நாட்டையோ அல்லது வேறு உறவுகளையோ தொலைபேசியில் தொடர்பு கொள்ள அவர்கள் ஒவ்வொருவருக்கும் தொலைபேசி "கார்"களையும் திருத்தந்தை அனுப்பியிருந்தார் என்று Mail Online என்ற ஆங்கில நாளிதழ் கூறியுள்ளது. ஜுன் மாதம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு பரிசாக வழங்கப்பட்ட Harley Davidson இருசக்கர வாகனத்தை அவர் ஏலத்தில் விட்டு அந்தத் தொகையைக் கொண்டு வீடற்றோருக்கு விடுதி ஒன்றை கட்டும் நிதியைத் தொடக்க திருத்தந்தை திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## இந்தியாவில் அதிகரிக்கும் குழந்தைத் திருமணங்கள்




இந்தியாவின் பீஹார் ஜார்கண்ட மாநிலங்களின் கிராமப் பகுதிகளில் குழந்தைத் திருமணங்கள் அதிகரித்து வருவதாக அரசு - சாரா அமைப்புகள் கூறுகின்றன.

மேலும் தமிழகத்தின் கோவை மாவட்டத்திலும், கடந்த மூன்று ஆண்டுகளாக குழந்தைகள் திருமணம் அதிகரித்து வருவதால், இது குறித்து பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த மாவட்ட சமூக நலத்துறை திட்டமிட்டுள்ளது. உலகளவில், இந்தியாவில்தான் அதிகப்படியான குழந்தை திருமணம் நடப்பதாக ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நல அமைப்பான "யுனிசெப்" தெரிவித்துள்ளது. 18 வயது நிறைவடையாத ஒரு பெண்ணுக்கும் 21 வயது நிறைவடையாத ஓர் ஆணுக்கும் திருமணம் செய்து வைக்கப்படுவது, குழந்தைத் திருமணம் எனப்படுகிறது. இந்தியாவில் 48 விகிதமான பெண்களும் 18 வயது நிறைவடைவதற்கு முன்பே திருமணம் செய்யப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது "குழந்தைகள் திருமணம் தடுப்பு சட்டம் 2006இன் படி குற்றம். 18 வயது நிறைவடையாத பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளும் ஆண்மகன் மட்டுமன்றி, இத்திருமணத்தை நடத்திய அனைவரும் குற்றவாளிகளாகக் கருதப்படுவர்.

## "வத்திக்கான் தொலைக்காட்சி மையம் திருச்சபையை மக்களுக்கு எடுத்து செல்ல வேண்டும்"

### - திருத்தந்தை பிரான்சிஸ் -

CTV என்ற வத்திக்கான் தொலைக்காட்சி மையத்தின் பணி, நற்செய்திக்கும் திருச்சபைக்குமான சேவை என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

வத்திக்கான் தொலைக்காட்சி மையம் நிறுவப்பட்டதன் முப்பதாவது ஆண்டு விழாவுக்கென செய்தி அனுப்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த பத்தாண்டுகளில் தொழில்நுட்பம் மிக வேகமாகப் பயணம் செய்துள்ளது என்றும், இதற்கேற்ப உலகளாவிய சமூகத் தொடர்பில் நற்செய்தியின் கூறுகளும் அளிவிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

உப்பும் ஒளியும் உலகை வளப்படுத்தி ஒளிர்விப்பதுபோன்று ஊடகத் துறையும், இயேசு கிறிஸ்துவின் ஒளியைத் தாங்கிச் சென்று மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமெனவும் கூறினார் திருத்தந்தை.

வத்திக்கான் தொலைக்காட்சி மையம், இன்றைய உலகில் திருச்சபையின் போதனைகளை உடனுக்குடன் அறிவித்து வருகின்றது என்று முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் கூறியதை நினைவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இம்மையத்தின் பணி திருச்சபையின் பணி, திருச்சபைக்கும் நற்செய்தி அறிவிக்கும் பணி என்பதை மறவாமல் இருக்கவும் கேட்டுக்கொண்டார். திருத்தந்தை முத்திப்பேறு பெற்ற 2ஆம் ஜோன்போல் அவர்களின் ஆர்வத்தால் 1983ஆம் ஆண்டில் வத்திக்கான் தொலைக்காட்சி மையம் உருவாக்கப்பட்டது.

## குடும்பத்தை உறுதியாக வாழ வைப்பது செபமே

### – திருத்தந்தை

செபமே ஒரு குடும்பத்தை உறுதியாக வாழ வைக்கும், குடும்பமாய்ச் செபிப்பது மிக எளிதான ஒரு முயற்சி என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குடும்பங்களுக்கு கூறினார். நடைபெறும் நம்பிக்கை ஆண்டின் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக அக்டோபர் 26,27 ஆகிய நாட்களில் அகில உலகக் குடும்ப விழா ஒன்று திருச்சபையின் குடும்பப் பணி அவையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் திருத்தந்தை வழங்கிய மறையுரையில், குடும்பம் செபிக்கிறது, குடும்பம் தன் நம்பிக்கையைப் பேணுகிறது, இறைவனிடம் வேண்டக் கோவிலுக்குச் சென்ற பரிசேயர், வரிதண்டுபவர் என்ற உவமையை (லூக் 18:9-14) எடுத்துக்காட்டாக கூறியத் திருத்தந்தை, பரிசேயரின் வேண்டுதல் தற்பெருமையில் தோய்ந்திருந்ததால், இறைவனை நோக்கி மேலெழ முடியாமற்போயிற்று என்றும் வரிதண்டுபவர் எழுப்பிய பணிவான "மன்றாட்டு" முகில்களை ஊடுருவிச் சென்று, ஆண்டவரை அடைந்தது (சீராக் 35:17) என்றும் கூறினார். குடும்பமாகச் சேர்ந்து உணவருந்தும்போது, "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே" போன்ற எளிமையான செபத்தைச் சொல்வதையும், குடும்பத்தில் கணவன், மனைவி பெற்றோர் குழந்தைகள் என்று அனைவரும் ஒருவர் ஒருவருக்காகச் செபிப்பதையும் எடுத்துக் கூறினார். செபிப்பது மிக எளிதான ஒரு பழக்கம். குடும்பங்கள் தங்கள் நம்பிக்கையை...

தொடர்ச்சி 15ம் பக்கம்

## வத்திக்கான் தொலைக்காட்சி மையத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவு விழா

வத்திக்கான் தொலைக்காட்சி மையத்தில் உள்ள காமிராக்களின் கண்கள் அன்பில் தூண்டப்பட்டவை என்று வத்திக்கான் வானொலியின் இயக்குனராகப் பணியாற்றும் அருள் பணியாளர் Ferderico Lombardi அவர்கள் கூறினார். முன்னாள் திருத்தந்தை முத்திப்பேறு பெற்ற 2ஆம் ஜோன்போல் அவர்களின் ஆர்வத்தால் 1983ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 22ஆம் திகதி நிறுவப்பட்ட வத்திக்கான் தொலைக்காட்சி மையம், அக்டோபர் 18 அன்று தன் முப்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. இத்தருணத்தையொட்டி உரோம் நகரில் நடைபெறும் ஒரு விழாவில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், இத்தாலியின் அரசுத்தலைவர் Giorgio Napolitano அவர்களும் வழங்கும் செய்திகள் வாசிக்கப்படும். இவ்விழாவில் வெளியிடப்படவிருக்கும் "புனித பேதுருவின் காமிராக்கள்" என்ற பெயர்கொண்ட நூலின் இந்த மையத்தின் முன்னாள் இயக்குனராக கடந்த ஆண்டு வரை பணியாற்றிய அருள்பணியாளர் Lombardi அவர்கள், தன் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார். இந்த மையம் பதிவு செய்த அனைத்துக் காட்சிகளிலும், மறைந்த திருத்தந்தை 2ஆம் ஜான்போல் அவர்களின் இறுதி நாட்களை தொலைக்காட்சி காமிராக்கள் பதிவு செய்தது தன்னை ஆழமாகப் பாதித்து என்றும், பேசமுடியாத நோயுற்ற நிலையிலும் திருத்தந்தை 2ஆம் ஜான்போல் அவர்கள் கலந்துகொண்ட விழாக்களில் அவரது பிரசன்னத்தை காட்டிய காமிராக்கள் திருத்தந்தையின் அன்பை பறைசாற்றின என்றும் அருள் பணியாளர் LOmbardi அவர்கள் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## மருத்துவக் குறிப்புகள்



### சிறு நீரகக் கல்லடைப்பு kidney Stone



சிறு நீரகத்தில் படியும் நுண்ணிய கனி உப்புப் படிவம் மெல்ல மெல்ல வளர்ந்து கல்லாக உருவெடுக்கிறது. சிறு நீரகக் கல் ஒன்று உருவாவதற்கு பல மாதங்கள் அல்லது வருடங்கள் ஆகலாம்.

சிறு நீரகக் கல் அசையத் தொடங்கும்போது சிறுநீரகத்தின் மேற்பக்கமாக இந்த நோய் 20 வயதுக்கும், 40 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்களில் கூடுதலாகக் காணப்படுகிறது.

சிறுநீரகக் கற்களில் 90 சதவீதமானவை கல்சியம் உப்புக்களால் ஆனவை. இடுப்பு வலி, முதுகு வலி போன்றவை இதன் அறிகுறிகள். நடு முதுகில் ஆரம்பிக்கும் வலி அடி வயிறு, கவடு, இன உறுப்புக்கள், ஆகியவற்றுக்கும் பரவக் கூடும். இறைச்சி, மீன் சீஸ் போன்ற புரதச் சத்து நிறைந்த உணவைச் சாப்பிடுபவர்களுக்கு சிறு நீரகக் கற்கள் தோன்றும் அபாயம் இருப்பதாக வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். உணவில் புரதம் கூடுதலாக இருக்கும்போது சிறு நீரில் யூரிக் அமிலம், கல்சியம், பாஸ்பரஸ் போன்றவற்றின் அளவுகள் அதிகரிக்கின்றன. அதன் விளைவாக சிலருக்கு சிறுநீரகக் கற்கள் உருவாகின்றன. சிறுநீரகக் கற்கள் கரைய வாழைத்தண்டு சாறை காலையும், மாலையும் தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். ஓமத்தைக் குடிநீர் செய்து பாலுடன் கலந்து குடித்து வரவும். தொடர்ந்து இவ்வாறு குடிக்கலாம். அதுவும் அளவுக்கு மீறக் கூடாது.

கெரட் கிழங்கை தவிர்க்கவும், கொய்யாப்பழம், தக்காளிப்பழம் தவிர்க்கவும், அல்லது விதைகளை நீக்கி உண்ணவும். சிறு நீரகப் பையில் சுண்ணாம்பு படிவதனால் கற்கள் உருவாகும். எனவே தண்ணீர் நிறையக் குடிக்க வேண்டும். சிறுநீரை அடக்கக் கூடாது.

## பிளாஸ்டிக் தவிர்ப்போம்



ஒரே தண்ணீர் பாட்டிலை தொடர்ந்து பயன்படுத்தக் கூடாது. தரம் மிக்க பாட்டில்களை பயன்படுத்துங்கள். சுடு நீரை பிளாஸ்டிக் பாட்டிலில் ஊற்ற வேண்டாம். (One use) பாட்டிலை ஒரு முறைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். தரமற்ற தண்ணீர் போத்தல்களால் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு, பல நோய்கள் வருகின்றன

## 02ம் பக்கம் – தமிழியல் விருது...

இந்நிகழ்வானது மட்டக்களப்பு மகாஜனா கல்லூரி மண்டபத்தில் 20.10.2013 அன்று கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரினா பிரான்சிஸ் தலைமையில் இடம்பெற்றது. ஆசிரியரின் முதலாவது வெளியீடான "பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்" நூலானது வடகிழக்கு மாகாண சாகித்திய விருதினையும் இலங்கை இலக்கியப் பேரவை விருதினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவரை ஊடகவியல் சார்ந்த பத்து நூல்கள் அருட்தந்தையை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளது.

## 02ம் பக்கம் – அன்பின் சங்கமம்...

பின்னர் வரவேற்புரை இடம் பெற்றது. தொடர்ந்து ஆயர் அவர்களின் சிறப்புரையும் மலர் வெளியீட்டு விழாவும் டிலாசால் புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெற்றது.

தொடர்ந்து அன்றைய திருப்பலியை ஆயர் நிறைவேற்றி வைத்தார். ஆயரின் மறையுரையில் ஆன்மீக வாஞ்சையோடு ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாழ வேண்டும். அத்துடன் இறைசித்தத்திற்கு உளந்திறக்க முன்வருவது எமது இன்றியமையாத கடமை என்ற செய்தியும் எமக்கு விடுக்கப்பட்டது.

அன்றைய நிகழ்வானது சிறந்த ஆன்மீக அறிவுரைகள், இறைவார்த்தை பகிர்வு, சாட்சியப் பகிர்வு என்பவற்றால் அலங்கரிக்கப்பட்டு மாலை மங்கும் வேளையில் இனிதே நிறைவுற்றது.

எமது சங்கத்தின் ஆன்மீக வழிபாடானது ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மோதரை டிலாசால் புனித சூசையப்பர் ஆலயத்தில் மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை இடம்பெறுகிறது. பங்குப்பற்றி பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## 03ம் பக்கம் – புனிதர்கள்...

மோசேயின் வேண்டுதலால் இஸ்ராயேல் மக்கள் பசி பற்றாக்குறை, கொடிய நோய், எதிரியின் தாக்குதல் போன்றவற்றிலிருந்து காப்பற்றப்பட்டனர் என விடுதலைப்பயண நூலில் பார்க்கிறோம். தூய பேதுருவும் பவுலும் போதனைப் பணியின்போது சிறையுண்ட போதெல்லாம் ஆதித்திருச்சபை அவர்களுக்காகச் செபித்தது (திப 12:15). உங்களுள் ஒருவன் நோயுற்றிருந்தால் அவன் திருச்சபையின் மூப்பர்களை அழைக்கட்டும். அவர்கள் ஆண்டவர் பெயரால் அவன்மீது எண்ணெய் பூசி, அவனுக்காகச் செபிப்பர். விசுவாசமுள்ள செபம் நோயாளியைக் குணமாக்கும் (யாக் 5:14-15). இவ்வாறாக புனிதர்களின் பரிந்துரையால் எண்ணற்ற நன்மைகள் கிடைத்ததை திருச்சபை வரலாறு நமக்குக் காட்டுகிறது.. புனிதர்களை நம்புவோம். புனிதர்களின் பரிந்துரையை வேண்டுவோம்

## 04ம் பக்கம் – 41 ஆண்டுகள்...

அதன்பின் தற்போது அவர் ஓய்வுபெறப்போகும் பாடசாலையான கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் வித்தியாலயத்தில் 2003 - 2013ஆம் ஆண்டு வரை பணிசெய்து 41 ஆண்டுகள் பணிவாழ்வை 2013. 10. 20 அன்று இனிதே நிறைவு செய்தார். இவ்வாசிரியை மனைப்பொருளியலை பிரதான பாடமாகவும், கத்தோலிக்க திருமறை, தமிழ்மொழி, சுகாதாரம், தொழில்நுட்பக் கல்வி, வாழ்க்கைத் தேர்ச்சி ஆகிய பாடங்களை சிறப்பாக கற்பித்தமை குறிப்பிடத்தக்கது. எப்போதும் கடமையுணர்வுடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றும் இவர் பதட்டப்படாமை, முறையிடாமை, புறங்கூறாமை, போன்ற சிறந்த ஆளுமை பண்புகளையும், செபத்தில் பற்றுறுதியும், இறைவிசுவாசமும், எளிமையும், தாழ்ச்சியும், நிறையப்பெற்று அனைவருக்கும் முன்னுதாரணமாய் திகழ்ந்து, ஆசிரியப் பணியின் மகத்துவத்தை தம் வாழ்வின் மூலம் உணர்த்திய ஒரு ஆசிரியப் பெருந்தகை ஆவார். சிறந்த கற்பித்தல் திறனும் பழகுவதற்கு இனிமையானவரும் பிறருக்கு ஆலோசனையும் அறிவுரையும் வழங்குவதில் முன்னின்று உழைத்த இவரின் பணிவாழ்வை தொடங்கி வைத்த உன்னத கடவுள், அவரின் பணிவாழ்வின் நிறைவிலும் அதன் இனிய நிகழ்வுகளின் மகிழ்வினை கழிக்கும் ஓய்வு காலத்திலும் அவரையும் அவரது குடும்பத்தையும் நிறைவாக ஆசீர்வதித்து உடல், உள, ஆன்ம நலன்களையும் நீண்ட ஆயுளையும் வழங்கி காக்க வேண்டுமென்று மனப்பூர்வமாக வேண்டி இதுவரை காலமும் தன் இனிய உழைப்பால் பிறரை மகிழ்வித்த அவரை இதயப்பூர்வமாக வாழ்த்தி அவரின் பணியை பாராட்டுகின்றோம்.

## விற்பனைக்கு

547 பாடல்கள் அடங்கிய "இறைவனைப் புகழ்வோம்" எனும் பாடல் நூல் புதுச்செட்டித்தெரு புனித வியாகுல அன்னை ஆலயத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு பிரதியின் விலை 200/= விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும் 0112330909

(மொத்தமாக வாங்கினால் விலைக்கழிவு உண்டு)

(N 4160)

## மணமகன் தேவை



கம்பஹா றோமன் கத்தோலிக்கம், 5'2" சிறந்த தோற்றமுள்ள தொழில், மற்றும் 50 இலட்சம் பணமுள்ள, பத்து வருடத்திற்கு முன் திருமணம் முடித்து ஐந்தே மாதங்களில் சட்டப்படி விவாகரத்துப் பெற்று, மீண்டும் ஒரு திருமணத்திற்கு திருச்சபையின் அனுமதியையும் பெற்ற குழந்தைகள் இல்லாத மகளுக்கு வெளிநாட்டில் அல்லது, ஏனைய பிரதேசங்களில் இருந்து (குழந்தைகள் உள்ள / இல்லாத மணமகனை பெற்றோர் மற்றும், சகோதரரான அருட்தந்தை எதிர்பார்க்கின்றார்கள்.

**கத்தோலிக்க அச்சகம் கொழும்பு - 08.**

(N 4070)

## 08ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1930 | 2005 |
| 12 | 10 |
| 20 | 26 |

## திரு. ஜோசப் மைக்கல்

(முகத்துவாரம் கொழும்பு - 15)

**உயிர்த்தெழுதுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார் (யோவான் 11:25)**

நேசமிக்க துணைவரே, அன்பு அப்பா, நீங்கள் எங்களிடமிருந்து பிரிந்து, எட்டு ஆண்டுகள் உருண்டோடினும், காலங்கள் மாறினும் நீங்கள் என்றும் எங்களுடனே : எம் வாழ்விற்கு ஒளியை தந்து, உம் கடமையை சரிவர நிறைவேற்றிய தந்தையே தைரியமூட்டும் உங்களது வார்த்தைகள் இன்றும் எங்கள் செவிகளில் எதிரொலிக்கின்றன. சவால்களுக்கு முகங்கொடுத்த உங்கள் முகம் இக்கணமும் எம் மணக்கண்முன் நின்று உங்களை என்றுமே மறக்க முடியாது செய்கிறது. இறையரசிற்காக, புதுவாழ்வு (புபுதுவ) இயக்கத்தினூடாக செய்த பணி என்றுமே மறக்க முடியாதது. கடந்துபோன எட்டு ஆண்டுகளும் உங்கள் மலர்ந்த முகமும் அலை அலையாய் எழும் நினைவுகளும் எம் நெஞ்சை நெருடுகின்றன. நாம் இந்த இழப்பை தாங்கிக் கொண்டது நீங்கள் எம் ஆண்டவர் இயேசுவின் முன்னிலையில் இருப்பதை நன்கறிந்தபடியினாலாகும். உங்கள் இவ்வுலக வாழ்விற்கு நன்றி கூறும் விதமாக திருப்பலியிலும் செபங்களிலும் மன்றாடி நிற்கிறோம்.

**அப்பா உங்களது விண்ணக வாழவிற்காக செபிப்பது.**
**அன்பு மனைவி, பிள்ளைகள் உட்பட**
**குடும்பத்தில் உள்ள அனைவரும்**

(N 4154)

## 12ம் பக்கம் – உத்தரிப்பு ஸ்தலம்

நாம் அவர்களுக்கு உதவுவதை தேவதாயார் விரும்புகிறார். மரியன்னை உத்தரிக்கும் இடத்திலுள்ள ஆன்மாக்களை தேற்றுவதற்கு துடிப்பதைப் போல எந்தவொரு இவ்வுலக அன்னையும் தம் இறக்கும் பிள்ளைகளை தேற்ற முன்வருவதில்லை என்றால் மிகையாகாது. ஏனெனில் அவர்களை பரலோக வீட்டிற்கு கொண்டு சேர்ப்பதில் அவர் பெருமகிழ்ச்சி அடைகிறார். மேலும் ஒரு ஆன்மாவையாவது உத்தரிக்கும் இடத்திலிருந்து மீட்கும்போது சொல்லிலடங்கா மகிழ்ச்சியை மாதா பெறுகிறார். அத்தூய ஆன்மாக்கள் ஆயிரம் மடங்காக எமக்கு திருப்பித்தரும்

உண்மையிலேயே மீட்க்கப்பட்ட அத்தூய ஆன்மாக்களின் மகிழ்ச்சியையும் நன்றிக் கடனையும் வார்த்தையில் கூற முடியாது. அதனால் அவர்களுக்கு உதவியவர்களுக்கு மிகப் பெரிய உதவி காரியங்களைச் செய்ய இறைவனிடம் பரிந்து பேசுவர் என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

பொலஞ்ஞாவின் புனித கத்தரீன் பின்வருமாறு கூறுகிறார், அதாவது "நான் புனிதர்களிடமிருந்து பெரிய உதவிகளைப் பெற்ற போதும் அதைவிடப் பெரிய உதவிகளை தூய ஆன்மாக்களின் மூலமாக பெற்றுக் கொண்டேன்" என்கிறார்.

உத்தரிப்பு ஆக்கினையிலிருந்து மீண்டவர்கள் பரலோக முக தரிசனத்தை பெற்றுக் கொண்டதும் மறக்காமல் எல்லை கடந்த விதமாய் அவர்களுக்கு தமது நன்றிக்கடனைச் செலுத்துவர். கடவுளின் சிம்மாசனத்தின் முன் தெண்டனிட்டு வணங்கும் போதெல்லாம் தமக்கு உதவியவர்களையும் மறக்காமல் நினைவு கூருகின்றனர். அவர்களது செபங்களால் தமது நண்பர்களை ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்து தீமைகளிலிருந்தும் அவர்களை விடுவிக்கின்றனர். மேலும் நாங்களும் அவர்களோடு பரலோக வீட்டை அடையுமளவும் எமக்காக பரிந்து பேசுவதை அவர்கள் நிறுத்திவிடுவதில்லை.

கத்தோலிக்கர் இந்த உண்மையை நன்கு உணர்ந்தால் உத்தரிப்பு ஸ்தல தூய ஆன்மாக்களுக்காக உதவிடுவதில், செபிப்பதில் கருத்தாய் இருப்பீர்கள்.

## 04ம் பக்கம் – சிறு பருவத்தில்...

இது இன்றைக்குள்ள பல இளைஞர்கள் கண்முன்னால் நிற்கும் மிகப் பெரும் சவால். அப்படி சுய உருவாக்கத்தை (Self - formation) செயல்படுத்த முடியாத இளைஞர்கள் திசைமாறிப் போய்விடுவர். தங்கள் வாழ்க்கைப் படகை பாறைமீது மோதி சிதைத்து மூழ்கிப்போய்விடுவர். பெற்றோரின் கண்டிப்பான அல்லது அதிகமான செல்லத்தால் பல குழந்தைகள் தங்களின் உண்மையான வளர்ச்சியில் முன்னேற்றம் காண்பதில்லை. இவ்விரு கடினமான மனநிலை கொண்ட பெற்றோர்களிடமிருந்து வரும் இளைஞர்கள் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். அப்படிப்பட்டவர்கள் தங்களைப் பாதித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு பிரச்சினையையும் எடுத்து அதைப்பற்றி சுய ஆய்வு செய்து பிறகு அதனை எதிர்கொள்ள வேண்டும். அப்படி எதிர்கொண்டால் வெற்றி உண்டு.

### தந்தையற்ற குடும்பம் (தோபி 1:20)

வளமான வாழ்வும் சுமூகமான சூழலும் மன்னர் எனமேசரின் இறப்போடு முடிந்துவிட்டது. அவருடைய மகன் சனகெரிபு ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் எல்லாம் தலைகீழாக மாறி நாட்டில் கொடுமை அதிகரித்தது. சனகெரிபு பல யூதர்களைக் கொன்று விதியில் எறிந்தான் (1:17-18). தோபியாவின் தந்தையோ அவர்களை எடுத்து நல்லடக்கம் செய்தார். இதனை கேள்வியுற்ற சனகெரிபு மிகவும் சினமுற்றார். அவரைக் கொல்லத் தேடினார். எனவே தன் உயிரைக் காத்துக்கொள்ள தோபித்து தலைமறைவானார் (1:19). தன்னுடைய குடும்பத்தையோ நினிவே நகரிலே விட்டுச் செல்லவேண்டிய அவலத்திற்கும் தள்ளப்பட்டாார். இதுவரை அவர் உழைப்பாலும் வியாபாரத்தாலும் நல்வாழ்க்கையாலும் பெற்ற சொத்துக்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்டன. தோபியாவும் அவருடைய தாயும் வீதியில் அநாதைகளாக விடப்பட்டனர். தந்தையின் ஆதரவற்ற நிலையில் அக்குடும்பம் விடப்பட்டது. என்னே பரிதாபம்!.தந்தையின் அல்லது ஆதரவற்ற நிலையில் வாழும் குழந்தைகள் / இளைஞர்கள் இக்குடும்பத்திடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய உயர்ந்த மதிப்பீடு ஒன்று உண்டு. அதாவது எதை இழந்தாலும் கடவுளையும், கடவுளுடைய வழிமுறையையும், நல்லொழுக்கத்தையும் அவர்கள் விட்டுவிடவில்லை. அவர்களை ஆதரிப்பதற்கு கடவுள் சிலரை அனுப்பியிருந்தார். இவர்களுடைய துன்பமும், வேதனையும் நாற்பதே நாள்களில் மாற்றம் கண்டது. அதாவது நாற்பதே நாள்களில் சனகெரிபு கொலை செய்யப்பட நினிவே நகரில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சியினை புதிய ஏற்பாட்டில் இயேசுவின் சீடர்கள் தூய ஆவியைப் பெறுவதற்கு முன் யூதர்களுக்குப் பயந்து வாழ்ந்ததையும், தூய ஆவியைப் பெற்றவுடன் மகிழ்ச்சி அடைந்ததையும் தொடர்புப் படுத்திப் பார்க்க இயலும். (காண் திப 1) உறுதியோடு இருக்கக் கூடியவர்கள் இந்த உலகுக்கு பாடம் கற்றுத்தர முடியும் என்பதை இதன் வழியாக அறிகிறோம். தோபியாவும் அவரின் தாயும் தந்தை இல்லாத சூழலில் வழிதவறிச் செல்லவில்லை. மாறாக கடவுளுடைய கட்டளைகளில் உறுதியாயிருந்தனர். கடவுளுடைய வழிமுறையை இறுகப் பற்றிக்கொண்டனர். இவர்கள் இன்று வழிதவறிப்போகும் பல பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் சிறந்த மாதிரியாவர். உறுதியோடு இருக்கக்கூடியவர்கள் ஒளியைக் காண்பார்கள். உயர்வைக் காண்பார்கள். பிறருக்கும் சிறந்த எடுத்துக்காட்டாய் திகழ்வார்கள்.

## 14ம் பக்கம் – குடும்பத்தை உறுதியாக....

பேணி வளர்ப்பதன் வழியாக இவ்வுலகிற்குத் தலைசிறந்த சாட்சிகளாக வாழ முடியும் என்பதையும் திருத்தந்தை கூறினார்.

உங்கள் அனைவருக்கும் ஒரு வீட்டுப்பாடம் தர விழைகிறேன் என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உங்கள் குடும்பங்களில் உண்மையான மகிழ்ச்சி நிலவுகிறத? என்ற கேள்விக்கு நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே விடை தேட வேண்டும் என்பதே நம் அனைவருக்கும் வழங்கும் "வீட்டுப்பாடம்" என்று கூறினார்

## 1ம் பக்கம் – மறையாசிரியர்கள்

தமிழ் பிரிவில் முறையே 674,414,193 மறையாசிரியர்களும் சிங்களப் பிரிவில் முறையே 1550, 879, 531 மறையாசிரியர்களுமாக மொத்தம் 4241 இப் பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ளனர்.

பரீட்சார்த்திகள் குறித்த நேரத்திற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னராகவேணும் தமது பரீட்சை நிலையங்களுக்கு வந்த தமக்குரிய இடத்தை சரிபார்த்துக் கொள்ளவும்.

பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிப்பதற்கான அனுமதி பத்திரத்தையும் மறக்காமல் கொண்டுவரவும்.

## அமுத மொழிகள்

ஞானத்தின் மேல் நான் கூர்ந்தேன் என் இளமை முதல் அதைத் தேடினேன் என் வாழ்க்கைத் துணையாக எற்றுக்கொள்ள விரும்பினேன்.
(சா.ஞா 8:2)

ஞானம் இறந்த காலத்தை அறியும். எதிர்காலத்தை உய்த்துணரும். உரைகளின் நுட்பங்களையும், புதிர்களின் விடைகளையும் அறியும். (சா.ஞா 8:8)

ஞானத்துடன் கொள்ளும் உறவால், இறவாமை கிட்டும் அதனுடைய நட்புறவில் தூய மகிழ்ச்சி பிறக்கும். அதனுடைய உழைப்பால், குறைபடாத செல்வம் கொழிக்கும்
(சா.ஞா 8:18)

தற்பெருமையில் ஒருவர் எத்துணை நிறைவு உள்ளவராய் இருந்தாலும் உம்மிடமிருந்து வரும் ஞானம், அவருக்கில்லையேல் அவர் ஒன்றும் இல்லாதவராய்க் கருதப்படுவார்.
(சா.ஞா 9:6)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர். திருமதி. ச. மேரி றோசலின்

அன்னை மடியில்
1949 ✝ 07 ✝ 09

ஆண்டவன் அடியில்
2013 ✝ 10 ✝ 02

அம்மா !
ஆகாரம் கொடுத்தாய் நீ ஆகாயம் காட்டி
ஆளுமை கொடுத்தாய் நீ அன்பு காட்சி
அ.ம.தி.க்கு கொடுத்தாய் நீ சிலுவை காட்டி
அடுத்து,
என்ன கொடுப்பாய் உன் கடவுளைக் காட்டி
படைத்தவனோடு என்றும் வாழ வேண்டுகின்றோம்

ஆறாத்துயர்களில்....
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவுகள்

தகவல் : அருட்பணி. பிலிப் றஞ்சனகுமார் [அ.ம.தி] யாழ்ப்பாணம்

(N 4160)



# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

## உங்களுக்கான பல விசேட சேவைகள்!

### கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

| | 1½" x 1" single | 3" x 1"Double | 5" x 1" Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

ஞான ஒளி பத்திரிகையின்
விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 7750/=<br>15500/=<br>31000/= | 7000/=<br>14000/=<br>28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 11500/=<br>23000/=<br>46000/= | 10000/=<br>20000=<br>40000/= |

வர்ணம் + 25 %

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு
சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 7750/=<br>15500/=<br>31000/= | 7000/=<br>14000/=<br>28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 11500/=<br>23000/=<br>46000/= | 10000/=<br>20000=<br>40000/= |

வர்ணம் + 25 %

### தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com






அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை பீ.சீ.ஜீ எட்ரிச் றொட்ரிக்கோ, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்